12 8

12 feb 1927

JL
M15A3
N27·12·8
187478

ber. 1927. பிரபவ௵ புரட்டாசி௴
REGD. No. M. 1190.



# ஆனந்த போதினி





# ANANDA BODHINI

Vol. 13. பொருளடக்கம். No. 3.

OFFICE OF THE REGISTRAR ... 2 OCT 1927 MADRAS

பக்கம்

1. கடவுள்வணக்கம்-பொருளடக்கம் ... 98
2. தெய்வபலமும் மனிதபலமும் ... 99
3. பாபு சுரேந்திரநாத் பனர்ஜி ... 103
4. தென்னாட்டில் தேசீயம் ... 105
5. வேதாந்த சாரசங்கிரக வசனம் ... 107
6. ஆரியசித்தார்...சைவசித்தா... 109-112
7. பௌர்ணமிபூஜை வினாவிற்குவிடை 114
8. ஸ்ரீ ஆண்டாள் ... 115
9. ஆத்திசூடி உதாரணக் கதைகள் ... 117
10. உரைமணிமாலை ... 120
11. மாதரும் குடும்பமும் ... 121
12. தனுஷ்கோடி கஸ்டம் ஆபீஸ் ... 122
13. கைத்தொழில் (காகித உற்பத்தி) 124
14. ஸ்ரீமதி சாரதாமணிதேவியார் ... 126
15. பூர்வகால நாடகங்கள் ... 127
16. பசுவின் சாணம் ... 129
17. விசூவியஸ் எரிமலை ... 133
18. அறிஞரின் அமுத மொழிகள் ... 135
19. வைத்தியம் (ஆசமன்னியம்) ... 137
20. இளைத்ததேகக்காரர் சாப்பிடுபவை 139
21. விநோதம்-நாவல் 140-141
22. வர்த்தமானம்-பஞ்சாங்கம் 143-144



# "ஆனந்தபோதினி"

## சந்தா விபரம்.

| | | ரூ. அ. ப. |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, பர்மா ஸிலோன் ... ... | 1—0—0 |
| | பிநங், ஸிங்கபூர், தென் ஆப்ரிகா, பசரா, மெசபொடோமியா முதலிய வெளி நாடுகளுக்கு | 1—4—0 |
| நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை விலை | | 0—2—0 |
| சென்ற வருடங்களுடைய தனிச் சஞ்சிகை விலை | | 0—3—0 |

**ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.**

---

(1) சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் பூரணமாய்ப் பெயரை எழுதி யனுப்பவேண்டும்.

(2) சந்தா தொகையை முன்னுடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் கட்டியாவது பெற்றுக்கொள்ளவேண்டும். எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆடிமுதல்தான் கணக்கு வைக்கப்பட்டு ஆடிமாத சஞ்சிகை முதல், சேர்த்தனுப்பப்படும்.

☞ (3) சஞ்சிகை வி. பி. யில் வரவழைப்போர் ரிஜிஸ்டர் சார்ஜ 2-அணு வோடு (18-4-1921 முதல் மணியார்டர் கமிஷன் 10-ரூபா வரையில் 2-அணு வாகையால்) வி. பி. கமிஷன் 2-அணு வி. பி.க்கு தபால் சார்ஜ் 0-0-6. ஆக 0-4-6 அதாவது 5-அணு சேர்த்து ரூபா 1-5-0 கட்டி வி. பி. யைப் பெறவேண்டும். மணியார்டர் அனுப்பினுல் 1-2-0 மட்டுமேயாகும். ஆதலால் முன்னுடி மணியார்டர் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம். இதைக் கவனிக்கவும்.

(4) யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் அவர்கள் அம்மாதம் 15-ம் தேதிவரையில் பார்த்து அதற்குமேல் அதே தமிழ்மாத முடிவிற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும். பிறகு தெரிவிப்போர் கிரயமனுப்பிப் பெறவேண்டும்.

(5) இடம் மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புது விலாசத்திற்கு வந்து சேரும்வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை யறிவிக்கவேண்டும். இன்றேல் அடுத்த சஞ்சிகை பெரும்பாலும் பழைய விலாசத்திற்கே போய்விடும். அதற்கு நாம் பொறுப்பாளியல்ல.

(6) சந்தா நம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. அத்தகைய கடிதங்களால் நேரிடும் தவறுதல்களுக்கு நாம் பொறுப்பாளி யல்ல. பதிலை விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபாற் பில்லையாவது அனுப்பினுலன்றி விடை யளிக்கப்பட மாட்டாது.

(7) வியாசங்களை எழுதுவோர் சுத்தமாக இலக்கணப் பிழையின்றித் தங்கள் உண்மைப் பெயருடன், மததூஷணை, பிறர் தூஷணை, துரைத்தன விரோதம் முதலியவையின்றியும், பொது ஜனங்கள் விரும்பக்கூடியனவாகவும் எழுதவேண்டும். வியாசங்களைத் திருத்தவும், அவற்றிலுள்ள சில விஷயங்களைக் குறைக்கவும், கூட்டவும், அவற்றைப் பிரசுரிக்காமல் நிறுத்தவும் நமக்கு பாத்தியமுண்டு. எவ்வித காரணத்தைக்கொண்டும் வியாசங்கள் திருப்பியனுப்பப்படமாட்டா. வியாசக்காரர் அபிப்பிராயங்கட்கு நாம் பொறுப்பாளியாகோம்.

---

| | | | |
|---|---|---|---|
| Life Subscription ஜீவிய சந்தா | இந்தியா, பர்மா, சிலோன் | ரூபா | 15—0—0 |
| | அன்னிய நாடுகளுக்கு | ,, | 20—0—0 |

---

நா. முனிசாமி முதலியார், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,
நெ. 6. வெங்கடேச மேஸ்திரி தெரு, தபால் பெட்டி நெ. 167, மதாஸ்.

கடந்த வருடங்களைக்காட்டிலும் இவ்வருடப் பஞ்சாங்கத்தில் அனேக விஷயங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**64** பக்கங்கள் கொண்ட

# பிரபவ வருஷத்திய

(நேத்திர ஜீவநக்ஷத்திராதி சாந்திர ஸௌரமான)

சர்வமுகூர்த்த

## "ஆனந்தபோதினி சுத்த திருக்கணித பஞ்சாங்கம்"

நமது வானசாத்திரக் கணிதத்திலும், ஆங்கில வானசாத்திரக் கணிதத்திலும் திறமை வாய்ந்த, ஸ்ரீமான் C. G. இராஜன் பி. ஏ. அவர்களால் (B. A. Mathematics) இப் பஞ்சாங்கம் சுத்தமாகக் கணிக்கப்பட்டது.

சிறுவர்களும், ஸ்திரீகளும் சுலபமாக அறிந்து கொள்ளும்படி திதி நக்ஷத்திரங்களின் நாழிகையோடு, மணி நிமிஷமும் பக்[illegible] குறிக்கப்பட்டிருக்கின்றன. இதில் பஞ்சாங்கத்தில் இ[illegible] வேண்டிய, நேத்திரம், ஜீவன், அமிர்தாதி யோகங்கள், [illegible] சக்கிரம், அகஸ் இராசியிருப்பு, விராதி விசேஷங்கள், தசாபுக்தி, கிரக சாரங்கள், சதவிதப்பொருத்தங்கள், சகுனங்கள் முதலியவைகளோடு நாயகர்கள் பலன் முதலிய வேறு விஷயங்களும் சேர்க்கப்பட்டு சோதிடர்களும் மற்றவர்களும் எளிதில் அறிந்து கொள்ளும்படி சோதிட பொது விஷயங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவ் வருஷம் விசேஷமாக ஜோதிடர்களுக்கு மிகவும் உபயோகமாயுள்ள நட்சத்திர ஓரை, சந்திர உதையம், கிரக உச்சம், நவக்கிரக நிராயண சுத்த ஸ்புடமும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 2.

6-பஞ்சாங்கங்கள் 0—8—0. 12-பஞ்சாங்கங்கள் 0—14—0.

தனி பஞ்சாங்கம் வேண்டுவோர் விலையோடு தபால்கூலி ½ அணா சேர்த்து தபால் பில்லைகளாக அனுப்பவும்.

25 பஞ்சாங்கங்கள் வேண்டுவோர் ரூ. 1—10—0 முந்தி அனுப்பிவிட்டு தங்களுக்கு சமீபமான ரயில்வே ஸ்டேஷன் தெரிவித்தால் பார்சலாக அனுப்பிவிடுவோம். ரயில் சார்ஜ் நீங்கள் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

வியாபாரிகளுக்கு, "**இந்த ஆனந்தபோதினி பஞ்சாங்கம் விற்கப்படும்**" என்று பெரிய எழுத்தில் போர்டும் அனுப்பப்படும்.

☞ **எமது பஞ்சாங்கமும் புஸ்தகங்களும் எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.**

6-ம் நெ. 28-ம் நெ. பஞ்சாங்கங்கள்.

தனலக்ஷ்மி கம்பெனியாரால் வெளியிடும் 28-ம் நெ. 6-ம் நெ. பஞ்சாங்கங்களும் எமது அச்சுக்கூடத்திலேயே நல்ல விதத்தில் பதிப்பிக்கப்பெற்றிருக்கின்றன.

பஞ்சாங்கம் 1-க்கு அணா ½

6-பஞ்சாங்கம் [illegible] 12 பஞ்சாங்கம் அணா 4.

**ஆனந்தபோதினி [illegible], தபால்பெட்டி நெ. 167 மதராஸ்.**

15 MAR 1927
18478

யங்களும் இப்புத்தகத்தில் மட்டுந்தான் சரியான முறையில் அமைந்திருக்கின்றன. இப்புத்தகத்தால் ஆங்கிலம் கற்றுக்கொண்டவர்கள் முறைப்படி பத்து வருஷங்கள் இங்கிலீஷ்படித்துத் தேர்ந்தவர்களைப்போலவே விளங்குவார்கள்.

இது, தமிழ்மாத்திரம் தெரிந்து ஆங்கிலம் தெரியாமலிருக்கும் சகலருக்கும் பயன்படக் கூடியதாயினும், முக்கியமாக மணியகாரர், கர்ணம், வில்லேஜ் முன்சீப் முதலிய கிராம வேலைக்காரருக்கும் சிலோன் தோட்டங்களிலிருக்கும் கங்காணிமார்கட்கும், மலேயா, பர்மா, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்ளிலுள்ள மேஸ்திரிமார் களுக்கும், துரைமார்களிடம் வேலைசெய்யும் பட்லர், மேட்டி, கூச், ஆயான், பாய், தோட்டமேஸ்திரி, கோச்மேன் முதலியவர்களுக்கும், பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கும்,சிறுமிகட்கும், மற்ற பெண்கட்கும், இங்கிலீஷ்தெரியாத தனவந்தருக்கும் மிக்க உதவிசெய்யக்கூடியது. இன்னும் இங்கிலீஷ் தெரியாத கிராமவாசிகள் பலரும் இதனைப் படித்தால் இங்கிலீஷ் பேசவும், எழுதவும் தெரிந்துகொள்வார்கள். முடிவாகக் கூறுமிடத்துத் தமிழர்கள் எல்லோருமே இதனை வாங்கிப்படிக்கத் தொடங்குவார்களாயின் இங்கிலீஷ் தெரியாதவர் எவருமே யிராரென்று திண்ணமாகச் சொல்லலாம்.

## இத்தகைய பெரும்பயன்தரும் புத்தகம் எப்பொழுதும் கிடைப்பதருமை.

### ஆர்டருக்கு முந்துங்கள்!

### பின்பு கிடைக்கவில்லையே என்று வருந்தாதீர்கள் !!

இரண்டாம்பதிப்பின் பிரதிகள் பல்லாயிரக் கணக்கில் பிரசுரித்தும் செலவாய், இருப்பில் கொஞ்சம் பிரதிகளே யிருக்கின்றன. அவையும் வெகு சீக்கிரத்தில் செலவாய்விடும். வேண்டுவோர் உடனே எழுதி விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம். தவறின் மூன்றாம் பதிப்பு வெளிவந்தபிறகே கிடைக்கும்.

**இதன் விலை ரூபா 1—8**

**ஆனந்தபோதினிச் சந்தாதாரர்களுக்கு ரூபா 1—4.**

சந்தாதாரர்கள், தங்கள் சந்தா நம்பரைத் தெரிவித்தால் மாத்திரமே ஷை விலைக்குப் புத்தகம் கிடைக்கும்.

## அர்ஜுனலிங்கும், சுந்தரும்.

(ஸ்ரீமாந் - ஆரணி - குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.)

இது, இப்போது புதிதாக வெளிவந்திருக்கும் நாவல். இதில் இரண்டு துப்பறியும் நாவல்கள் அடங்கி யிருக்கின்றன. இவற்றுள், துப்பறியும் நிபுணர்கள் சாமார்த்தியமாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதோடு ஒரு குரங்கும் கிளியும் மர்மமான கொலைக்கேஸை வெளியாக்குவது விநோதமாயிருக்கும்; குற்றம் வெளியாகியும் குற்றவாளி விடுதலை யடைதல் ஆச்சரியமாயிருக்கும்.

இதன் விலை அணா 2.

## திருவாசகம்.

திருவாதவூரடிகள் திருவாய்மலர்ந்தருளிய இம் மெய்ஞ்ஞான நூல் மாணிக்கம்போலும் மதிக்கத்தகுந்த பாடல்களைக் கொண்டிருத்தலால் திருவாதவூரடிகளுக்கு "மாணிக்க வாசகர்" என்னும் சிறப்புப் பெயர் சாக்ஷாத் சிவபெருமானால் அளிக்கப்பட்டது. ஞான பக்திகளை யூட்டவல்லது. நாவுக்கும் செவிக்கும் தெவிட்டாத இனிமையைத் தரவல்லது. எழுத்துப் பிழையின்றி கிளேஸ் பாக்கட் சைஸில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1.



## சூடாமணி நிகண்டு 12-தொகுதி.

இது, தமிழுக்கு அஸ்திவாரமான நூல். தமிழ் இலக்கியம் கற்றுக்கொள்வார்க்கு மிக அவசியமானது. இதில், தேவர், மனிதர், நாகர், அசுரர், காந்தருவர் முதலிய உயர்திணை வர்க்கத்தாரின் சகல பெயர்களின் விவரங்களும், செயல்களின் பெயர் விவரங்களும் இன்னும் உலக சராசரப் பொருள்களின் பெயர் குணம் செயல் முதலிய விவரங்களும் மிக்க விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவ்விலக்கிய நூலைச் சிரத்தையுடன் கற்றுக்கொள்பவர் எத்தகைய பாடல்களுக்கும் அர்த்தம் சொல்லும் வல்லமையைப் பெறலாம்; கவிகள் செய்யவும், நூல்கள் இயற்றவும் திறமை யடையலாம். இலக்கணம் கற்றுக்கொள்ளும் புத்தித்தெளிவை யடையலாம். இது, தமிழ் இலக்கிய இலக்கணம் கற்கும் மாணவர்க்கு ஒரு பேராசிரியன் போன்றதாகும். தமிழ் படிக்க விரும்பும் ஒவ்வொருவர் கையிலும் இது அவசியமாக இருக்கவேண்டிய நூல்.

இதன் விலை ரூபா 1—8—0

## திருவிளையாடற்புராண வசனம்.

பதினெண்புராணங்களி லொன்றாகிய கந்தபுராணத்தில் சங்கரசங்கிதையில் சொல்லப்பட்ட திருவாலவாய் மகிமை என்கிற ஸ்ரீ சோமசுந்தரக்கடவுளின் திருவிளையாடல் அறுபத்துநான்கையும் 68-படலங்களாகவகுத்து விருத்தச்செய்யுட்களால் ஸ்ரீ பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற்புராணஞ் செய்தார். அதை யாவரும் எளிதிலுணர்ந்து நற்பயனடையுமாறு அதைத் தழுவி இவ்வசனம் எழுதப்பட்டிருக்கிறது. இதில் சமயாசாரிகள் நால்வரின் திருவுருவப்படங்களும், இன்னும் 64-ஐதீகப்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கடவுளின் திருவிளையாடல்களையும், மகிமைகளையும், தத்துவங்களையும், அவதார விஷயங்களையும், அறிய விரும்புவோர் இதனை வாசிக்கவேண்டியதவசியம். இதன் விலை ரூபா 2.

## ஞானக் கோவை.

சிவவாக்கியர், பட்டினத்து பிள்ளையார் சரித்திரம், ஷை முதலாவது கோயிற்றிருவகல், 2-வது கோயிற்றிருவகல், 3-வது கோயிற்றிருவகல், 4-வது கோயிற்றிருவகல், ஷையார் திருவேகம்பமாலை, ஷை திருத்தில்லை, ஷை திருச்செங்காடு, ஷை கைலாயம், ஷை பொது, ஷை வெண்பா, ஷை உடற்கூற்றுவண்ணம், ஷை திருவள்ளுவர் ஞானம், ஷை முதல்வன் முறையீடு, ஷை அருட்புலம்பல், ஷை இறந்தகாலத்திறங்கல், ஷை நெஞ்சொடு புலம்பல், ஷை பூரணமாலை, ஷை சட்டமுனி ஞானம், ஷை ஞானம், பத்திரகிரியார் சரித்திரம், ஷையார் மெய்ஞ்ஞானப் புலம்பல், பாம்பாட்டிச்சித்தர்பாடல்,இடைக்காட்டுச் சித்தர் பாடல், அகப்பைச்சித்தர் பாடல், குதம்பைச்சித்தர் பாடல்,கடுவெளிச் சித்தர் பாடல், சிவயோகசாரம், அகஸ்தியர் ஞானம் 9, ஷையார் ஞானம் 6, ஷை ஞானம் 16, அழுகணிச்சித்தர் பாடல், நந்தீஸ்வரர் பூஜாவிதி, இராம தேவர் பூஜாவிதி, கொங்கண நாயனர் வாலைக்கும்மி, உரோமரிஷி ஞானம், திருமூலநாயனர் ஞானம், கருவூரார் பூஜாவிதி, ஞானசர நூல் சாஸ்திரம், சிவானந்தபோதம், நிஜானந்தபோதம், நெஞ்சறிவிளக்கம், ஞானவேற்றம், ஞானரத்தினக் குறவஞ்சி, ஞானக்கும்மி, சுப்பிரமணியர் ஞானம், காயக்கப்பல், அகஸ்திய முனிவர் ஞானம் 13, வால்மீகர் சூத்திரஞானம் 16, சிவநாமாவளித் திரட்டு இவையாவும் இதன் கண் அடங்கியுள்ளன. இது உயர்ந்த காலிகோ பயிண்டுள்ளது. இதன் விலை ரூபா 1—4—0.

**காமவல்லி** காமலீலை நிறைந்தது, இன்பரசம் பொருந்தியது, பெண்களின் மாயஜாலத்தைவிளக்குவது. இதன் விலை அணா 8.

ஆனந்தபோதினி ஆபீஸ்,

# ஞானசெல்வாம்பாள் அல்லது
## இரண்டு சகோதரிகள் 5-பாகம்

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இது தான் மிகப் பெரியது. நூற்றுக்கு மேற்பட்ட பல அத்தியாயங்களையுடையது; "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத்தக்கது. கதை மிகப் பெரிதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் மேலும் ஆனந்தமாக முடிவு வரை சென்றுகொண்டே யிருக்கும். படிப்பவர்கள் இப்புத்தகத்தைக் கை விடாதபடி ஆகாரமுண்ணுங் காலத்திலுங்கூட விரித்தபடியே பார்த்துக் கொண்டு சாப்பிடும்படி அவ்வளவு இனிமை இந்நாவலில் அமைந்திருக்கின்றது.

கதாநாயகிகளாகிய ஞானம்பாள், செல்வாம்பள் என்ற இரண்டு சகோதரிகளும், தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருந்ததால் அடைந்த பல வகைத் துன்பங்களும், வஞ்ச நெஞ்சர்களாகிய படுமோசக்காரர்களால் நிரபராதிகளாகிய பலர் பெரிய பெரிய விபத்துக்களுக்குள் சிக்கி மீள்வதும், பஞ்சமாபாதகர்கள் அஞ்சாமல் நல்லோர்க்கியற்றும் சஞ்சலச் செயல்களும், நெஞ்சு திடுக்கிடும் விஷயங்களும், முடிவில் தீயோர் பல ஆபத்துகளில் சிக்கி அடியோடொழிவதும், நல்லோர் சுகமடைவதும், இன்னும் எண்ணிறந்த பற்பல அற்புத விஷயங்களும் இதில் அடங்கி யிருக்கின்றன.

நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 2 0 0
ஐந்தாவது பாகம் மாத்திரம் விலை ரூபா 1 10 0
ஐந்து பாகங்களும் சேர்த்து வாங்குவோருக்கு அவற்றின் விலை ரூ. 9 0 0

# கனகபூஷணம்.

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுது வராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். சிறுவர்களுக்கு வேண்டிய நீதிகளும் நற்புத்திகளும் இதில் நிறைந்திருக்கின்றன. இந்த நாவல் ஆதிமுதல் அந்தம் வரையில் மனதை முழுதும் கவர்ந்துகொள்ளக்கூடியது.

2-பாகம் இதன் விலை ரூபா 3 8 0

# அருணாசல புராணம் மூலமும், உரையும்
## 20-ஐதீகப் படங்களுடையது.

இது, பஞ்சபூதத்தலத்து ளொன்றாகிய திரு அண்ணாமலையின் மான்மியமடங்கியது; 14 சருக்கங்கள்கொண்டது; மூலமும் உரையும் உள்ளது; 20 ஐதீக திருவுருவப் படங்களுடன் வெளியாக்கப்பட்டிருக்கிறது. இதில் சமயாசாரியார்களின் தேவார திருவெம்பாவைகளும், கிரிப்பிரதட்சண விதிகளும், கார்த்திகை தீபச்சிறப்பும், குருநமச்சிவாயர் சரித்திரமும், அவர் அருளிச்செய்த அருணகிரியந்தாதி, அண்ணாமலை வெண்பா முதலியவைகளும், திருவருணையந்தாதி, திருவருணைக் கலம்பகம், சோணசைலமாலை, சோணாசலவெண்பா, உண்ணாமுலையம்மன் பதிகம், சதகம் முதலியனவும் சேர்க்கப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூ. 1-8-0.

தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

# அற்புதமர்மங்கள்

அல்லது

## ஆனந்தலிங்கின் அஷ்டஜெயங்கள்.

(ஸ்ரீமாந் - ஆரணி - குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.)

இது, மகா அற்புத மர்மங்களடங்கிய துப்பறியும் நாவல். இதில் எட்டு விதமான கதைகள் அடங்கியிருக்கின்றன. அந்த எட்டிலும் எப்பேர்ப்பட்ட யூகமுடையவர்களாலும் எவ்வித காரணத்தைக்கொண்டும், கண்டுபிடிக்க முடியாத அதியாச்சரியமான இரகசிய சம்பவங்கள் நிகழ்வதும், அவற்றை ஆனந்தலிங்கு அதிகப் பிரயாசையுடனும், வெகு சாமர்த்தியத்துடனும் கண்டுபிடித்து உண்மையை வெளியாக்கிக் குற்றவாளிகளைத் தண்டனைக்குள்ளாக்குவதும், நிரபராதிகளுக்குத் துணைபுரிவதும், சத்தியத்தை நிலைநிறுத்துவதும், படிப்பவர்க்கு மிக்க மனோற்சாகத்தையும், ஆனந்தத்தையும், அறிவு விளக்கத்தையும் உண்டாக்கித, உலகத்திலுள்ள மனிதவர்க்கத்தாரின் இயற்கைகளையும் நன்குவிளக்கிக்காட்டும். அவற்றுள் ஒன்றைக்காட்டினும் ஒன்று விசேஷித்த அற்புதமுடையதாகவே யிருக்கும். இதில் காட்டப்படும் ஆனந்தலிங்கின் அபூர்வச் செயல்களில் அவன், மரணவஸ்தையடைந்து ஐந்துநிமிஷத்தில் இறக்கப்போகிறவன்போல் நடித்து ஒரு கொலைகாரனைத் தன் வீட்டிற்குள்ளேயே கண்டுபிடித்துச் சிறைப்படுத்தும் செய்கையொன்றே படிப்பவர்களின் மனதைக் கவர்ந்துவிடும். இது இப்போதுதான் புதிதாக வெளிவந்திருக்கிறது. இதன் விலை ரூ. 1—12—0

# மாதவீ மாதவன் அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

இதில் கதாநாயகனாகிய மாதவன் ஆங்கிலத்தில் பி.எ., பி.எல்., பட்டம் பெற்றிருந்தும், கர்வம், தன்னலம், பொறாமை முதலிய இழிகுணங்கள் ஒரு சிறிதுமின்றித் தன்னடக்கம், தன்னலத்தியாகம், விவேகம், கருணை முதலிய குணங்களைப் பெற்று, ஆண்சிங்கத்துக்கு ஒப்பாய்விளங்குவதும், கதாநாயகியாகிய மாதவி, நற்குணங்கள், ரூபலாவண்ணியம் முதலியவைகளைத் தன்னகத்துக்கொண்டு விளங்குவதும் படிப்போர் உள்ளத்தில் ஆனந்தக்கிளர்ச்சியை உண்டாக்கும். நற்குணம், கல்வி முதலியவைகளால் ஒரே நிலையிலுள்ளவர்கள் எங்ஙனம் நடந்துகொள்வர் என்பதும் இதில் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. உண்மைக்காதல் யாதென்பதும், உண்மைக்காதலர்களின் நிலை எத்தகைத்து என்பதும் இப்புத்தகத்தில் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன. மாதவி, மாதவனுக்கும், தனசேகரப் பிரபுவுக்கும் எழுதிய கடிதங்களைக்கொண்டே அவளின் கற்புநிலை குன்றின்மேல் இட்ட விளக்குக்கு ஒப்பாம் என்பது பெறப்படும். முன்கோபத்தால் ஏற்படக்கூடிய தீமைகள் பலதேவர் சரித்திரத்தால் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன. நாகரீகம் மிகுந்துள்ள இக்காலத்தில் ரெயில்வேக் களவுகள் எவ்வளவு கம்பீரத்துடனும், பகட்டுடனும், வெளிவேஷத்துடனும் நடக்கின்றன என்பது விரிவாய்க் கூறப்பட்டுள்ளன. சில போலீஸ்காரர்களின் நடத்தைகளும் படிக்கப் படிக்கப் பரிதாபத்தை யுண்டாக்கும். தனசேகரப்பிரபு மாதவியை அடையக்கூடாமல், அவளுடைய தோழியைச் சரிப்படுத்தி அழைத்துக்கொண்டு சென்றதும் நகைப்பை விளைவிக்கும்.

2-பாகம் சேர்ந்தது. விலை ரூபா 2—0—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# 200 இருநூறு புத்தகங்கள் ஒன்றாய்ச் சேர்ந்த சில்லறைக் கோவை.

[தமிழ் நாட்டில், விநோதச் சில்லறைப் பாட்டுக்களால் பற்பல வகைகளில் முற்கால தற்கால பெரியோர்களால் செய்யப்பட்ட எல்லாச் சில்லறைப் புத்தகங்களும் இதில் அடங்கி யிருக்கின்றன.

விலை ரூ. **1—8—0**

ஞானிகள், வைத்தியர், மாந்திரீகர், ஜோஸியர், இல்லறத்தார், துறவறத்தார், விவசாயிகள், வியாபாரிகள், கைத்தொழிலாளர், ஜாலவித்தைக்காரர், நாடகக்காரர், தெய்வபக்தர்கள், விநோதபாடகர், சங்கீத வித்வான்கள், தமிழ் வித்வான்கள், பண்டாரங்கள், பிச்சைக்காரர், கலியாணப்பாட்டுப் பாடுவோர், தாலாட்டுவோர், அழுவோர், வண்டிக்காரர், பாரமிழுப்போர், சுமை சுமப்போர், மலையேறுவோர், கப்பல் பிரயாணஞ் செய்வோர், ரயில் பிரயாணஞ் செய்வோர், சில்லறை வேடக்காரர், தெய்வ பிரார்த்தனை செலுத்துவோர், ஆண்மக்கள், பெண்மக்கள், பாலர், விருத்தர், குமரர் முதலிய பற்பல வகுப்பாருக்கும் உபயோகமாம் அகவல்கள், பதிகங்கள், கும்மிகள், சிந்துகள், ஜாவளிகள், டப்பான்கள், தெம்மாங்குகள், அம்மானைகள், ஆனந்தக்களிப்புகள், தாலாட்டுகள், ஒப்பாரிகள், ஏலப்பாட்டுகள், எசல்கள், பதங்கள், கண்ணிகள், மாலைகள், குள்ளத்தாராப்பாட்டு, புருப்பாட்டு, கீர்த்தனைகள், சாவல் பாட்டு, முதலிய பலவிதமான பாடல்களாலாகிய அநேகம் அற்புத நூல்களே இதில் அடங்கி யிருப்பதால் இது எல்லோருக்கும் மிக அவசியமான புத்தகம். இதிலடங்கிய ஒவ்வொரு புத்தகமும் லெத்தோ படத்துடன் கூடியது. இத்தகைய நூற்களஞ்சியமான இப்புத்தகம் டிம்மி 16-பேஜ் சைசில் 1280-பக்கங்களுள்ளதாய் நல்லவிதத்தில் அச்சிடப்பட்டு அழகிய காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. இதற்கேற்பட்ட விலை மிகவும் குறைவு. இதிலுள்ள புத்தகங்களையெல்லாம் தனித்தனியாக வாங்குவதானால் ரூ. 4—0—0 நாலுக்கு மேலாகும்.

குணங்குடி மஸ்தான் சாகிபவர்கள்

திருவாய் மலர்ந்தருளிய

# திருப்பாடற்றிரட்டு.

இஃதோ ரருமையும் பெருமையும் வாய்ந்த வேதாந்த நூல். நாமரூபமின்றியே அன்பர்களிடும் நாம ரூபங்களை யேற்கவல்ல சுத்த நின்மல பரப்பிரம்மத்தைச் சமயோசிதப்படி பாடி வணங்கித் துதிக்கப்பெற்ற இன்பரசம் பொருந்திய பாடல்கள் இதில் பல அடங்கியிருக்கின்றன. கடவுள் விஷயமாக அனுசரிக்கவேண்டிய நிபந்தனையோடுகூடிய பாடல்களும் பல விருக்கின்றன. படிப்போர் கேட்போர் மனது இரும்பாயிருந்தாலும், இப்பாடல்கள் அம் மனவிரும்பைக் காந்தம்போல் கவரக்கூடிய அபார சக்தியுள்ளவை. மகாவித்வான் திருத்தணிகை சரவணப் பெருமாளையர், சிவயோகி ஐயா சுவாமி முதலியார் முதலிய பேரறிஞர்கள் இந்நூலாசிரியர்க்குச் சீடராயிருந்து இவருடைய பாடல்களை விஸ்தாரமாகப் புகழ்ந்து பாடியிருக்கின்றன ரென்றால் இதன் பெருமையை விரித்துப் பேசவும் வேண்டுமோ? இதன் விலை ரூ. 1.

உ

ஓம்

பரப்பிரஹ்மணேநம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

| தொகுதி 12 | அக்ஷயளு மாசிமீ கஉ<br>1927ளு பிப்ரவரிமீ 12உ | பகுதி 8 |
| --- | --- | --- |

## கடவுள் வணக்கம்.

உடல் குழைய வென்பெலா நெக்குருக விழிநீர்க
ளூற்றெண வெதும்பி யூற்ற
வூசிகாந் தத்தினைக் கண்டணுகல் போலவே
யோருறவு முன்னி யுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடியா டிக்கு தித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெ ழுந்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கூப்பி
வானேய வானி லின்ப
மழையே மழைத்தாரை வெள்ளமே நீடூழி
வாழியென வாழ்த்தி யேத்தும்
கடன்மடை திறந்தனைய வன்பரன் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளி யையோ
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. (1)

முகமெ லாங்கண்ணீர் முத்தரும் பிடச்செங்கை முகிழ்ப்ப
வகமெ லாங்குழைந் தானந்த மாகநல் லறிஞ
ரிகமெ லாந்தவ மிழைக்கின்ற ரென்செய்கோ வேழை
சகமெ லாம்பெற நல்லரு ளுதாமாச் சமைந்தோய். (2)

ஆராமை கண்டிங் கருட்குருவாய் நீயொருகால்
வாராயோ வந்து வருத்தமெல்லாந் தீராயோ
பூராய மாகவருட் பூரணத்தி லண்டமுதற்
பாராதி வைத்த பதியே பராபரமே. (3)

## அரும்பொருள் விளக்கம்.

1\. உயிர்களின் இகபர சுகங்களுக்கு இன்றியமையாத துணைக்கருவியாயுள்ளது அன்பேயாதலின், இறைவனிடத்தில் மெய்யன்பு பூண்டாரது ஒழுக்கத்தை இப்பாடல் விதந் தோதுகின்றது. காந்தமானது ஊசியைக் கண்டமாத்திரத்தில் அவ்வூசிக்கு இயக்கத்தை யுண்டுபண்ணுவதுபோன்று, இறைவனுடைய திருவருளை அடியார் முன்னிட்டவன்றே அவ்வருள் அவர்கட்கு அன்புமயமான துடிப்பை யுண்டாக்கிவிடுமென்பது வெள்ளிடை மலையாம்.

குழைய=வாட.

நெக்குருக=நெகிழ்ந்துருக.

ஓர் உறவும் உன்னி உன்னி = ஒப்பற்ற ஆத்ம பந்துவாகிய இறைவனை நினைத்து நினைத்து.

உள் நடுக்குற=உள்ளே நடுக்கமடையவும்.

பனிமதி முகத்திலே நிலவு அனைய புன்னகை = குளிர்ச்சியையுடைய சந்திரனிடத்தி லுண்டாகும் சந்திரிகையை யொத்த புன்சிரிப்பு.

ஆர்த்து ஆர்த்து=பலகா லாரவாரித்து.

மடல்=இதழ்கள்.

அவிழ்தல்=விரிதல்.

வானே=சிதாகாசமே.

கடல் மடை திறந்தனைய=கடலானது மடை (முகத்துவாரம்) திறந்தாற்போன்ற.

இத்தகைய அன்புடையார்க்கே இறைவன் எளிதிற் காட்சி யருளுவனென்பதாம். "பத்துடை யடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்" என்னும் பெரியார் அருண்மொழி இங்கு நோக்கத்தக்கது.

2\. உத்தம அறிவாளர் சதா இறைவனை நினைத்துக் கண்ணீர் பெருகக் கைகுவித்து மனமுருகி இன்பமயமா யிருத்தலையே தவமாகக் கொண்டனர்; அப்பேறு அடியேன் பெறவில்லையே யென்று ஆசிரியர் இப்பாடலில் வருந்துகின்றார்.

முகமெலாம்=முக முழுமையும்.

முகிழ்ப்ப=குவிக்க.

இகமெலாம்=இம்மை முழுவதும்.

என்செய்கோ=யாது செய்வேன்.

சகமெலாம்..........சமைந்தோய்=உலக மனைத்தையும் அளிப்பதற்காகச் சிறந்த அருளையே திருவுருகக் கொண்ட கடவுளே.

3\. உலகினுக்குக் காரணமாயுள்ள பஞ்சபூதமனைத்தும் சட மாகவினால் அவை தாமே காரியப்படா; இறைவன் திருவருட் பிரேரகத்தாலேயே அவனுடைய சந்நிதானத்தில் அவை தொழிலடைந்து பலவகையில் நிலையுற்று விளங்கும்; ஆகவே 'அருட்பூரணத்தி..........பதியே பராபரமே' என்றார்.

ஆராமை=அறியாமை; பூராயம்=விசித்திரம்.

---

# ஆனந்தபோதினி

அக்ஷய௵ மாசி௴ கடை

## பேதைமை.

பேதைமை யென்பது யாதெனில்,

"பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்"

என்ற திருக்குறளிற் கூறியபடி, வறுமை, பழி, பாவம் முதலிய கேடுகளை யுண்டாக்கத்தக்க செய்கைகளைக் கைக்கொண்டு, செல்வம், புகழ், தர்மம் முதலியவற்றை யுண்டாக்கும் காரியங்களைக் கைவிடுதலாம். இத்தகைய குணமுடையார், குற்றியை மனிதனென்றும், இப்பியை வெள்ளியென்றும் கருதுவார்போல், தீமையை நன்மையென்று கருதும் இயல்புடையவராதலின், பயனற்ற பிறப்புடையவராவர். இவர்கள் இத்தகைய விபரீத வுணர்ச்சியால், மனிதர்க்கு நன்மைதருதற்கு இன்றியமையாதனவாகப் பெரியோர்களால் வகுக்கப்பட்ட நூற்கருத்துக்களின் உண்மையை உணராமல் அவற்றை வெவ்வேறு வழிகளிற் றிருப்பித் தங்கள் மனப்போக்குக்குத்தக்க அபிப்பிராயங்களைக்கொண்டு இடர்ப்பாடுறுவர்; நன்மை தருபவைகளையெல்லாம் கேடுதருபவைகளாக்கிக்கொள்வர்; இம்மை மறுமைப் பயன்களை யிழப்பர்; பலராலும் இகழப்படுவர். இவர்கள், கல்வியைக் கற்றாலும், அறிஞரோடு பழகினாலும், இவர்களுக்குப் பிறப்பிலேயே இத்தகைய பேதைமைக்குணம் அமைந்திருப்பதனாலே நல்லுணர்ச்சி யுண்டாவதில்லை. இவர்களுடைய இயற்கை யறியாமையானது கல்வியையும் பேதைமையானவழியிற் றிருப்பி, அறிவையும் மழுக்கமடையச்செய்து, செய்கைகளையும் பயனற்ற செயல்களாகவே மாற்றிவிடுகின்றது. இத்தன்மை, தற்கால நாகரீகமயக்கத்தால் மனிதரிடம் தோன்றியிருக்கின்றது. அத்தோற்றத்தால் உண்

டாகும் விபரீதச் செயல்களோ மிக்க விநோதமானவை; அறிஞர் வெறுக்கத்தக்கவை; உலகச்சிறப்பை வேரறக் களையக்கூடியவை; தம்மைச் செய்வார்க்கு இம்மையில் இகழ்ச்சியையும், மறுமையில் தீக்கதியையும் உண்டாக்கக்கூடியவை. எனினும், அவற்றை அநேகர் விருப்பத்துடன் செய்தே வருகின்றனர். எவ்வாறெனில்,

நம்பெரியார், மனிதர் நற்கதியடைதற்கு ஆலயசேவை, தீர்த்த யாத்திரை முதலியவற்றை ஏற்படுத்தி அவற்றிற்குரிய திருவிழாக்களையும் வகுத்திருக்கின்றனர். இவற்றின் முக்கிய நோக்கமாவது மனிதர் தேவசிந்தனையோடுசென்று, தீர்த்தஸ்நானஞ்செய்து, தெய்வத்தைத்தொழுது, கடவுள் கிருபைபெற்று வரவேண்டுமென்பதே. பெரும்பான்மையோர் தங்கள் பேதைமையால் இவ்வுண்மைக் கருத்தினையுணராமல், தீர்த்தயாத்திரைக்கோ, சுவாமி தரிசனைக்கோ செல்லும்போது, புறப்படுவதற்கு முந்தியே, "நாம் இன்ன இன்ன இடங்களில் இறங்கவேண்டும்; இன்ன இன்ன சாப்பாடு செய்யவேண்டும்; முதல்நாள் மோர்க்குழம்பு வைக்கவேண்டும்; அங்கே நல்ல பிஞ்சுக்கத்தரிக்காய் கிடைக்கும்; இரண்டாநாள் கத்தரிக்காய்ச் சாம்பார் வைக்கவேண்டும்; மூன்றாநாள் சர்க்கரைப்பொங்கல் செய்யவேண்டும்; நடுவில் இன்ன இன்ன இடங்களில் காப்பி பலகாரம் செய்துகொள்ளவேண்டும்" என்று நேரங்களையும், சாப்பாடுகளையும் குறித்துக்கொண்டு அவ்வாறே ஆங்காங்குச்செய்து, தீர்த்தமாடும்போதும், சுவாமிதரிசனஞ் செய்யும்போதும், அவைகளே முக்கியமானவைகளாயிருந்தும் அவற்றில் அதிக மனப்பற்றுதலின்றி, "சீக்கிரம் ஸ்நானஞ்செய்யுங்கள்; சீக்கிரம் சுவாமிதரிசனம் முடியவேண்டும்; இவற்றில் நேரத்தைப் போக்கிவிட்டால் சாப்பாடு தட்டுக்கெட்டுவிடும்" என்று ஒருவர்க்கொருவர் சொல்லிக்கொண்டு தீர்த்தத்தில் ஒரு முழுக்கு முழுகிவிட்டுக் கோவிலுக்குப் போய்ச் சுவாமிக்கு ஒரு கும்பிடுபோட்டுவிட்டுச் சாப்பாட்டிலும், வேடிக்கையிலும், விநோதங்களிலும் பொழுது போக்கிவிட்டு வீட்டிற்குத் திரும்புகின்றனர். இவர்களிடம் தெய்வசிந்தனை சிறிதுமிருப்பதில்லை. இவர்கள் பேச்சில்மாத்திரம் மிகுந்த தெய்வபத்தியுடையவர்கள் போல் காட்டிக்கொள்கிறார்கள்.

உண்மையுணர்ந்த மகாஞானிகளெல்லோரும், "சமய கோடிகள் எல்லாம் தம் தெய்வம் எம் தெய்வமென், றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவும் நின்றது......." என்ற தாயுமானார் அபிப்பிரா



யத்தின்படி, "கடவுள் ஒருவரே பல் வேறு சமயத்தினர்க்கும் அவரவர் தெய்வமாகவும் விளங்குகிறார்" என்ற உயர்ந்த ஞானத்தைப் போதித்துங்கூடச் சிலர், அதைவிட்டு ஒவ்வொருவர்க்கும் தனித்தனியே ஒவ்வொரு தெய்வமிருப்பதாக நினைத்துத் தங்கள் மதமும் தெய்வமுமே உயர்ந்தனவென்றும், மற்ற சமயங்களும் தெய்வங்களும் தாழ்ந்தவையென்றும் பலரோடு தர்க்கஞ்செய்து பேதைமைக்குணத்தால் பெரும்போர் தொடுக்கின்றனர். தங்கள் மதக்குறியீடுகளை அலங்காரமாக அணிந்து புகழ்ந்து மற்ற மதக்குறியீடுகளை இகழ்ந்துரைக்கின்றனர். பிற மதத்தினரையும், கொள்கைகளையும் திட்டுவதுதான் தங்களுடைய தெய்வவணக்கமென்று கருதியிருக்கின்றனர். இப்பேதைமைத் தர்க்கமுடையார்க்கு எப்பொழுதும் சண்டையில் கருத்திருப்பதன்றி எட்டுணையும் தெய்வபக்தியில் இருப்பதில்லை.

மனிதர், தெய்வங்களை வழிபட்டுய்யும்பொருட்டு மேலோர் பற்பல விரதானுஷ்டானங்களை வகுத்திருக்கின்றனர். இந்த விரதங்களின் முக்கியநோக்கம் தெய்வசிந்தனையை மனத்தில் அதிகமாகக் கொள்வதே. அப்படியிருந்தும் பெரும்பான்மையோர் அவ்விரதங்களை வேறுவிதங்களில் திருப்பிக்கொண்டிருக்கிறார்கள்; தெய்வபக்தியைச் சிறிதும் கருதாமல் உயர்ந்த சாப்பாடுகளும், பலகாரவர்க்கங்களும் செய்து சுவாமிக்கென்று பேர்பண்ணிச் சாப்பிடுவதும், குளித்து மடிகட்டிக்கொள்வதும், பிறரைத் தீண்டாமலிருப்பதுமே விரதமென்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு நினைத்து, "இன்றைக்குத் தித்திப்பு வடை சுடவேண்டும்; மிளகுப் பொங்கல் செய்யவேண்டும்; சேமியா பாயசம் பண்ணவேண்டும்; பன்னிரண்டு மணிக்குள்ளாகவே படையல் போடவேண்டும்; நான் மடி; என்னை எவரும் தொட்டுவிடாதீர்கள்" என்று ஒருவரிடமொருவர் சொல்லிக்கொண்டு இவற்றிலேயே புத்தியைச் செலுத்தித் தெய்வசிந்தனை சிறிதுமின்றி ஒவ்வொன்றையும் செய்துமுடித்து, "நேரமாய்விட்டது; பசிக்கிறது; சீக்கிரம் ஆகட்டும்" என்று அவசரமாகத் தெய்வபடத்துக்கு முன்னே அவற்றை இலையில் வைத்துப் படைத்து ஒப்புக்குக் கற்பூரங்கொளுத்திக் காட்டிவிட்டு எல்லாவற்றையும் தின்று ஏப்பமிடுகிறார்கள். ஒரூரில் ஒருபெண், விரதத்திற்கு மடிகட்டிக் கொண்டிருந்தபொழுது நோயிற்கிடந்த அவள் கணவன் உயிர்நீங்கும் சமயத்தில், அவளை அருகில் அழைத்ததாகவும், அவள் 'நான் மடி கட்டிக்கொண்டிருக்கிறேன்; என்னை நீங்கள் தொடலாகாது'

என்று சொன்னதாகவும், உடனே அவனுயிர் அந்த ஏக்கத்துடன் நீங்கிவிட்டதாகவும் நாம் ஒரு வர்த்தமானம் கேள்விப்பட்டிருக்கிறோம்; கணவனுக்கு மனத்திருப்தியை உண்டாக்குவதே இவளுக்குரிய விரதமென்பதை இவள் உணராமல் மடியோடிருப்பதே மகா விரதமென மதியீனத்தால் கருதினாள். ஏகாதசியில் தெய்வசிந்தனையில் புத்தியைச் செலுத்தித் தூக்கமின்றியிருப்பதால் தேவானுக்கிரகமுண்டென்று பெரியோர்கள் கூறியிருக்கச் சிலர் அவ்வுண்மைக் கருத்தினையுணர்ந்து, தெய்வபக்தி செலுத்துவதிலும், புண்ணியக் கதைகளைப் படிப்பதிலும் கண்விழிக்காமல் எவ்வகையினாலாவது தூக்கம் விழிப்பது புண்ணியமெனக்கொண்டு நாடகங்களிலும், பயாஸ்கோப்பிலும், சூதாட்டத்திலும், வேறு தூர்த்தச்செயல்களிலும், ஊர் சுற்றுவதிலும், இரவைக்கழித்து ஒரு பயனுமற்று இரு கண்ணும் விழித்திருக்கின்றனர்.

உலகத்தில் ஊதியந்தேடுவதற்கு உயர்ந்த பல வழிகளைப் பெரியார் வகுத்திருக்க, சிலர், அவற்றையெல்லாம் பைத்தியக்காரத்தனமான மார்க்கங்களென்று ஒதுக்கித்தள்ளிவிட்டு அதிகப்பணத்தைச் செலவுசெய்து டிராமா, பயாஸ்கோப் முதலிய வேடிக்கைத் தொழில்களை நடத்தி நஷ்டமடைந்து வறுமைக்குள்ளாகின்றார்கள்; வேறு பல ஈனத்தொழில்களையும் ஏற்றமான தொழில்களென்று நினைத்துச் செய்து இழிவடைகின்றனர்.

இன்னும் பலர், 'நாங்கள் ஜீவகாருண்யக் கொள்கையுடையவர்கள்' என்று சொல்லிக்கொண்டே தங்களுக்கு மாறுபட்ட கக்ஷியினரோடு வம்பிட்டுச் சண்டைதொடுத்து அவர்களை ஹிம்சித்துப் பிராணாபத்துக்குள்ளாக்கிவிடுகிறார்கள்.

சில சமயத்தினர் எங்கள் மதம் மகா சாந்தியுடையதென்று சொல்லிக்கொண்டே பிறமதத்தினரோடு மதச் சண்டையிட்டு உயிர்க்கொலை புரிகின்றனர்.

கல்வியில் தேர்ந்த பெரும்புலவர், எல்லா மதநூல்களையும் வேற்றுமை பாராட்டாமற் கற்றுணர்ந்து அவற்றிலுள்ள நுண்பொருள்களையுணரவேண்டியது அவர்களுடைய கடமையாயிருக்க, சிலர், தாங்கள் சிறந்தபுலவர் என்று சொல்லிக்கொண்டு பிறமத நூல்கள் உயரிய கருத்துடையனவாயிருப்பினும் அவற்றைக் கையாலும் தொடக்கூடாதென்றும், கண்ணாலும் பார்க்கக் கூடாதென்றும் சொல்லி அவ்வாறே அவற்றை ஆராயாமல் அவற்றின் உயர்பொருள்



களின் உணர்ச்சியற்றவர்களாயிருந்து, பொருள் நயத்துக்காக அவற்றை ஆராயும் அறிவுடையாரையும் அந்த அந்த மதத்தில் சார்ந்துவிட்டார்கள் என்று இழித்துக்கூறி, "ஐயா! நீங்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்கள்?" என்று கேட்டுப் பரிகசித்துத் தாங்கள் சாமர்த்தியத்தோடு பேசிவிட்டதாக நினைத்து வீண் மகிழ்ச்சியடைந்து தங்கள் பேதைமையைக் காட்டுகிறார்கள்.

சிலர், சுதேச பாஷாபிவிருத்திக்கென்று சங்கங்களையும், கூட்டங்களையும் நடத்தி அவற்றில் பேசுங்காலத்தில், குறித்தகாரியத்தை விட்டுத் தாங்கள் பிறரால் உபகாரம் பெறும்பொருட்டு அவர்களை முகஸ்துதியாகப் பேசத்தொடங்கி அளவற்றுப் புகழ்ந்து பேசுகிறார்கள்; அவர்களை உயர்த்திக் கூறுதற்கு வேறு பலரை இகழ்ந்துரைக்கின்றனர்; புறமதத்தினரையும், அவர் நூல்களையும் நிந்திக்கிறார்கள்; 'அவையல்கிளவி மறைத்தனர் கொளலே' என்ற நியாயத்தை உணராமல் இடக்கர் மொழிகளையெல்லாம் எடுத்து வழங்குகின்றனர்; முன்னோரின் உயர்ந்த கருத்துக்களையெல்லாம் பொருத்தமற்றன என்று தங்கள் குறுகிய நோக்கத்தால் மாற்றிப் புதிது புதிதாக எதையெதையோ பேசுகின்றார்கள்; சரித்திரங்களை மனம்போனவாறே ஆதாரமின்றி மாற்றுகின்றார்கள்; எழுத்துக்களின் பேதத்தையும் உணராத எண்ணிறந்த பாமரரால், கண்ணால் பார்க்கத்தகாத விதத்திலும், காதால் கேட்கத்தகாதவிதத்திலும் எழுதியும் பேசியும் கெடுக்கப்பட்டுச் சீர்குலைந்துவரும் தமிழை, எழுத்துப்பிழையின்றியாவது எழுதும் நிலைமைக்குக் கொண்டுவரவேண்டிய முயற்சியை எடுத்துக்கொள்ளாமல் அதை அந்நிலையிலேயேவிட்டு, மொழிப்பிரிவு கக்ஷிகளையும், வேறு ஏதோ நூதன முறைகளையும் ஏற்படுத்திக்கொண்டு தர்க்கமும் போரும் விளைவித்து வருகின்றனர். புதுத்துறைகளால் செய்யுள் இயற்றும் வழக்கத்தைப் போக்கியும், பண்டைச்செய்யுட்களை மாற்றியும், இலக்கணவிதிகளை மனம்போனவாறே திருப்பியும், பொருள்களை விபரீதப்படுத்தியும், பிரயோகிக்கத்தகாத சொற்களைப் பிரயோகித்தும் தமிழின் இயற்கை உயர்வைச் செயற்கையால் தாழ்த்திவிடுகின்றனர்.

பெரியோர்களாயிருப்பவர்கள், எப்பேர்ப்பட்ட மனிதர்களிடத்திலும் உண்டாகும் கெட்டசெயல்களைக் கண்டிப்பது நியாயமாயிருக்கச் சிலர் பெரியோர்களெனப் பட்டம் வகித்துக்கொண்டு, தங்களுக்குச் சகாயம்புரியும் சிலரிடமுண்டாகும் குற்றங்களைக் கண்டிக்

காமல், மற்றவர்களைமாத்திரம் (அவர் சிறு குற்றம் செய்தவிடத்தும்) கண்டித்துக்கொண்டு வருகிறார்கள். தாங்கள் இச்சகம்பேசிச் சிநேகங்கொண்டிருப்பவர்களிடம் உள்ள குற்றத்தைப் பாரபக்ஷமின்றிக் கண்டிக்கும் அறிஞரையும் கண்டிக்கிறார்கள்.

சிலர், உலகத்தைச் சீர்திருத்தும் துறையிலிருப்பதாகப் பேர் பண்ணிக்கொண்டு, அதற்குரிய கல்வி, பெரியோர் கருத்துக்களையேற்றல் முதலியன இன்றித் தப்புந்தவறுமான தமிழை எழுதி அதுதான் உயர்ந்ததெனக் காட்டுகிறார்கள்; எழுதத் தெரியாதவர்கள் எழுதிய உபயோகமற்ற விஷயங்களையெல்லாம் உயர்ந்தவையென்று உரைக்கின்றனர்; உயர்ந்த கல்வியாளரால் எழுதப்படும் விஷயங்களையெல்லாம் உளுத்தகட்டை என்று கூறுகின்றனர். சிலர், உயர்ந்த கல்விகற்பதாகப் பெருமை பாராட்டிக்கொண்டு தமிழ்வருஷப்பெயரும், மாதப்பெயரும், நக்ஷத்திரப்பெயரும், திசையும்கூடத் தெரியாத கல்வி கற்கின்றனர்.

முற்காலத்தில், ஜனங்களுக்குத் தெய்வபக்தி யுண்டாகுமாறு மனப்பரிசுத்தமுடைய பாகவதர்களால் பக்தர்களின் சரிதைகள் மிக உருக்கத்தோடு பாராயணஞ் செய்யப்பட்டுவந்தன. இப்போது பக்தஜனசபையார் எனப் பேர்வைத்துக்கொண்டசிலர், பார்வைக்கு அழகாயிருப்பவர்களும், பாகவதத்தன்மைக்குப் பொருந்தாதவர்களுமாகிய சில பெண்மணிகளையும், சில ஆடவசிங்கங்களையும் சத்கதாகாலக்ஷேபத்துக்கென்றேற்படுத்தி அதை வேடிக்கைத் தொழிலாக மாற்றி வருகின்றார்கள். அதன் உண்மைக்கருத்தை வேறக்களைந்துவிட்டார்கள். உண்மைப்பாகவதர் தங்களுக்குக் காலக்ஷேபமின்றிக் கண்கலங்கி நிற்கின்றார்கள்.

சிலர், உலகத்தவர்க்கு அறிவுறுத்துவோராக முற்பட்டு நின்று, "நீதிசாஸ்திர வுரைகளை எழுதுவதும் சொல்வதும் பண்டைக்காலத்துப் பைத்தியக்காரர்களின் கொள்கை; புதிது புதிதாக உலக அநுபவஞானத்தை எடுத்துச் சொல்லவேண்டும்" என்று பெருமை பேசி, "பால் வெண்மையாயிருக்கும்; காக்கை கருமையாயிருக்கும்; கண்ணாடியில் முகந்தெரியும்; தேன் தித்திக்கும்; வேப்பெண்ணெய் கசக்கும்; சண்டைக்காரி சண்டைபோடுவாள்; பிச்சைக்காரன் பிச்சையெடுப்பான்" என்பனபோன்ற விஷயங்களை வெகு அருமையானவைகளென்று வெளிப்படுத்துகிறார்கள்.



"பெண்களுக்குக் கல்வி போதிக்கவேண்டும்; ஆடவர்களைப் போலவே அவர்களையும் மேன்மைப்படுத்தவேண்டும்" என்று அறிஞர் கூறி வருகின்றார்கள். இதன் உண்மைக்கருத் தென்னவெனில், "பெண்மக்களுக்கு அறிவு விருத்தியாகத்தக்க கல்விகளைப் போதிக்கவேண்டும்; குடும்பத்தில் அவர்கள் முக்கியமான உரிமைகளைப் பெற்று மேன்மையுற்றிருக்கும்படி செய்யவேண்டும்" என்பதே. சிலர் இக்கருத்தை உணராமல், கல்வி போதிக்கவேண்டுமென்று சொன்னதைக்கொண்டே ஆபாசமுறையான கல்விகளையெல்லாம் அவர்களுக்குப் போதிக்கின்றார்கள்; அவர்கள் தங்களுக்கு எக்காலத்திலும் உயர்வுகொடுத்துவந்த நாணம் முதலியவற்றை அடியோடு கைவிட்டு எங்கும் தனித்துலாவும்படிக்கும், எந்த ஆடவரோடும் பழகிப் பேசும்படிக்கும் செய்கிறார்கள். பெண்கள், தெய்வஸ்தோத்திரம் செய்யவும், தம்பதிகளோடு சந்தோஷமாகப் பொழுதுபோக்கவும் சங்கீதம் கற்றுக்கொள்வது நலமென்று அறிஞர் கூறுகின்றார்கள். இதைக்கொண்டு சிலர், அச்சங்கீதத்திற்கு வரம்பும் நேரமுமின்றிப் பெண்களைச் சதா சர்வகாலமும் அதிலேயே போதுபோக்கிக் கொண்டிருக்கும்படி செய்வதுடன் இன்னபாடலைத் தான் கற்றுக்கொடுக்கவேண்டும் என்னும் நியமமின்றி, "மருவ வாருமே—மன—மகிழச் சேருமே" என்பது போன்ற சிற்றின்ப நுகர்ச்சியை வெளிப்படையான வார்த்தைகளால் காட்டும் பாடல்களையே வாத்தியார்கள் மிகுதியாகக் கற்றுக்கொடுக்கும்படி செய்கிறார்கள். அப்பெண்கள் சிறிதும் நாணமின்றி அந்தப் பாடல்களைப் பல ஆடவர் முன்னும் பாடுகிறார்கள்; அப்பெண்களின் தாய் தந்தையரும் அவற்றைக் கேட்கிறார்கள். இது, மானக்கேடான செயலென்பது சிறிதும் இவர்கள் புத்தியில் படவில்லை. மான ஈனத்தை உணராத மிருகசுபாவத்திற்கும் இதற்கும் என்னபேத மிருக்கிறது?

எல்லோரும் ஒற்றுமையுடனிருந்தால் தேசம் முன்னேற்றமடையும் என்று சில தேசபக்தராகிய பெரியார் கூறி வருகின்றனர். இதன் உட்கருத்தாவது எல்லோரும் ஒரே மனதுடனிருக்கவேண்டுமென்பதே. இதைச் சிலர் வேறுவிதமாக அர்த்தஞ்செய்துகொண்டு, உலக அமைப்புக்கும், பெரியோர் நோக்கத்திற்கும் விரோதமாக வெவ்வேறு புதியகிளர்ச்சிகளை யுண்டாக்கி ஒற்றுமைக்குப் பதிலாகப் பிளவுகளை விளைவித்து வருகின்றார்கள். இவற்றால் பல கலகங்களுக்கே ஏதுவுண்டாகிக்கொண்டு வருகின்றது.

இன்னும் இவைபோன்ற எத்தனையோ செயல்களிருக்கின்றன; அவற்றையெல்லாம் எழுதப்புகின் அவை மிக விரிவெய்தும். அறிஞர் அவற்றை அனுபவத்தால் உணர்ந்தேயிருப்பார்கள். இவற்றால் உலகத்திற்கும், மனிதர்க்கும் கெடுதியுண்டாகுமேயன்றி நன்மையுண்டாகாது. நம் நாடு முன்னிருந்த தெய்விகச்சிறப்பை அடைய வேண்டுமானால், நம்மவர் இனியவாழ்க்கையைப் பெறவேண்டுமானால், தீமையை நன்மையெனக்கருதும் பேதைமைச் செயல்களையொழித்து நம் பெரியோரால் இயற்றப்பட்ட நூற்கருத்துக்களை உள்ளவாறு உணர்ந்து ஆன்றோரின் செவ்விய நெறியையே கடைப்பிடித்தொழுகவேண்டும். அறிஞருரைக்கு மாறுசெய்யாமல் நடப்போரே ஆனந்தவாழ்வில் அமர்வர்.

ஓம் தத் ஸத்.

# தேசநலப் பகுதி.

## மகாத்மா காந்தியின் சரித்திரம்.

(298ம் பக்கத் தொடர்ச்சி.)

**வக்கீல்** தொழிலில் அவருக்கு அதிகமான வருமானம் கிடைத்துவந்தது. உண்மைக்கு மாறான வழக்குகளை அவர் ஏற்றுக்கொள்ளுவதேயில்லை. வழக்கு பொய் என்று தோன்றினால் நான் விலகிவிடுவேன் என்று எச்சரிக்கை செய்தே அவர் வழக்குகளை வாங்கி நடத்தி வந்தார்.

### அரசாங்கத்திற்கு உதவி.

பின்பு போயர்களுக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கும் யுத்தம் ஆரம்பமாயிற்று. காந்தியடிகளும், இந்தியர்களும் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குத் துணையாக நின்று வேண்டிய உதவிகளையெல்லாம் செய்தனர். வெற்றியடைந்த பிரிட்டிஷ் அரசாங்கத்தார் டிரான்ஸ்வால் பிரதேசத்தில் இந்தியர்களை ஒதுக்க ஆரம்பித்தனர். இடையில் காந்தி அடிகள் இந்தியாவுக்குச் சென்று தென்ஆப்பிரிக்கா இந்தியர்களுக்கு உதவிசெய்வதற்காக 1903 ம் வருஷம் ஜனவரி மாதம் பிரிட்டோரியா நகருக்குவந்து சேர்ந்தார். இந்தியரின் உரிமைப்போர் முக்கியமாக டிரான்ஸ்வால் பிரதேசத்திலேயே நடத்தப்படவேண்டியதாக இருந்தது. எனவே அவர் டிரான்ஸ்வால் சுப்ரீம் கோர்ட்டில் தம்மை ஒரு வக்கீலாகப் பதிவுசெய்துகொண்டார். இந்தியர்களுக்கு எல்லாவிஷயங்களையும் நன்கு அறிவிக்க "இந்தியன் ஒப்பீனியன்" என்ற பத்திரிகையை ஆரம்பித்தார். அதில் தமிழ், ஹிந்தி, குஜராத்தி, இங்கிலீஷ்



முதலிய பாஷைகளில் விஷயங்கள் வெளியிடப்பட்டன. அந்தப் பத்திரிகையினால் காந்தி அடிகளுக்கு அதிகமான செலவு ஏற்பட்டுவந்ததேயன்றி லாபஞ் சிறிதும் ஏற்படவில்லை. பின்பு அவர் ருஷ்யஞானியாகிய டால்ஸ்டாய் அவர்களைப் பின்பற்றிச் சாதாரணவாழ்க்கையை நடத்துவதற்காக "பீனிக்ஸ் செட்டில் மெண்ட்" என்ற ஆச்ரமத்தை ஏற்படுத்தினார். சரீரப் பிரயாசைப்பட்டு உழைத்து சாதாரண வாழ்க்கையை நடத்துவதற்காகவே அந்த ஆச்ரமம் ஏற்படுத்தப்பட்டது. 1906 ம் வருஷத்தில் ஸுலூ வகுப்பினருடன் ஏற்பட்ட யுத்தத்தில் காந்தி அடிகள் இந்திய வைத்திய உதவிப்படை ஒன்றைச்சேர்த்து அரசாங்கத்தாருக்கு விசேஷ உதவிசெய்தார்.

### ஆசியாக்காரர் பதிவுச்சட்டம்.

1906-ம் வருஷத்தில் தென்ஆப்பிரிக்காவில் குடியேறியுள்ள ஆசியாக்காரர்களையெல்லாம் ஒடுக்கிவிடவேண்டுமென்ற நோக்கத்துடன் **ஆசியாக்காரர் பதிவுச் சட்டம்** என்ற ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது. குற்றவாளிகளைப்போல் அந்தச் சட்டப்படி ஆசியாவாசிகள் விரல் அடையாளம் கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். இந்தியர்கள் எல்லோரும் ஒரே மனதுடன் அந்தச்சட்டத்தைப் பலமாக ஆட்சேபித்தனர். ஆயினும் அது மன்னர்பிரானின் சம்மதத்தைப்பெற்று உறுதிப்படுத்தப்பட்டது. தங்களுக்கு அவமானத்தை உண்டுபண்ணும் ஒரு சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடப்பதைவிட அதை மீறிநடந்து அதனால் ஏற்படக்கூடிய தண்டனையையும், கஷ்டங்களையும் அனுபவிக்கலாம் என்று காந்தி அடிகள் இந்தியர்களுக்கு யோசனை கூறினார்.

### சாத்வீக எதிர்ப்புப்போர்.

காந்தி அடிகளின் யோசனையை எல்லா இந்தியர்களும் ஏற்றுக்கொண்டார்கள். 1906-ம் வருஷம் செப்டம்பர்மாதம் சாத்வீக எதிர்ப்புப்போர் காந்தி அடிகளின் தலைமையின்கீழ் இந்தியர்களால் ஆரம்பிக்கப்பட்டது. முதலில் அரசாங்கத்தார் காந்தி அடிகளைக் கைதுசெய்து அவருக்கு இரண்டு மாதம் சிறைவாச தண்டனை விதித்தார்கள். அவரைப் பின்பற்றி ஆயிரக்கணக்கான இந்தியர்கள் சிறைசெல்ல முன்வரவே அரசாங்கத்தார் இந்தியர்களுடன் ஒரு ராஜிசெய்துகொள்ள விரும்பினார்கள். புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள ஆசியாக்காரரின் பதிவுச்சட்டத்தை நிறைவேற்றாமல் நிறுத்திக்கொண்டால் தாங்கள் யாவரும் தங்களது பெயர்களைப் பதிவுசெய்துகொள்ளுவதாக இந்தியர்கள் கூறினார்கள். அரசாங்கத்தார் அதற்கு இணங்கவே காந்தி அடிகள் தாமே முதலில் சென்று தம்மைப் பதிவுசெய்துகொண்டார். இதைக்கண்டு மனக்கொதிப்படைந்த பட்டாணி ஒருவன் காந்தியைப் பலமாக அடித்துவிட்டான். ஆனால் அவர் அதைப் பொறுமையுடன் ஏற்றுச் சகித்துக்கொண்டாரேயன்றி அவன்மீது யாதொரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இந்தியர்கள் பதிவுசெய்துகொண்டதும் அரசாங்கத்தார் தாங்கள் வாக்களித்தபடி செய்ய மறுத்துவிட்டனர். எனவே மறு

படியும் தீவிரமாகச் சாத்வீக எதிர்ப்புப்போர் ஆரம்பிக்கப்பட்டது. காந்தியடிகள் கைதுசெய்யப்பட்டு மீண்டும் இரண்டுமாதம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார். சிறையிலிருந்து விடுதலையடைந்ததும் தென்ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் உண்மையான நிலைமையை உலகிலுள்ளவர்களுக்கும், இந்தியாதேசத்திற்கும் அறிவிக்கும்படி செய்தார். ஒப்பந்தக் கூலிகளாகத் தென்ஆப்பிரிக்காவுக்குவந்து தங்களது ஒப்பந்தக்காலம் முடிந்ததும் அங்கு குடியேற விரும்பியவர்களுக்கு அரசாங்கத்தார் வருஷத்தில் 3-பவுன் தலைவரி விதித்தனர். இந்தியர்கள் செய்துகொள்ளும் விவாகங்கள் சட்டப்படி செல்லக்கூடியதல்லவென்று அங்கு ஒரு கோர்ட்டுத் தீர்ப்பும் கொடுக்கப்பட்டது. கோபாலகிருஷ்ணகோகலே என்ற இந்தியப் பெரியார் அச்சமயம் தென்ஆப்பிரிக்காவுக்குவந்து அந்த வரியை நீக்கிவிடவேண்டுமென்று அதிகாரிகளை வற்புறுத்தினர். அதிகாரிகள் அப்படிச்செய்வதாக வாக்களித்தனர். ஆனால் பிறகு அந்த வரியை நீக்க மறுத்துவிட்டனர். எனவே கஷ்டங்களைப் பொறுக்கமுடியாமல் இந்தியப் பெண்மணிகளும் சாத்வீகப்போரில் சேர்ந்து கஷ்டங்களை அனுபவிக்க முன்வந்தனர். பல பெண்மணிகள் சிறை வாசத்தையும் ஏற்றுச் சந்தோஷமாக அனுபவித்தார்கள். பெண்மணிகளுக்குத் தலைவியாக ஸ்ரீமதி கஸ்தூரிபாய் காந்தி சிறைவாசத்தை ஏற்றுக்கொண்டார்.

## சாத்வீகப்போரின் வெற்றி.

1913-ம் வருஷத்தின் கடைசியில் காந்தி அடிகள் சாத்வீகப்போரின் பலத்தை வெளிக்காட்ட ஒரு புதிய சாத்வீகப்போரை ஆரம்பித்தார். தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களை எல்லாம் சேர்த்து டிரான்ஸ்வால் எல்லைக்குள் பிரவேசிக்கும்படி செய்தார். டிரான்ஸ்வால் எல்லைக்குள் சட்டத்தை மீறிப் பிரவேசித்த இந்தியர்களையெல்லாம் அரசாங்கத்தார் கைதுசெய்து சிறையிலிட்டனர். சுமார் மூவாயிரம் இந்தியர்கள் டிரான்ஸ்வால் எல்லைக்குள் பிரவேசித்தனர். அவர்களில் 122-பெண்மணிகளும் 50-குழந்தைகளும் இருந்தார்கள். காந்தியடிகளும் கைதுசெய்யப்பட்டார். அவருக்குப் பதினைந்து மாதம் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தியாவில் இந்த விஷயங்கள் தெரிந்ததும் இந்தியர்களுக்குள் மனக்கொதிப்பும், ஆத்திரமும் ஏற்பட்டன. இதேசமயத்தில் கரும்புத்தோட்டங்களில் வேலைசெய்துவந்த இந்தியக்கூலிகள், வேலைநிறுத்தம் செய்ததற்காக முதலாளிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தியாவில் அப்பொழுது இராஜப்பிரதிநிதியாக இருந்த லார்டு ஹார்டிஞ்சு தென்ஆப்பிரிக்கா இந்தியர்களின் சாத்வீகப்போரை ஆதரித்து, அவர்களின் குறைகளை விசாரித்துத் தெரிந்துகொள்ள ஒரு கமிட்டியை ஏற்படுத்தினர். இந்தியர்களின் குறைகளை விசாரிக்க நியமிக்கப்பட்ட கமிட்டியார் இந்தியர்களின் குறைகளையெல்லாம் விசாரித்துச் சில முக்கியமான சிபார்சுகளைச் செய்தனர். அவைகளைத் தென்ஆப்பிரிக்கா அரசாங்கத்தார் ஏற்றுக்கொண்டார்கள். உடனே ஆசியாக்காரர் பதிவுச்சட்டம் ரத்துசெய்யப்பட்டது. இந்தியர்களுக்கு விதிக்கப்பட்ட தலைவரி நீக்கப்பட்டது. இந்தியர்கள் செய்துகொள்ளும் விவாகங்கள் சட்டசம்மதமானவைகள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டன. காந்தி அடிகள் நடத்திய சாத்வீகப்போர் சிறந்த வெற்றியை அடைந்தது. பிறகு காந்தி அடிகள் தென்ஆப்பிரிக்கா வாசிகளின் உபசாரங்களை ஏற்றுக்கொண்டு இந்தியாவுக்குத் திரும்பிவந்தார்.



(தொடரும்.) திரு. கே. சு.

---

## காங்கிரசும் மதுவிலக்கும்.

இந்திய நாட்டின் சுதந்திரப்போராட்டம் தொடங்கி நாற்பத்திரண்டு ஆண்டுகளாகின்றன. இக்காலத்துள் 1920 ம் ஆண்டு மிகவும் முக்கியமானது. இவ்வருடத்தில் ஒவ்வொரு சிறு கிராமத்திலும் தேசீய உணர்ச்சி பரவி நின்றது. இவ்வாண்டில் பல முக்கிய தேசீய சம்பவங்கள் நிகழ்ந்தன. சுதந்திரதாகம்கொண்டு, இன்பவாழ்வைத்துறந்து, தம்பொருளையும், பதவியையும், பட்டங்களையும், மற்ற எதையும் பொருட்படுத்தாது இமயம் முதற் கன்னியாகுமரிவரை சுற்றுப்பிரயாணஞ்செய்து ஜனசமூகத்தில் நாட்டின் விடுதலையைப்பற்றியத் தமது அபிப்பிராயத்தைப்பரப்பி, சிறைச்சாலையைத் தம் வாசகசாலையாகக்கொண்டு "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை யான் பெறவேண்டும்" என்ற உரிமை வசனங்களைக் கடைசி வார்த்தைகளாகப் புகன்று புகழுடன்தோன்றிப் புகழுடன் மறையுந்தன்மையைப்பெற்ற பாலகங்காதர செல்வர் தமது பணியைமுடித்து இன்பநிலையை இவ்வாண்டிலே எய்தினர். தென்ஆப்பிரிக்காவில் இந்தியநாட்டிலிருந்து குடியேறியுள்ள மக்களின் உரிமையை—சுயமரியாதையைக் காப்பாற்றத் தமது கௌரவத்திற்குத் தாழ்ந்த ஊழியங்களையும் செய்து, தேசசேவை புரிந்துவந்த காந்தியடிகள், திலகர் மறைந்ததால், இந்திய ஜனசமூகம் அடைந்த இருளைத் தமது காந்தியால் இவ்வாண்டிலேயே போக்கினர்; "கேளாதே வந்து கிளைகளாயிற்றோன்றி வாளாதே போவரான் மாந்தர்" என்பதுபோல 'உலகத்தில் தோன்றிய மஹான்கள் தத்தம் அருட்பணியைத் தமக்கு இறைவன் கொடுத்துள்ள குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்துச் செல்லுகின்றனர்' என்ற தத்துவத்தையும் காந்தியடிகள் விளக்கியருளினர்.

இவ்வாண்டிலே பாலகங்காதரதிலகர் மஹாயுத்தத்தில் இந்தியநாடு புரிந்த உதவிக்கு யாதொரு வெகுமதியையும் பெறாததுகண்டு வருந்தித் தமது போராட்ட முறையை வேறு வழிகளில் திருப்பவாரம்பித்தனர். மோஹன்தாஸர், திலகருடைய கொள்கை நாட்டின் நலப்பெருக்கிற்கு நல்லதல்லவென அபிப்பிராயப்பட்டார். இருதலைவர்களுள்ளும் அபிப்பிராயபேதங்கள் தோன்றவே மஹாத்மா தமது கொள்கையை—நிர்மாணவேலையை 1920-ம் ஆண்டு அக்டோபர் முதல்நாளில் தொடங்கப்போவதாக அறிவித்தார். இவ்வாண்டு ஜூலை 31-ம் நாள் இரவு திலகர் விண்ணுலகெய்தினர். மஹாத்மாவின் புது இயக்கத்திற்கு 'ஒத்துழையாமை இயக்கம்' என்று பெயர். நாம் ஒத்துழைத்துப் பிறநாட்டாரை அவருடன் ஒத்துழையாது நம் வழிக்

கழைத்தலே இவ்வொத்துழையாமை இயக்கத்தின் சித்தாந்தம். காந்தியடிகள் ஒத்துழையாமை—சாத்வீக எதிர்ப்பு ஆகிய இருதீக்ஷண்யங்களின் ஆசிரியராக விளங்கினர். மேற்கூறிய கொள்கைகளின் ஆசிரியரான காந்தியிடத்திலிருந்து தோன்றிய பல பகிஷ்காரகிரணங்களுள் **மது விலக்கு** முக்கியமானதாகும். பகிஷ்கார கிரணங்கள் பெரும்பாலும் தேசநலத்தையும், சாஸ்திரக்கொள்கைகளையும், தேகாரோக்யத்தையும் கொண்டே ஒளிர்ந்தன.

**மது விலக்கு**—ஆம்! அதைத்தான் நூடி என்று மழைப்பது! 'குடி குடி கெடுக்கும்' என்பது பழமொழி! நம் நாட்டின் வறுமைக்கு அந்தோ! இக்குடியே முதற்காரணமாய் நிற்பது! ஏழை மக்கள் நெற்றி வியர்வை நிலத்தில் விழ வேலை செய்துவிட்டுக் கூலியைப் பெற்றுக்கொண்டு நேராகச் செல்வது எங்கே? இக்குடிகெடுக்கும் குடிகிடைக்கும் குடிக்குத்தான்! மனைவி, குழந்தை முதலானோர் வீட்டில் தலைவனை எதிர்நோக்கி, பசியுடன் உணவாக்கக் காத்துநிற்க, தலைவனோ தன்னுடைய நிலைதவறித்தடுமாறி ஆபாசமான இடங்களில் புரண்டுகொண்டு கிடக்கின்றான்! இக்குடும்பத்தின் நிலை என்ன! பாரத மக்களே! குடியால் உங்களாதரவிலிருக்கும் குடும்பத்தாரும் நீங்களும் உங்கள் தாய்நாடும் வறுமைக்காளாகி நிற்பதை யினியாகிலும் உணருங்கள்! கௌரவக் குடியானர்களே! கள்ளுக்கடை, சாராயக்கடைக்குச்சென்று குடித்தாற்றான் அது குடியாகும்! உயர்ந்த குப்பிகளை வரவழைத்துப் பெரிய கட்டிடங்களிலமைக்கப்பெற்றிருக்கும் கௌரவக் குடிக்கடைகளில் கனவான்களுடன் குடித்தால் அது குடியாகுமாவென்று எண்ணவேண்டாம்! **காப்பி**—இதுவும் கள், சாராயமென்ற சாமார்த்தியக்காரர்களின் சகோதரனே! முதல் இருவருக்கும் மாறாட்டத்தை யுண்டுபண்ணும் வல்லமையுண்டு! இளையவனுக்கோ அதுமட்டுமில்லை! வியாதியை யுண்டுபண்ணும் வகையில் இம்மூவரும் ஒரே வித ஆற்றலுடையவர்கள் என்பதிலையமில்லை! நோயையோ, சித்த மாறாட்டத்தையோ தரவல்ல மேற்கூறிய மூவருடைய நட்பும் நமக்கு வேண்டாம்' என்பதே காங்கிரஸ் மஹாசபையின் சார்பாக மஹாத்மாவினிடமிருந்து பிறந்த தர்மம். தர்மத்தை நிலைநாட்டவரும் மஹான்கள் பல இன்னல்களுக்காளாவதுபோல, மதுவிலக்குப் பிரசாரஞ்செய்தவர் பலரும் சிறைச்சாலையனுபவத்தைப் பெற்றனர். சிறைச்சாலையே சிலகாலம் அறச்சாலையாக விளங்கிற்று. இப்பிரசாரத்தில் பல கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள் மூடப்பட்டன. **கள்** என்பதன் துர்க்கந்தத்தால் வாடிய பாரதத்தாயின் வதனம் அதன் பகிஷ்கார அறப்பணியின் நறுமணத்தால் சற்று மலர்ந்தது. இம்மதுவிலக்கை நினைக்கும்போதெல்லாம் நாம் மஹாத்மாவை மறக்கமுடியாது !

கட்டுவதெல்லாம் கண்ணாடிபோன்ற மேனாட்டுத்துணி! குடிப்பதெல்லாம் உயர்ந்தசாராயம் ! போற்றுவதெல்லாம் மஹாத்மா காந்தியடிகளையே! இச்செயல்களையுடையவர் பலர். இவர்களை ஏற்கக் காங்கிரஸ் மஹாசபைக்காவது காந்தியடிகளுக்காவது கட்டளையில்லை. இவர்கள் காங்கிரசைப் போற்றினு மொன்றே! தூற்றினுமொன்றே! **காந்தியடிகள்** இக்காலத்



**திருவள்ளுவர்!** அவர் அணிவது கதர்! அணியக்கேட்பது கதர்! விலக்குவது குடி; விலக்கப்பிரசாரம் செய்வது அக்குடியையே; நிற்பது அறநெறி; எழுதுவது—உரைப்பது நீதிமார்க்கம். இதனால் வள்ளுவனாரே மறுமுறை காந்தியடிகளென்ற வேறு பெயருடன் உலகினர் போற்ற வந்தனரென்துபம் பொருந்தும்.

இனித்தேர்தலில் வெற்றிபெற்றுச் சட்டசபைக்குச்சென்று அரசாங்க நிர்வாகங்களைச் சீர்செய்யவிருக்கும் காங்கிரஸ் சபையின் உறுப்பினரான சட்டசபை அங்கத்தினர்களின் கடமை என்னவென்பதைச் சற்றுக்கவனிப்போம். கைதூக்குவதும், வீண்வாதம் புரிவதும், கூட்டங்களுக்கே செல்லாதிருப்பதும், 'ஏதோ பட்டணம் சென்றோம்! நாலுபேரைப் பார்த்தோம்' என்ற மட்டிலும் சந்தோஷத்தை அடைவதுமாகிய இவற்றில் நில்லாது காங்கிரசின் கொள்கைகளில் கதரபிவிருத்திபோன்ற விஷயங்களை ஆதரிப்பதோடு முக்கியமாக **மதுவிலக்கு** சம்பந்தமாய் இவர்கள் தீவிரமாக உழைக்கவேண்டும். சென்றமார்கழித்திங்கள் 10, 11-ம் நாட்களில்,மதுரைமாநகரில் கூடிய மஹாநாட்டில் மதுவிலக்கை ஓர் முக்கிய தீர்மானமாக நிறைவேற்றியிருப்பது நாட்டின் நலப்பெருக்கை யுணர்த்தும் முக்கிய அறிகுறியாகும்.

—எங்கள்
தந்தையர் நாடெனும் பேச்சினி லேயொரு
சக்தி பிறக்குது மூச்சினிலே''

என்ற பாரதியின் வாக்குப்படி **மதுவிலக்கால்** நம் நாட்டில் குடியொழிந்து, குடிவாழ—ஓர் உன்னத சக்திதோன்ற—ஆனந்தத்தைப்பெற ஆனந்த சொரூபியைப் போற்றுவாம்.

**S. V. வரதராஜய்யங்கார், உறையூர், திருச்சி.**

உ
சிவமயம்.

# சைவ சித்தாந்தப் பகுதி.

(320-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதம் ஞானசாதனமான கிரியைகளோடுகூடிய ஆலயத்தை அடைந்து வழிபடும் முறையில் ஞானமுதித்து முத்திபெறுகின்ற முறைமையை இனிக்கூறுதும்:—ஆலயத்தை அடைந்து விதிப்படி தீர்த்தஸ்நானஞ் செய்தலால் சத்திநிபாத முண்டாகின்றது. நிவிர்த்தி முதலிய பஞ்சகலா சொரூபமாயமைந்த ஐந்துபிராகாரங்களையும் வலம்வந்து உள்ளே செல்லுகையினாலே ஆறத்துவாக்களையும், அவற்றில் அடங்கிய வினைகளையும், அவற்றாலாகும் பிறவிகளையும் கடந்ததாகின்றது. துஜஸ்தம்பம், நந்தி பலிபீடங்களைத் தரிசிக்கும்போது பதிபசுபாச உணர்ச்சியுண்டாகின்றது. பாசவடிவாகிய பலிபீடத்

துக்கு இப்பால் அட்டாங்கமாக நமஸ்கரிக்கின்றபொழுது "விழுந்து மெய்யுறப்பணிபவர் ....." வினைகள் அறவொழிந்து அவற்றின் காரணமான ஆணவ மலத்தின் இயல்பு இறைவனருளால் விளங்கப்பெறும்; அதனால் அம்மலத்தின் விளைவாகிய யானெனதென்னுஞ் செருக்கொழிந்து தற்போதம் நீங்கிப் பரவசமாதலுண்டாகும். மண்டபங்களைக் கடந்து செல்வது ஆதாரங்களைவிட்டு நீங்கிச் சிவசந்நிதியை யடைதலாகும். அதிகாரநந்தியை யடைகின்றபோது அதிகாரமுத்தத்தன்மை யுண்டாகும். சதாசிவமூர்த்தியாகிய சிவலிங்கத்தைத் தரிசித்தபொழுது பாசமனைத்தும் நீங்கிப் பசுவியல்பொழிந்து சிவமாந் தன்மைக் கேதுவுண்டாகின்றது. அங்கு தூபதீபங் காட்டுவது சத்திநிபாதத்துக்கேற்ப அநுக்கிரகிக்கப் பெறுகின்ற முறைமையையும் அநுக்கிரகத்தாலாம்பயனையும் உணர்த்துகின்றது. எங்ஙனமெனின்:—தூபத்துக்காகப் போடப்பெறும் சாம்பிராணி ஆன்மா; தணல் அதிகம் விளக்கமில்லாத சிவம்; சாம்பிராணி தணலை யடைவது, மந்ததரம் மந்தம் என்ற சத்திநிபாதங்களையுடைய ஆன்மாக்கள் சிவத்தைத்தேடி அடைவதை உணர்த்துகின்றது; அதில் சிட்டம் தங்குவது அவ்வித சத்திநிபாதமுடையவர்களுக்குப் பசுபோதம் சிறிதிருப்பதை உணர்த்துகின்றது; கற்பூரதீபத்தில் கற்பூரம்=ஆன்மா; அதைக் கொளுத்துந்தீ=சிவம்; கற்பூரத்தைத் தீயால் கொளுத்துவது தீவிரம், தீவிரதரம் எனும் சத்திநிபாதங்களையுடைய ஆன்மாக்களைத்தேடி சிவம் தானாகவே பூரணவிளக்கத்துடன் அடைவதைக் குறிக்கின்றது; கற்பூரம் சுடர்விட்டுச் சோதிமயமாவது ஆன்மா சிவமாந்தன்மை யடைவதாகும்; கற்பூரசோதியில் புகைபோவது கன்மமாயாமலங்கள் ஆன்மாவைவிட்டுக் கழிந்துபோவதைக் குறிக்கின்றது; கற்பூரதீபத்துள்ளே காணப்படுகின்ற மங்கிய கருமை நிறமானது ஆன்மா சிவமாந்தன்மை யடைந்தபோதும் ஆணவம் வலிகுன்றி ஆன்மாவினிடத்தில் ஒளிமயமாயிருப்பதை உணர்த்துகின்றது; கற்பூரம் சிட்டமில்லாமல் எரிந்துபோவது ஆன்மா சிவமாந்தன்மை யடைந்தபோது ஆன்மசொரூபம் சிறிது மில்லாமையை விளக்குகின்றது. சந்நிதியில் விபூதி பெறுவது திருவருளைப் பெறுவதாகும். விபூதி=அருள்.

## 12. சிவஞானி சரியையாதி நான்கினுக்கும் உரியன்.

மேலே கூறிய முறையில் சிவபிரானின் திருவருளை அனுபவித்து அதில் அழுந்தி வருகின்றவர்களாகி சிவஞானிகளுக்குச் சரியை கிரியை யோகங்கள் வேண்டுவதில்லையென இக்காலத்தில் பலர் எண்ணுகின்றார்கள். ஆனால் அநாதிகாலம் முதல் இதுகாறும் துணைநின்று தனுகரணாதிகளைக் கொடுத்து அறிவிச்சை செயல்களை விளக்கி ஆணவத்தைக் கெடுத்துப் பேரானந்தத்தைக் கொடுத்தருளிய திருவருட்செல்வராகிய கடவுளுக்குச் செய்யவேண்டிய நன்றியை மறக்கக்கூடாதென்பதை அவர்கள் மறுக்கமாட்டார்கள். ஆதலால் அவ்வித உபகாரத்தைப்பெற்ற சிவஞானிகள் தமக்குத் தேகமுள்ளவரையில் தமதருந்துணைவராகிய கடவுளருளிய சட்டத்திற்கடங்கித் தமது போதமுள்ளவரையில் சரியையாதி நான்கினையும் அனுசரித்து வரவேண்டிய கடப்பாடுடையவர்களாவர். உறங்குபவன் கைப்பொருள்போல் சிவானந்தாநுபவமேலீட்டினால், தாமாக நீக்காது, தம்மையறியாது சரியை யாதிகள் நீங்கலாமென்றும் அங்ஙனமின்றி அவற்றை நீக்கினால் வழுவாமென்றும் கூறப்படுகின்றது. "ஞான யோகக் கிரியை சரியை நாலு நாதன் றன்பணி, ஞானி நாலினுக்கு முரியன்......" என்பது இதனை வலியுறுத்துகின்றது.



## 13. சிவடினயார் கடமை.

இவ்வாறு சிவமாந்தன்மையுற்றவர்களும் உறமுயற்சிக்கின்றவர்களுமாகிய சிவனடியார்கள், தங்கள் நித்தியக்கடனை நெறியில் வழுவறச்செய்து திருநந்தனவனம், திருக்குளம், திருக்கோயில் முதலிய பணிகளைத் திருவருளைக்குறித்துச்செய்து திருப்பள்ளித் தாமமமைத்தல் நித்தியோத்ஸவாதிகள் நடத்தல் ஆகியவைகளைச் செய்வித்து, தேவாரமாதி திருமுறைகளையும் சித்தாந்த நூல்களையும் ஓதும்படிசெய்து, அதற்குரிய புத்தகநிலையங்களை நிறுவி, ஆலயத்தில் புராணபடனங்களை நடத்துவித்து உலகிலுள்ளவர்களெல்லாம் சிவமாந்தன்மைப் பெருவாழ்வடையும்படி திருவருளைப் பிரார்த்திப்பதே கடமையாகக் கொள்ளவேண்டும். இதுவே சிவனடியார் செய்கையாகும்.

ஓம் தத் ஸத்.

(தொடரும்) பஞ்சாட்சரபுரம், வாலையாநந்தம்.

# ஆரியசித்தாந்தம்.

(பொதுத் தர்மம்.)

(306ம் பக்கத் தொடர்ச்சி.)

மாதா பிதாக்களின் வார்த்தையைத் தட்டக்கூடாது. ஆரியா வர்த்தத்தைக்கடந்து போகவும் கூடாது. இப்படிச்செய்தவன் சாந்திராயண விரதானுஷ்டானஞ் செய்தால்தான் சுத்தனாவான் என்று ஸ்மிருதி கூறுகின்றது. ஆனால் தீர்த்தயாத்திரைக்காகப் போகலாம். எவ்விடத்தில் ஜலம் விறகு ஏராளமாகவும் சௌசாதிகளுக்குச் சௌகரியமாகவும் இருக்குமோ அவ்விடத்தில் வசிப்பது உத்தமம். அது புண்ணியத்தைத்தரும். அநேகமான கிணறுகளிலிருந்தும் ஜலம் சுலபமாய்க் கிடையாமலிருந்தால் அவ்விடம் வாசம்பண்ண யோக்கியமன்று என்று ஆபஸ்தம்பர் கூறினார். கேணித்தண்ணீரையன்றி வேறு தண்ணீர் எவ்விடத்தில் அகப்படாதோ அவ்விடத்தில் தருமசீலனான பிராமணன் பனிரண்டு வருஷம் வசித்தால் அவன் தாழ்ந்தஜாதியாய்விடுவான் என்று போதாயனர் கூறினார். எந்தப் பிராமணன் பனிரண்டுவருஷம் கிணற்றுத்தண்ணீரிலேயே ஸ்நானம் பண்ணுகிறானோ அந்தப் பிராமணன் அதே சரீரத்துடன் சூத்திரனாவான் என்று ஸ்மிருதிசங்கிரகம் கூறுகின்றது. தர்மானுஷ்டானம் செய்யாதவர்கள் உள்ள

இடத்திலும், ரோகம் உண்டாகிற இடத்திலும் வாசம் கூடாது. ஒருவனை வழி நடப்பதும் மலையில் வெகுநாள் வசிப்பதும் கூடாவென்று மனு சொன்னார்.

பாபிகளிருக்கும் தேசத்திலும் அபுண்ணியமான தேசத்திலும் வசிப்பவர்கள் பாவிகளேயாவார்கள் என்று வியாசர் சொன்னார். சௌராஷ்டிரம், ஸிந்து, சௌவீரம், அவந்தி, தக்ஷிணபதம், களிங்கதேசம் ஆகிய இவ்விடங்களில் வசிப்பவர் பதிதராவார் என்று சந்திரிகை கூறுகின்றது. இவ்விடங்களிற் போய் வசித்தவர்கள் வைசுவாநரம் என்னும் யாகத்தைச் செய்தால்தான் பரிசுத்தராவார்கள். நதிகளிலுத்தமமான கங்காநதி ஓடுகிறதேசமும், மலைகளும் புண்ணிய ஸ்தலங்களாம். தருமத்தை விரும்புவோர் பிரபாஸம், புஷ்கரம், காசி, நைமிசம், நரகண்டகம், கங்காதீரம், சரயூதீரம், அந்தர்வேதி, பிரமாவிருத்தம், மத்தியதேசம், மிச்சிரகம் ஆகிய இவைகளிலேயே வசிக்கவேண்டும். கங்கை ஓடாத இடத்தில் பிராமணன் வசிக்கக்கூடாது என்று வியாசர் சொன்னார். காவேரி, துங்கபத்திரை, கிருஷ்ணவேணி, கௌதமி, பாகீரதி, நர்மதை, யமுனை ஆகிய இவைகளும் கங்கையே. சில நூல்களில் தாம்பிரபரணி, பினாகினி, கோதாவரி, கிருஷ்ணை ஆகிய இந்த நதிகளும் கங்கையேயாதலால் இந்த நதி தீரங்களிலும் வசிக்கலாமென்பது கூறப்பட்டுள்ளது. இவைகளெல்லாம் புண்ணியக்ஷேத்திரங்களாகவும் கங்காதீரமுமாகவே கருதப்படும். சமையலுக்கு விறகும், ஸ்நானத்துக்கு நீரும், பசுவுக்குப் புல்லும், யக்ஞாதிகளுக்குத் தர்ப்பமும், பூஜைக்குப் புஷ்பமும் எங்கே நிரம்பக் கிடைக்குமோ அவ்விடம் புண்ணியக்ஷேத்திரமென்று பிதாமகர் சொன்னார். இவ்விடங்களில் தர்மானுஷ்டான நிரதர்கள் வசிப்பார்கள் ஆதலால் இவை புண்ணிய ஸ்தலங்களாயின.

மனிதர்களுக்குரிய ஒருவருஷம் தேவர்களுக்கு இரவும் பகலுமாகிய ஒரு நாளாம். உத்தராயணம் பகற்காலம், தக்ஷிணாயனம் இரவாம். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று நான்கு யுகங்களுண்டு. இந்த நான்கு யுகங்களும் சேர்ந்து தேவவருஷத்தில் 12000-வருஷங் கொண்டன. கிருதயுகத்திலுள்ள மனிதர் நானூறுவருஷம் ஜீவித்திருப்பார்கள்; ரோகமற்றவர்களாயும் மனோரத பூர்த்தியுள்ளவர்களாயு மிருப்பார்கள். திரேதாயுகத்து மனிதர்களுக்கு வயது முந்நூறு; துவாபரயுகத்தில் இருநூறு. கலியுகத்தில் வயது நூறு என்று மனு சொன்னார். இதிகாச புராணங்களில் அநேகமாயிரவருஷம் ஜீவித்திருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறதேயெனின், அது சிரத்தையைப் பொறுத்தது என்று பாரதம் கூறுகின்றது. சிரத்தையாவது தேகத்தை நிறுத்திவைத்துக்கொள்வதற்குரிய முயற்சி; அதுவே யோகமென்னப்படும். மனிதர்களுக்குத் தேகத்தை நிறுத்தி வைத்துக்கொள்ள எவ்வளவு சிரத்தை ஏற்படுகிறதோ அவ்வளவுகாலம் அவர்கள் ஜீவித்துக்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு எமபயம் இல்லையென்று அந்தப் பாரதமே கூறியது. மனு மனிதர்களுக்குச் சொல்லப்பட்ட ஆயுளும், கர்மபலன்களும், நிக்கிரகானுக்கிரகசக்தியும், அந்தந்த யுகத்துக்குத் தக்கபடி

*



யுண்டாகின்றன என்றார். அதாவது கிருதயுகத்தில் பூர்ணமா யிருக்கும்; திரேதாதியுகங்களில் காற் காற் பங்கு குறையுமென்பதாம். இந்த நான்கு யுகங்களுக்கும் தருமமும் வேறுபடும். கிருதயுகத்தில் தபசுபிரதானம். திரேதாயுகத்தில் ஞானமும், துவாபரயுகத்தில் யாகமும், கலியுகத்தில் தானமும் பிரதான தருமங்களாம்.

## கலியில் நிஷித்தமான கர்மங்கள்.

மூத்தகுமாரனுக்கு அதிக பாகம் கொடுப்பது, புத்திரோற்பத்திக்காகச் சகோதரன் மனைவியைச் சேர்வது, சந்நியாஸம் செய்துகொள்ளுதல் இவை கலியுகத்தில் கூடாவென்று பாரசர மாதவீயம் கூறுகிறது. புருஷன் மரித்தபிறகு அவனுடைய மனைவியானவள் சந்ததிவிருத்திக்காக மைத்துனனைச் சேர்வதும், வானப்பிரஸ்தாச்சிரமத்தை அடைவதும், கடலைக்கடந்து செல்வதும், ஸந்நியாஸம் கொள்ளுவதும், மஹாபிரஸ்தான யாத்திரை செய்வதும், ஸுராபானம் செய்தலும், அக்கினிஹோத்திரத்துக்குரிய ஹவணியென்னும் பாத்திரத்திலிருப்பதை நாக்கினால் நக்குவதும், அஸவர்ண விவாகம் செய்வதும், அத்யயனம் ஆசாரமிவைகளுக்காக ஆசௌசத்தைக்கொள்ளுவதும், அஸ்தி சஞ்சயனத்துக்குப் பிறகு தீண்டலுள்ளவர்கள் ஒருவரையொருவர் தொட்டுக்கொள்வதும், பிராமணர்களுக்கு மரணாந்திகபிராயச்சித்தம் செய்தலும், பாபிகளோடு சேர்வதாலுண்டாகும் தோஷமும், மதுவர்க்கத்துக்காகப் பசுவைக்கொல்லுதலும், தத்தனையும், ஔரஸனையு மில்லாதவனைப் புத்திரனாகக்கொள்ளுவதும், ஸோமவிக்கிரயம் செய்வதும், நெடுங்காலம் பிரமசாரியாகவேயிருப்பதும், நரமேத அசுவமேதயாகங்கள் செய்வதும் கூடாவென்று ஸ்மிருதியர்த்தசாரம் கூறுகின்றது. மாதாவின் கோத்திரத்திலும் தன் கோத்திரத்திலும் விவாகம் செய்வது, கப்பல் யாத்திரை செய்த பிராமணனைப் பிராயச்சித்தம்செய்து சேர்த்துக்கொள்வது, எல்லாரும் யஜமானரா யிருந்துகொண்டு சத்ரயாகம் செய்வது, கமண்டலத்தைத் தரிப்பது, சொர்ணத்தைத் திருடினவனோடு சேர்வதாலுண்டாகும் தோஷம், மஹா பாதகங்களுக்குப் பிராயச்சித்தம் செய்வது, அந்நிய புருஷனைக்கூடாமல் மனதால் விபசாரம் செய்த பெண்ணைத் தள்ளுவது, சிஷ்யன் குருபத்தினியின் பாதங்களைத்தொட்டு நமஸ்காரம் செய்வது, பிராமணர்களுக்கு ஆபத்விருத்தி, வைதிகாக்கினியை வாயாலூதுவது, கற்பழிந்த பெண்ணைப் பிராயச்சித்தம்செய்து சேர்த்துக்கொள்வது, யதிகள் எல்லா ஜாதியாரிடத்திலும் பிக்ஷையெடுப்பது, புதிதாய்வந்தஜலத்தில் பத்துநாளைக்குள் ஸ்நாநம் செய்வது, பசுக்கள் குடித்து மிகுந்த ஜலத்தை ஆசமனம் செய்வது, தகப்பனுக்கும் பிள்ளைக்கும் நடந்த விவாதத்தில் சாட்சிசொன்னவர்களைத் தண்டிப்பது, யதிகள் சாயங்காலத்தில் வீட்டிலிருப்பது இவைகளெல்லாம் கலிகால்த்தில் விலக்கப்பட்டனவென்று தர்மசாஸ்திரசுதாநிதியில் கூறப்பட்டுள்ளது. பெண், தன் கொழுந்தன் மைத்துனனிவர்களைச்சேர்ந்து புத்திரசந்தானம் பெறுதல், அவர்களில்லாவிட்டால் பர்த்தாவின் ஸபிண்ட

கரைச்சேர்தல் முதலியன தேஜோபலமுடைய பூர்வப் பெரியோர்களுக் குரியன. இப்பொழுதுள்ளவர்கள் தேஜோபலம் இல்லாதவர்களாதலால் அனுஷ்டிக்கக்கூடாதென்று ஆபஸ்தம்பர் கூறினார். கொழுந்தன் முதலானவர்களுடைய கை, தன் பர்த்தாவின் கைக்கு வேறுபட்டதேயாமென்பது அவரது கருத்து.

தனக்குத் தோன்றின நியாயத்தையும், அதைச் செய்வதுபோல் இந்தக் கர்மத்தையும் செய்யவேண்டும் என்று கருதுவதும் கூடாது. ஆனால் பிரமாணவசனம் துர்ப்பலமாயிருந்தால் தனக்குத்தோன்றின நியாயம் அனுமானமிவைகளை அனுசரித்துச் செய்யலாம் என்று ஆசுவலாயனர் கூறினார். எந்தச் சமையத்தில் எந்தக்கர்மத்தை யெப்படிச்செய்யவேண்டுமென்று பிரமாணவசனம் கூறுகின்றனவோ அதை அப்படியே செய்யவேண்டியது. அப்படிப்பட்ட பிரமாணவசனம் கிடைக்காவிட்டால் கர்மானுஷ்டானம் செய்கிறவன் வித்வானாயிருந்தால் அவன் தனக்குத் தோன்றிய நியாயத்தையும் அனுமானத்தையும் கொண்டு செய்யலாம் என்று அவரே கூறினார்.

(தொடரும்.) சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

## அறநெறிப்பகுதி.

### கள்ளுண்ணாமை.

**வா**னஞ் சூழ்ந்த இம்மண்ணுலகில் படைத்தல், காத்தல், அழித்தல், எனும் முத்தொழிலையும் முறையே நடாத்திச் சித்தம் மகிழத் திருவிளையாடல்கள் பலபுரியுங் கடவுளால் புண்ணியபூமியா மிப்பாரதநாட்டில்,

“ அண்டசஞ் சுவேதசங்க ளுற்பீசஞ் சராயுசத்தோ
டெண்டரு நாலெண்பத்து நான்குநூ றாயிரத்தா
யுண்டுபல் யோனியெல்லா மொழித்து மானுடத் துதித்தல்
கண்டிடிற் கடலைக்கையா னீந்தினன் காரியங்காண்”

என்னும் பெரியார் மொழிப்படி, எறும்புமுதல் யானையீறாகவுள்ள எண்பத்து நான்குலக்ஷ ஜீவபேதங்களுள் மானிடஜன்மம் பெறுதல் அரிதாம். “அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது ” என்பது ஈங்கு நினைக்கத்தக்கதே.

இம் மானிடரில் சிலர், நாகரீகமும், கல்வியும், நலனுறுபயனும் அமைந்துவரும் இக்காலத்திலும் பெரியோர்களாலே புறக்கணிக்கப்பெற்ற காதல், களவாடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல் எனும் பஞ்சமாபாதகத்துளொன்றாகிய “கள்ளுண்ணல்” எனும் இக்கொடிய பாவச்செய்கையை நனிபெருகக் கையாண்டு வருகின்றனர். நண்பர்காள்! இது வியக்கத் தக்கது.



இக்கொடிய “கள்ளுண்ணல்” என்னும் பழக்கமானது பண்டைக்காலத்தில், பகுத்தறிவென்பது சிறிதுமில்லாத பாமரமானிடரிடத்துப் பதுங்கியிருந்தது. இக்காலத்திலோ அரசநீதியால் அமைவுறக் கல்விகற்றுச் சிந்தைபொலிவுறும் பூமான்களிடத்தும் பொருந்தியிருப்பது அந்தோ பரிதாபம்! பரிதாபம் !! மிகப்பரிதாபம் !!!

நற்குடிப்பிறந்து நலனுறுகல்வி சிக்கறக்கற்றுச் சிறந்துவிளங்கிய திருவாளர்களே! இக்கட்குடி உங்களை யெவ்விதங் கவர்ந்துகொண்டது? வேற்று மக்களைச்சார்ந்த சேர்க்கைப்பழக்கத்தால் இதுநேர்ந்ததா? அன்றித் தற்காலத்துத் தங்கிய நாகரீகம் இதிற்புகுத்தியதா? அன்றிக் கலிகாலத்தின் கொடுமையதிகரிப்ப உங்கள் சிந்தை யியற்கையாகவே இதன்பால் சென்றதோ? எவ்வகையாலோ நீங்கள் கட்குடியென்னுங் கடியவிடமதை யுட்கொளலானீர்கள்.

கள்ளருந்துஞ் செல்வர்காள் ! ‘இக்காரணத்தால் எம்மை யணுகியது இக்கொடிய கட்குடி’ யென்று எடுத்துக்காட்ட நீங்கள் நாணுவீர்கள்; அதனால் நாமே இதைப்பற்றி ஆராய்ந்து ஒரு தீர்மானஞ் செய்வோம்:—இதைப்பற்றிச் சிந்திக்குமிடத்து இது செயற்கையா லேற்பட்டதேயன்றி யியற்கையாலானதல்லவென்பது நன்குவிளங்குகின்றது. கெட்டசேர்க்கையால் கெட்ட குணங்கள் உண்டாவது இயற்கை. இதனாலேயே,

“ தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவுந் தீது ”

என்று ஔவையாரும் கூறியுள்ளார். இன்னும் தீயாரைச்சேர்ந்த நல்லோருந் தீயகாரியங்களை அஞ்சாது செய்வாரென்பதை இராமாயணம் இலங்கை யெரியூட்டு படலத்தில், அரக்கர் மாளிகையைப்பற்றிய தீ, ஆங்குள்ள கள்ளையும், சுள்ளையும் அஞ்சாது உட்கொண்டது என்று கூறியதனால், செம்மொழி பகர்ந்த கம்பரும் விளக்கியுள்ளார். இதை யனுசரித்து “பன்றியோடுசேர்ந்த கன்றும் மலந் தின்னும்” என்ற பழமொழியும் வழங்கி வருகின்றது. இவ்வாறு செயற்கையினாலேற்படும் குடியினாலுண்டாகு மிழிவு மிகவும் அருவருக்கத் தக்கது.

கள்ளுண்ணுமொருவன், தான் கள்ளுண்ணாக்காலத்தில், கள்ளுண்டு களித்து அதனாலே தன் பெருமை குறைந்து துன்புடைமுகத்தனாய்த் துஞ்சினவன்போல மயங்கி, மானமிழந்து, மதியிழந்து, எல்லோரு மிகழத்திரியுமொருவனைக்காணின் அதன் இழிவு, தானே புலப்படும். அவன் தன் மனதில் அதை நினைத்தேனும், குடியை அடியோடு விட்டுவிடாமல் அந்தோ! பின்னர்த் தானுங் குடித்துத் தன் மனைவிக்கும் வாங்கிக்கொண்டு போகின்றான்; அவளும் குடிக்கின்றாள். பின் அவனும் அவன் மனையாளும் தலைவிரித்தாடுகிறார்கள். இதை என்னென்று சொல்லுவது! இதனிழிவை பொய்யாமொழிப் புலவரும்,

"கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா
லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு"

"துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"

"கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்"

என்னும் செய்யுட்களால் விளக்கியிருக்கிறார். வைத்திய நூல்களிலும் கள்ளுண்டலின் கெடுதி கூறப்படுகின்றது.

"பாதமதி லேதிமிரும் பாண்டொடுசோ கைபருக்கள்
வாதபித் தம்கிராணி வன்கரப்பன்—பேதியிவை
பொங்கி யதிகரிக்கும் புத்திகெடு மேகமுண்டாம்
தங்குமது விற்கெனவே சாற்று"

என்னும் வைத்தியச் செய்யுளால், மது வருந்துதலின் கெடுதிகளை நன்குணரலாம். இவ்வாறு மதுவினால் வேறுபல கெடுதிகளை அடைவதோடு இப்பிணிகளின் வாயகப்பட்டு, மனிதர் வருந்தினால், அவர்கள் எடுத்த மானிடப்பிறவியின்பயனை எவ்விதமடையக்கூடும்? இன்னும் குடியினால் எவ்வளவோ மானக்கேடும் நேர்கின்றது. அந்தோ! கள்ளுண்டுமயங்கி, வரையறுத்த காலந்தாழ்த்த சுக்கிரீவன் கருணையங்கடலாம் ஸ்ரீராமபிரானைக்கண்டு தொழ நாணிநின்ற நிலை எவரே யறியாதார்? பலவாந்துன்பம் மிகவுள கட்குடிக்கென்பது இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதாலும் குடியினால் துன்பமுண்டாகுமென்பதை யுணரலாம்.

பஞ்சமாபாதகங்களாகிய காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல் என்பவற்றுள் நடுவில் விளங்கும் கள்ளுண்ணல் ஏனைய நான்கையும் உண்டாக்குமென்பது பெரியோரால் கூறப்படுகின்றது. அதன்படி கள்ளுண்டவொருவன் காதல், கவருடல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல் என்னும் ஏனைய நான்கு குற்றங்களையும் செய்தே தீருவான்.

மாபாதகங்களையும், கட்குடித்த வொருவன் அடைகிறானென்ற கருத்தைக்கொண்டே, எந்நூலினுஞ் சிறந்துவிளங்கும் நன்னூலின்கண் அந்நூலாசிரியராகிய பவணந்திமுனிவர், மாணாக்கரது இயல்புகூறுமிடத்து,

"களி மடி மானி..........................................
......................பகரார் நூலே" என்ற சூத்திரத்தில் "களி" என்னும் கட்குடிப்பவன் பெயரை முதன்மையாக வெடுத்தார். இன்னும் உலகில் அன்பே சிறந்ததென்றும், "அன்பே சிவம்", "அன்பின் மயமே கடவுள்" என்றும் அவ்வன்பின்மயமாகிய அவனடி சாருதலே மானிடப்பிறவியின் பயனென்றும் ஆங்காங்குப் பல பல விடங்களிலும் பெரியார் வரைந்துள்ளார்கள். அப்படியிருந்தும் கள்ளுண்டவொருவன் களிப்பால் அன்பினை யொழித்து அந்தோ! மனைவி மக்களையும், மற்றுஞ் சிலரையும் நினைவு தடுமாறி நின்று



கத்தியால் குத்தியும், வெட்டியும் கொலைபுரிகின்றனன். இவற்றை யுற்று நோக்குங்கால் மதுவுண்பான் மனிதவகுப்பைச் சார்ந்தவனல்லவென்பது விளங்கும். இன்னும் குடிப்பழக்கம் செய்யும் கொடுமைகளோ எண்ணில;

"அறிவை யழிக்குஞ் செயலழிக்கு மழியா மானந் தனையழிக்குஞ்
செறியு மறிஞர் மதியாத செருக்கை விளைக்கு மீன்றாளு
முறியும் வெறுப்பு மிகவிளைக்கு முனிவு விளைக்கும் பகையஞ்சாக்
குறிகள் விளைக்கு நகைவிளைக்குங் கொள்ளேல் கள்ளுண் டலைமைந்தா"

என்ற செய்யுளிற் கூறியவற்றையெல்லாம் அது உண்டாக்கும்.

செந்தமிழ்ச் செல்வர்காள்! பொருளைக் கொடுத்து மதுவருந்திச் சுகமிழந்து, பொறுமைநீங்கி, போர்தொடுத்து, அவ்வயவங்களில் சில இழந்து, அன்னை, பிதா பகரு மொழியையும் இகழ்ந்தவராய், கொதிக்குஞ் சிந்தையுடையவராய், கைக்கொள்ளும் மானம் முதல் பொருள்கள் இழந்தவராய்த் திரிவோர் அறிஞரால் புறக்கணிக்கப்படுவர். ஆதலின், நண்பர்காள்! அரவின் வாயிலகப்பட்ட தேரைபோலவும், ஆலைவாயகப்பட்ட கரும்புபோலவும், கடன் துன்பத்திற் சிக்கியவர்போலவும், "கள்" வாய்ப்பட்டுக் கலங்கி வாடாது, சிந்தைதெளிந்து, அறத்தின்வழி நடந்து, அன்புடையீராய் நல்வழியில் பொருள் பலவீட்டி, புவியில் சிறந்து விளங்கி வாழ்வீராக. எடுத்ததேகம் துணையாக அதன்கண் தங்கிய "ஜீவாத்மா" வென்னும் தனிப்பொருளைச் சேர்க்குமிடமறிந்து சேர்ப்பிக்கவேண்டுமானால் கட் குடியைக் கனவிலும் நினையாதீர்கள். அன்புடையீர்! "கள்ளுண்ணாமை" என்னும் கடியரணுள் நின்று கவலையற்று வாழவே நான் இக்கட்டுரையை எழுதியுள்ளேன். என் நண்பர் பலரும் குற்றம் நீக்கிக் குணங்கொண்டு உவகையடையுமாறு வேண்டுகிறேன்.

R. இராமசுவாமி, மாணவன்.

---

## பொறுமை முதலியவற்றின் பயன்.

கோபம் குடிகெடுக்கும். அதையுடையவன் அழிவான். அவனுக்குத் தான் செய்வது எப்படிப்பட்டது என்று தெரியாது. தீமையை உண்டு பண்ணும் ஒருவகை வெறியே கோபம். கோபத்தில் ஒன்றைப் பேசிவிட்டுப் பின் வருந்துவோர் பலர். தரையி லடிப்பவன் கை தப்பாது தரையிற்பட்டு அந்தக் கைக்கே துன்பங் கொடுப்பதுபோல கோபமும் தன்னை யுடையவனைத் துன்புறுத்திக் கெடுத்தேவிடும். அவனைச் சேர்ந்தவர்களும் கெடுவர். ஆதலால் ஒருவன் தனக்குப் பழிபாவம் வேண்டாம் என்று தன்னைக் காத்துக்கொள்ளவேண்டுமாயின் கோபத்தை யடக்கி அகற்றிவிடவேண்டும். கோபிக்கிறவனிடம் மகிழ்ச்சியும் சிரிப்பும் காணல் முடியாது. ஒருவன், தன்னிலும் மேலான செல்வம், பலம் உடையவர்களிடம் கோபம் காட்டினால் அதன் தீயபயனை உடனே அவர்களின் பகைமையினால் அடைந்துவிடுவான். கீழானவர்களிடம் கோபித்தால் பழியும் பாவமும் அடைந்து தெய்வத்தால் தீமை அடைவது ஒருதலை. ஆகையால் பிறர் நமக்குத் தீமை செய்தாலும்

நாம் கோபப்படாமல் பொறுத்துக்கொண்டிருந்தால், கடவுள் அத்தீமைசெய்தாரைத் தண்டித்து நம்மைக் காப்பாற்றுவார்; நாம் பகை அடையமாட்டோம்; நம் காரியத்துக்கு ஒரு இடையூறும் ஏற்படாது; மேலும் மேலும் நாம் விருத்திக்கு வருவோம்.

'பொறுத்தார் பூமியாள்வர்' என்பது பழமொழி. யார் என்ன சொன்னாலும், எத்தீமை செய்தாலும் நாம் பொறுத்துக்கொண்டு நம் காரியத்தில் கண்ணுங் கருத்துமாக இருப்பது நல்லது. பொறுமை உள்ளவனுக்குப் பகைமையும் தீங்கும் கிடையா. யாவரும் நல்லவன் என்று அவனைப் புகழ்வர். பிறர் அடையும் உயர்வைக்கண்டு நாம் மனமெரியக்கூடாது. அங்ஙனம் பொறாமைப்படுகிறவன் குடியுடன் கெடுவான். குறுகிய அறிவுள்ள மூடன்தான் பிறர்வாழ்வு கண்டு பொறாது வருந்துவான். யாருடைய பொருளுக்கும் நாம் ஆசைப்படக்கூடாது. ஆயிரம் வருவதாக இருந்தாலும் பிறர் பொருள் நமக்கு வேண்டியதில்லை. நம்முடைய காசு ஒன்றுக்குப் பிறனுடைய காசு ஆயிரமும் ஈடாகாது. ஆசைதான் மனிதர் வாழ்வைக் கெடுத்து அவர்களைத் தீயவழியில் செலுத்துகிறது.

ஒருவன் எல்லோரிடத்தும் அன்பாக இருந்தால் அவன் செய்வதும் சொல்வதும் குற்றமாகத் தோன்றா. இன்பமும் அறமும் அன்பினால் அடையலாம். பிறர் துன்பங் கண்டவிடத்துப் பார்த்திராது தன் துயரம்போல் நினைத்து அகற்றும் அருளுடைமை அவ்வன்பின் முதிர்ச்சியால் உண்டாகும்.

ஆதிநாதன்.

## வைணவப் பகுதி.

### ஸ்ரீ ஆண்டாள்.

ஸ்ரீ மகாவிஷ்ணுவை அன்போடு வழிபட்டவர் பொய்கையார் முதலிய பன்னிருவராவர். அப்பன்னிருவரும், உலகத்திலுள்ள பொருள்களிடத்துப் பற்றுக்கொள்ளாது, பக்தர்க்கெளியனாகி விளங்கும் பரந்தாமனிடத்துப் பக்திகொண்டு வாழ்ந்தனர். அவர்கள் வேறெவற்றிலும் நினைப்பின்றித் தம்மிடத்துப் பெருகிய பக்தியென்னும் பிரவாகத்திலேயே ஆழ்ந்து படிந்திருந்தனர். அங்ஙனம், பகவத்குணானுபவத்தில் ஆழ்ந்திருந்தகாரணத்தால் ஆழ்வார்கள் என்றழைக்கப்பட்டார்கள். ஸ்ரீ ஆண்டாளும், ஆழ்வார்கள் பன்னிருவருள்ளும் ஒருத்தியாவாள். அவதாரகாலந்தொடங்கியே யெம்பெருமானிடத்து மிகுதியும் பக்திசெலுத்திவந்த ஆண்டாள், "இன நலம் எல்லாப் புகழுந் தரும்" (குறள்-457) என்னும் பெரியார்கூற்று உண்மையாக, தன் தந்தையின் மேம்பட்டவொழுக்கத்தால், தனக்கும் வயது ஏறவேற ஞானமும் பக்தியும் வளரப்பெற்று ஏனைய ஆழ்வார்களினும் சிறந்துவிளங்கினமையால் "ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சி நிற்குந் தன்மையள்" (உபதேசரத்தினமாலை) என்று மணவாள மாமுனிகளால் புகழப்பட்டாள். ஆண்டாள் தன் சிறந்த அறிவால் ஸ்ரீவில்லிபுத்தூரிலே கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் வடபெருங் கோயிலுடையானையே தனக்கு மணாளனாக வரித்து மணந்தனள். அவள் சரிதை வருமாறு:-



ஸ்ரீ வில்லிபுத்தூர், திருமால் அர்ச்சாவதாரரூபியாய் எழுந்தருளியிருக்கின்றனவும், ஆழ்வார்கள் பாடல்பெற்றனவுமாகிய திருப்பதிகள் நூற்றெட்டனுள்ளும் பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டனுள் ஒன்றாகும். இந்த க்ஷேத்திரம் ஸ்ரீ பெரியாழ்வார், ஸ்ரீ ஆண்டாள் ஆகிய இவர்தம்மால் மங்களாசாசனம் செய்யப்பெற்றது. இவ்வில்லிபுத்தூரில் பெரியாழ்வார் கருடாம்சராய் வேயர்குலத்தில் பதுமையாருக்கும் முகுந்தாசார்யாருக்கும் புத்திரராய் அவதரித்தருளினர். அங்ஙனம் அவதரித்த அவர் வடபெருங்கோயிலுடையான் திருவருளால், அப்பெருமானுக்கு பக்தியுடன் தொண்டுபுரிதலே தமக்குச் சிறந்த பேறாவதென்றுணர்ந்தார். கம்சனுக்கு மாலைகட்டி யுதவும் தொழிலை மேற்கொண்டவராகிய ஸ்ரீ மாலாகாரரிடம் ஸ்ரீ கிருஷ்ணபகவான் சென்று மாலையொன்றை விரும்பி வாங்கித் தரித்துக்கொண்டதை நம் பெரியாழ்வார் ஆராய்ந்து, மாலாகாரர் இருந்த இடந் தேடிச்சென்று மாலையேற்ற திருமாலுக்கு மாலைகட்டிச் சாத்துதலே மிகவும் உகந்த கைங்கரியமாகும் என்று துணிந்தார். அங்ஙனம் துணிந்த அவர், தம் கைங்கரியத்திற்குப் போதுமான மலரை நாளும் பெறுதற்குத் திருநந்தவனம் ஒன்றமைத்தார். அந்நந்தவனத்தில் பல்வகை மலர்களைத்தரும் செடி கொடிகள் செழித்து வளர்ந்தன. ஆழ்வார், ஒருநாள் தாம் மிக்க கவனத்துடன் பாதுகாத்துவரும் அந்நந்தவனத்தில் திருத்துழாய்ப்பாத்தி யமைத்தலை விரும்பிக் கையிற் களைக்கொட்டு ஒன்றுதாங்கி மண்ணைக்கிளறினார். அப்போது ஆங்குப் பூமியிலிருந்து ஸ்ரீ பூமிப்பிராட்டியின் அம்சமாக அழகே யுருவாகக்கொண்ட குழந்தையொன்று தம் கண்களும் மனமும் குளிரத் தம் முன்பு தோன்றக் கண்டார். காணலும் ஆழ்வார் மிகப் பேருவகைகொண்டு அக்குழந்தையை மலரெனத் தம் கைம்மலரிற்றாங்கி "இக்குழந்தை திருமகளோ? அன்றி நிலமகளோ" என ஆனந்தமுற்று நின்றார். அதுபொழுது ஆகாசவாணி அவரைநோக்கி "ஆழ்வாரே! ஆதியில் திருமால் வராக அவதாரமாய் அவனியை மருப்பிற்றாங்கி நின்றபொழுது பூமிப்பிராட்டியார், அம்மூர்த்தியை வணங்கித் துதித்து 'உமக்கு இனியராவார் யாவர்?' எனக் கேட்டலும், திருமால், 'மாறாத அன்புடன் எனக்குப் பாமாலை பூமாலை செய்தளிப்பவரே இனியராவார்' என்று சொல்லினர். அதுகேட்டு மகிழ்ந்த பூமிப்பிராட்டி அந்நெறியில் நின்று அவனுக்கு ஆட்பட விரும்பி, அவ்வெண்ணம் நிறைவேற அந்நெறியிலேயே நிற்கும் நீர் தனக்குத் தந்தையாக இக்குழந்தை வடிவம் பெற்று உம்மால் பரிபாலிக்கப்படும் இந்நந்தவனத்தில் வந்து அவதரித்தனள்" என்றது. ஆழ்வார் தாம்கொண்ட உவகை மேலுமதிகமாக ஆகாயவாணி சாற்றியதுகேட்டு மகிழ்ந்து தம்மிருக்கைசென்று செவ்விபெறச் செல்வமெனக் கிடைத்த பெறலருஞ் செல்வக்குழந்தையைப் பெரிதும் பாராட்டி வளர்த்துவந்தார். இக்குழந்தையே ஆண்டாள். (தொடரும்) N. திருவேங்கடத்தையங்கார்.

# வியாபாரப் பகுதி.

## வியாபாரமும் ஸ்தலங்களும்.

**வா**ணிபம் பெருகுவதற்கான பல வியாபார முறைகளில் வியாபார ஸ்தலமுமொன்றும். அனேக வியாபாரிகள் வாணிபஞ்செய்ய, சுத்தமான—நேர்த்தியான சரக்குகளை வைத்திருந்தும், பண்டங்களின் விலை பருவ விலைக்குச் சற்று குறைந்ததாகவே யிருந்தும் வியாபாரமின்றி, சரக்குகளின் உயர்வை யறிந்து வாங்குவாரற்று, தொழிலை விடும் நிலையையும் எய்துகின்றனர். இதற்குப் பல்வேறு காரணங்களிருப்பினும் வியாபாரத்தலங்களின் அமைப்பின் குறையே பெருங்குறையாம். பொதுவில், வியாபார நிலையங்கள் ஜனசந்தடி அதிகமாயுள்ள ஸ்தலங்களி லமைந்திருக்கவேண்டும். கடைகள் சுத்தமாக வெள்ளை தீற்றப்பெற்றுக் காண்போருக்கு அருவருப்பைத் தரக்கூடிய ஒட்டடை புகையாலான அழுக்கு முதலியவை நீக்கப்பெற்றிருக்க வேண்டும். மளிகைப்பண்டங்கள் வியாபாரம் செய்யப்படும் கடைகளாயிருப்பின் அவை ஈ, புழு முதலானவைகளால் ஆபாசமான பார்வையைக் கொடாதவகையில் சாக்குகளிலோ, பெட்டிகளிலோ வரிசையாக அமைக்கப்பெற்றிருத்தல் நலம். தெருப்பக்கத்தில் (வியாபாரமுகத்தில்) வியாபார ஆலயத்தின் பெயரும் ஆங்கு வாணிபத்திற்குத் தயாராயிருக்கும் பண்டங்களின் விவரமும் தீட்டப்பெற்ற பலகைகள் பார்வையாகத் தொங்கவிடப் பெற்றிருக்கவேண்டும். மனிதனுடைய சரீரத்திலுள்ள அவயவங்களில், 'கண்' அதிக நுட்பமானதாகையாலும், கண்டதைக் கண்டவுடனே கவர்ந்து நரம்புகளாகிய தந்தியின் மூலமாக மனதாகிய உரிமையாளனுக்குப் பிரீதியையோ, அதிருப்தியையோ—மற்ற எதையோ வெகு துரிதமாகத் தெரிவித்துவிடுதல் அக்கண்ணின் சுபாவமாகையாலும், வியாபாரஸ்தலங்கள் முதல் முதலாக "கண் பார்வையையே" திருப்திசெய்யுந் தன்மையி லிருக்கவேண்டுதலவசியம். உதாரணமாக ஒருவர் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்ற மாத்திரத்தில், ஆங்கிருக்கும் பலகாரவகைகளைப் பார்த்தவுடனே, 'அது நன்றாயிருக்கிறது (பார்வை); கொண்டு வாருங்கள் (மனம்) என்கின்றார். ஆகையால், முதலில் பார்வையைத் திருப்தி செய்துதான் பின்பு வாணிபப்பொருள்களின் உயர்வால் வியாபாரஞ் செய்வோர் மனதைக்கவரமுற்படவேண்டுமென்பது இதுவரை விவரிக்கப்பட்டது.

இனி, முதலாளிகளைப்பற்றிச் சிறிது கூறப்புகுவோம். வியாபார ஆலயத்தின் சொந்தக்காரர் இயற்கையாகவே இன்சொல்லின் பெருமைக்கு உரியவரல்லராயினும் வாணிப நிமித்தமாகவாவது நாவிற்கு நயமான சொற்களை ஊட்டிக்கொள்ள வேண்டும். ஏனெனில் 'அவர் சிடுசிடுத்த மனிதர்—அவர் கடைக்குப் போகவேண்டாம்' என்று ஜனங்கள் கூறிக் கடுமொழி கூறும் சில கடைக்காரர்களைத் தூஷிப்பதை நாம் பலதடவைகளில் கண்



கூடாகக் காண்கிறோம். "இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம் வன்சொலாலென்று மகிழாதே" என்பதற்கிணங்க வியாபாரஞ் செய்யவந்தவரிடம் ஹிதவசனத்தாற்பேசி அவரை மகிழ்வித்து அவர்க்குப் பண்டங்களைக் கொடுத்து 'அவர் கடைக்கே நாம் வழக்கமாகச் செல்லவேண்டும்—அவர் நல்லவர்' என்று பொதுமக்கள் கூறும் வகையில் வியாபாரச் சகடத்தை உருட்டிச் செல்பவரே வியாபார நுட்பந்தெரிந்து விருத்தியடைவார். இத்தன்மையாகவே வியாபார நிலயத்துள்ள சிப்பந்திகளும் நயமாகப் பேசுந் தன்மையுடையவரா யிருக்க வேண்டியதும் முக்கியமாகும். இவ்வித இலக்கணம் பொருந்திய பின்னரே விற்பனையாகுஞ் சரக்குகளின் விலையும், உயர்வும் கருதப்படும்.

வர்த்தகர்கள் பொதுவாக மக்களை ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் எண்ணமுடையவரா யிருத்தலாகாது. பலர் சரக்குகளில் போலிகளைக் கலந்து, 'நயமான சரக்கு—நேர்த்தியான பண்டம்' என்று சொல்லி விற்றுத் தாம் ஜனங்களை ஏமாற்றிவிட்டதாக நினைப்பர். இவ்வித வியாபாரிகளின் விஷயம் பண்டங்கள் உபயோகப்படுத்தப்பட்ட பின்னர் வெளிப்பட்டு விடும். அவர் தொழிலும் குன்றல் நேரிடும். வர்த்தகர், 'வியாபாரமென்பது நம்முடைய ஜீவனார்த்தமாகவும், நம்மைச்சார்ந்த பலர் பிழைப்புக்காகவும் ஏற்பட்ட பண்டைக் கொள்வினை, கொடுப்பினை' என்ற நினைவினராயிருத்தல் வேண்டும். இதை யுணர்த்தவே குறைந்தளக்காமையும், அதிக லாபமில்லாமையும் வணிகர்களின் அறமென நூல்களில் விவரிக்கப்பட்டன. வியாபார ஸ்தலத்தின் அமைப்பும், உரிமையாளரின் தன்மையும், பண்டங்களின் பண்பும் இதுவரையில் கூறப்பட்டன.

மேல் நாட்டாருடைய வர்த்தகாலயங்களைக் கவனிப்பின் அவர்களிடம் மேற்கூறிய விஷயங்கள் முற்றும் பொருந்தியிருப்பதை நாம் கண்கூடாகக் காணலாம். வாணிப நிலயங்களுக்கு அவர்கள் பெயர் கொடாமலும், ஆங்குக் கிடைக்கக்கூடிய பொருள்களை விவரிக்காமலும், வாணிப ஆலயப்பெயர் புனைந்த பலகைகளை அமைக்காமலுமிருப்பதில்லை. ஆலயம் உட்பார்வைக்குச் சிறிதாயிருப்பினும், வெளிப்பார்வைக்கு வெகு ரம்மியமாகத் தோன்றுமாறு கண்களின் சுபாவத்தைத் தெரிந்தே யவர்கள் அதை அமைத்திருக்கின்றனர். கட்டிடத்தினுள்ளே ஒருவர் சென்ற உடனே அவர்களை உபசரித்து, அமரச்செய்து, நயமாகப்பேசி எதையும் வாங்கவேண்டாமென்ற எண்ணமுடையவர்களும் ஏதாவது வாங்கும்படி செய்யுந்தன்மை அவர்களிடத்தில் பொருந்தியிருப்பது நினைக்க வெகு விநோதமானது! சிப்பந்திகள், சென்றவரை உபசரிக்கும் விதத்தையோ நேரில் அனுபவித்தவர்கள் நன்குணர்ந்திருப்பர். சில வியாபார ஸ்தலங்களில் யௌவனஸ்திரீகளும் சாமான்களை எடுத்துக்கொடுத்து, அவற்றின் நயத்தைக்கூறி, விலைபேசி—வாங்கவந்தவர் மனதைக் கவர்ந்துவிடும் வகையில் அதிக சாமார்த்தியசாலிகளாக வர்த்தகரால் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். இதுவும் ஓர் வியாபாரத் தந்திரமே! மேற் கூறியவை யாவும் பொருந்திய மேல்நாட்டு வியாபாரிகளிடம் (கம்பெனிக்காரர்களிடம்) மயங்கி, ஆங்குச் சரக்குகளை வாங்குவதே கௌரவமென நினைப்பது நம்மிந்தி

யர்களின் சுபாவமாகி விட்டது! இவர்கள் உள்நாட்டு வாணிபத்தை ஆதரிக்க முற்படுவதில்லை! இவர் விரும்புவன படாடோபம்! ஆச்சரியம்! ஆடம்பரம்! இவர்கள் வியாபாரமென்ற அரசரின் மந்திரிகளாயிருக்கும் வரையில் சுவதேச வியாபாரம் எவ்வாறு தலையெடுக்கும்? வியாபாரப் படாடோபங்களைக் கண்டு மயங்கி நம்நாட்டு மக்கள் பிறநாட்டு வியாபாரமாகும் பலாப்பழத்தை மொய்க்கும் ஈக்களாகிவிடுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட விஷயங்களைக் கண்ணுற்று உள்நாட்டு வியாபாரிகள் கூடியவரையில் தம் ஆலயங்களை மேற்கூறிய நமக்கான வழிகளிற் சீர்திருத்தித் தாய் நாட்டு வாணிபம் பெருகி மலியச்செய்வார்களாக. நாமும் படாடோபத்தைக்கண்டு ஏமாறாது நமது பாரதநாட்டு வாணிபத்தை—வர்த்தகங்களை ஆதரிப்போமாக.

வி. ராஜன், 'தாரகமந்திரம்' கோழிமாநகர்.

## மாணவர் பகுதி.

### ஆத்திசூடி உதாரணக்கதைகள்.

(309-ம் பக்கத் தொடர்ச்சி.)

### "கடிவது மற."

"கடிவது—(ஒருவரைக்) கோபித்துப் பேசுவதை, மற—(நீ) மறந்துவிடு," என்பது இதன்பொருள்.

உலகத்தில் ஆனந்தத்துடன் வாழவிரும்புவோர் எப்பொழுதும் எவரிடத்தும் இனிய மொழிகளையே பேசவேண்டும். அங்ஙனம் பேசினால் அவர்க்குப் பலரும் பற்பல நன்மைகளைப் புரிவர்; அவற்றை அவர் அடைதலால் துக்கமேயின்றிச் சுகத்துடன் வாழ்வர். இவ்வித சாந்தத்தன்மையில்லாமல் எவரிடத்தும், எந்நாளினும், எக்காலத்திலும் சினங்கொண்டு பேசுவோர், பலராலும் வெறுக்கப்பட்டு ஆனந்தமிழந்து ஆவியும் ஒழிந்துபோவர். அதனால் மறு உலகத்திலும் இவர்களுக் கின்பமில்லை. அங்ஙனம் சினமொழியால் தீங்குற்றார் ஒருவரின் சரிதத்தை இதனடியில் விளக்குவாம்:

ஒரு கிராமத்தில் அழகப்பர் என்ற பெரிய குடித்தனக்காரர் ஒருவர் இருந்தார். அவருக்குச் சாந்தமென்பதே கிடையாது. அவர், தம்மைச் சார்ந்தவர்களிடத்தில் சிறு குற்றங்காணப்படினும், அதன் பொருட்டும் இரைந்து பேசுவார்; எந்நாளிலும் அவர் இனியமொழி எவரிடத்தும் கூறியறியார். அவர், மனைவி, மக்கள், மருமக்கள் முதலிய எல்லோரும் அவரைக்கண்டால் நடுங்குவார்கள். அவர் மனைவியிடம், "தாகத்திற்குத் தண்ணீர் கொண்டுவா" என்று சொன்னால், அவ்வாறு சொல்லி வாய் மூடு முன் தண்ணீர் அவருக்கு முன் வந்துவிடவேண்டும்; வரச் சிறிது தாமதமானாலோ அவருக்கு அடக்க முடியாத கோபம் வந்துவிடும்; அவர் கோபவெறிகொண்டு, இடி முழங்குவது



போல் முழங்கி, "கழுதாய்! இவ்வளவு தாமதமா?" என்று கையினால் ஓங்கிப் பூமியிலறைவார்; அவருக்குக் கண் சிவந்துவிடும்; மீசைதுடிக்கும்; அந்தக் கோபத்தால் அவர், ஒருநாள் முழுவதும் ஆகாரம் சாப்பிடமாட்டார்.

அவர் இத்தகைய கோபாவேசத்தால் சிறப்புற்றவராய் வாழ்ந்துவருங் காலத்தில் ஒருநாள் காலையில், தம்முடைய மருமகள், பழையசோற்றுக்கு எள்ளுத் தொகையல்செய்து வைக்கவில்லையென்று கோபங்கொண்டு கதறிவிட்டு, அவளிடத்தில், "இது தொலையட்டும்; மத்தியானத்துக்கு வெள்ளைப் பூண்டுக் குழம்பு வை" என்று அழுத்தமாகச் சொல்லிவிட்டு வெளியிற் சென்றார். சென்று பல இடங்களுக்குப்போய்ச் சுற்றித்திரிந்து வெயிலால் வெதுப்பப்பட்டுக் காலையில் உண்டான கோபமுந் தணியாமல் மத்தியானம் பன்னிரண்டுமணிக்கு வெள்ளைப்பூண்டுக்குழம்பு சாப்பிடவேண்டுமென்னும் விருப்பத்துடன் வீட்டிற்குத் திரும்பிவந்தார். அவருடைய மருமகள், அவரின் கோபத்திற்குப் பயந்து, அவர் சொற்படியே வெள்ளைப்பூண்டுக் குழம்பு வைக்கத்தொடங்கி, வெள்ளைப்பூண்டு தேடினாள்; அது வீட்டிலில்லை; கடையில் அதை வாங்கப் பிரயத்தனப்பட்டாள். அங்கே ஒரே கடையிருந்ததாலும், அது நாட்டுப்புறத்துக் கடையாயிருந்ததாலும் அதில் வெள்ளைப்பூண்டு அகப்படவில்லை. அதனால் அவள் "ஐயோ! அந்த வெறிகொண்ட மாமனாருக்கு நான் என்ன சமாதானம் சொல்லுவேன்" என்று கையை நெரித்தாள். முடிவில், "அகப்படாததற்கு நம்மால் என்ன செய்ய முடியும்? அவர் கோபங்கொண்டால் தரையில் இரண்டு அறை அறைந்து கதறுவார்; வேறு என்ன செய்வார்" என்று வேறு குழம்பு வைத்துக்கொண்டிருந்தாள். அந்தச் சமயத்தில் எரிச்சலோடுவந்த அழகப்பர், கூடத்தில் உட்கார்ந்தார். மருமகள் சாப்பாடு பரிமாறுவதற்கு இலையைக்கொண்டுவந்து அவருக்குமுன் போட்டாள். அப்போது அழகப்பர், மருமகளிடத்தில் "வெள்ளைப்பூண்டுக் குழம்புவைத்தாயா?" என்று கேட்டார். அவள், "இல்லை" என்றாள். உடனே அழகப்பருக்குப் பெருங்கோப முண்டாய்விட்டது; அந்தக்கோபத்துடன் அவர் ஆவென்று வாயைத்திறந்து, "இல்லையா!" என்று இடிபோல் இரைந்து கையால் ஓங்கி நிலத்தில் அறைந்தார். அந்த அறையோடு அவர் வாயிலிருந்து இரத்தம் குபீல் என்று வெளிப்பட்டது; நாவும் கண்ணும் வெளியே வந்துவிட்டன; திடீரென்று அவர் பக்கத்தில் சாய்ந்தார்; அப்பொழுதே அவருடைய உயிரும் போய்விட்டது; அவர் வெள்ளைப்பூண்டுக் குழம்புவைக்கவில்லையென்ற கோபத்தால் விறைத்துப் பிணமாகிவிட்டார். அவருக்குத் திடீரென்று அளவுக்குமிஞ்சிக் கோபமுண்டானதால் இருதயம் வெடித்துவிட்டது; அதனாலேயே இச்சாவுநேர்ந்தது. அவர், கோபத்தால் உயிரைப் போக்கிக்கொண்டதை அக்கம்பக்கத்திலிருந்தவர்கள் உணர்ந்து, "இவனைப்போல் கோபவெறிகொண்ட பைத்தியக்காரனை நாம் எங்கும் கண்டதில்லை; வெள்ளைப்பூண்டுக் குழம்புக்காகவிட்டானே உயிரை! இவன் விவேகமில்லாதவன்" என்று அவன் புத்தியை வெறுத்தார்கள்.

(தொடரும்.) செம்பூர். வீ-ஆறுமுகஞ்சேர்வை.

## சிறுவர்களும் சிறுமிகளும் கவனிக்கவேண்டிய விதிகள்.

நீ உண்மையுள்ளவனாகவும், சுத்தமுள்ளவனாகவும், நம்பிக்கையுள்ளவனாகவும் இரு; கெட்டவார்த்தைகளை உபயோகிக்காதே; கெட்டவர்களுடன் சகவாசம் செய்யாதே; உன் தேகத்தையும், ஆடைகளையும் சுத்தமாக வைத்துக்கொள்.

வீட்டில் பெற்றோர்களுக்கு உன்னால் கூடியமட்டும் உதவிசெய்து அவர்களைத் திருப்திப்படுத்து. உன் சகோதர சகோதரிகளிடம் பக்ஷமாய் இரு; உனக்குக் கிடைக்கும் நல்ல சாமான்களை அவர்களுக்கும் பங்கிட்டுக்கொடு.

பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்களிடத்தில் மரியாதையாயிரு; உன்னால் கூடியமட்டும் அவர்களுக்கு உதவிசெய்; பள்ளிக்கூடவிதிகளை அனுசரி; மேஜைகளிலும் படிக்கும் புஸ்தகங்களிலும் எழுதாதே; உன் குற்றத்திற்காக மற்றொரு பையன் தண்டனை யடையும்படி செய்யாதே; ஏனென்றால் இது மிகவும் இழிவானகாரியம்.

விளையாட்டில் பிறரை ஏமாற்றாதே; எளிய பையன்களைப் பயமுறுத்தாதே; எல்லோரும் உன்னை விரும்பும்படி நடந்துகொள்; உன் வகுப்புப் பையன்களைப் பார்த்துப் பரிகாசம் செய்யாதே.

தெருவில், உபாத்தியாயர்களைச் சந்திக்கும்போது அவர்கட்கு வந்தனம் செய்; அவர்கள் உனக்குத் திரும்ப ஆசீர்வாதம் செய்வார்கள்; நீ போகும்போது எதிரில் வருபவரோடு மோதிக்கொள்ளாதே; முன்னால் போகிறவர்களைத் தள்ளிக்கொண்டு செல்லாதே; கதவுகளிலும், ஜன்னல்களிலும், நாற்காலி பெஞ்சுகளிலும் எழுதாதே; கடைகள் அருகில் திரிந்துகொண்டு கடைக்காரர்களுக்குத் தொந்தரவு செய்யாதே; அங்கஹீனர்களையும், கிழவர்களையும் ஏளனம் செய்யாதே; இவர்களிடத்திலும் அன்னியர்களிடத்திலும் மரியாதையாய் நடந்துகொள்.

எல்லாவிடங்களிலும், எவரிடத்திலும் அவமரியாதையாக நடக்கக்கூடாது; பெரியோர்களுக்குத் தேவையானவைகளைக் கொண்டுவந்து கொடுக்கவேண்டும்; அவர்கள் உன்னிடம்வரும் சமயங்களில் நீ உட்கார்ந்திருக்கும் ஆஸனத்தை அவர்களுக்கு அளிக்கவேண்டும்; ஒருவர் பேசிக்கொண்டிருக்கும்போது இடையில் தொந்தரவு செய்யக்கூடாது; உன் காரியங்களைக் கவனித்து அவற்றிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கவேண்டும்; எந்தக்காரியத்திலும் சுறுசுறுப்பா யிருக்கவேண்டும்; காலதாமதம் கூடாது; கண்டவிடங்களில் எச்சில்துப்பி அசுத்தம் செய்யக்கூடாது; குறிப்பிட்ட இடங்களில் துப்பவேண்டும்.

‘தன்னுயிரைப்போல் மன்னுயிரை நினை’ என்னும் உத்தமமான நீதியில் மேற்சொன்ன விதிகள் அடங்கி இருக்கின்றன. ஆகையால் மற்றவர்களிடம் நீ நடந்துகொள்ளும்விதத்தைப்பற்றிச் சந்தேகம் வந்தால் “மற்றவர்கள் நம்மிடத்தில் எப்படி நடந்துகொள்ள நாம் விரும்புவோம்” என்னும் கேள்வியைப் பிறப்பித்து அதற்கு உனது மனம் என்னபதில் சொல்கிறதோ அதன்படி நீயும் நடக்கவேண்டும்.



சோம்பல், “என்னை விரும்புவோரை நான் கல்வி கற்கவிடேன்; நித்திரை கொள்ளும்படி செய்து அவர்களின் ஆயுளைக் குறைத்துவிடுவேன்; என்னை யனுசரிக்கும் வாலிபனைக் கிழவனாக்குவேன்; சரீரப்பிரயாசை யெடுத்துக் கொள்ளாமல் கொட்டாவி விட்டுக்கொண்டு நிழலிலிருக்கும்படி செய்துவிடுவேன்; சம்பாத்தியம் செய்யாமல் பட்டினியா யிருக்கும்படி செய்துவிடுவேன்; பசி பொறுக்காமல் இழிவான யாசகத்தைக் கைக்கொள்ளும்படி செய்வேன்; என்னால் கெட்டவர்கள் கோடி கோடி; அவர்களை விவரிக்க என்னால் முடியாது” என்றுசொல்லுகிறது. ஆதலின் சுறுசுறுப்பை அடைந்தவர்களே எதிலும் ஜெயம் பெற்றவர்களாவார்கள்.

சா. கா. முஹம்மது ஷரீபுராவுத்தர், திருபுவனம்.

## கைத்தொழிற்பகுதி.

### ஜரிகை செய்யும் வகை.

ஜரிகை என்பது பட்டுக்கதிரில் சுற்றப்பட்ட பளபளப்பான இரண்டு உருளைகளில் சமனாக அமைக்கப்பெற்ற அதிக மெலினமான பொன் கம்பியால் செய்யப்படும் ஒருவிதநூல். இந்தியநாட்டில் உற்பத்தியாகும் ஜரிகை அநேகமாக மெல்லிய வெள்ளிக்கம்பியின்மேல் பொன்முலாம் பூசப்பெற்றுச் செய்யப்படுகின்றது. ஆனால் மேனாடுகளிலோ கலப்பில்லாத சுத்தமான வெள்ளிக் கம்பிகளைக்கொண்டு ஜரிகை செய்யப்படுகின்றது. உயர்ந்த சீமை ஜரிகை இருபத்தைந்திற்கு ஒன்றுவீதம் செம்புகலந்த வெள்ளிக்கம்பிகளின் மேல் அழுத்தமான தங்கப்பூச்சுக் கொடுத்துச் செய்யப்படுகின்றது. மேனாட்டு ஜரிகை வேலைக்காரர்கள் பலவிதமான முறைகளைக் கையாளுகின்றனர்.

அவர்கள் அநேகமாக அறுபது எடை வெள்ளிக்கு ஒரு எடை செம்பைக் கலக்கின்றனர். தாமிரங்கலந்த வெள்ளியாலோ, அல்லது சுத்தவெள்ளியாலோ செய்யப்படும் ஜரிகைக்கு, வெள்ளியை முதலில் ஒன்றரை அங்குலம் குறுக்களவுள்ள கட்டையாகச் செய்துகொள்ளுகின்றனர். பின்பு இந்த வெள்ளிக்கட்டையை உலையிலிட்டுக் காய்ச்சி ஒழுங்குபடுத்தி இதற்கு மெருகிட்டுத் தங்கமுலாம் பூசுகின்றனர். தங்கமுலாம் பூசப்பட்ட குச்சி பிறகு உலையில் பழுக்கக் காய்ச்சப்படுவதால் தங்கமுலாம் வெள்ளியில் திடமாகக் கலந்து சுத்த ஸ்வர்ணநிறத்தைத் தருகின்றது. இவ்விதம் காய்ச்சப்பட்ட கோலின்மேல் மெழுகைப்பூசி, மிக்க சிறிய துவாரங்களுள்ள இரும்புத்தகடுகளின் உதவி

யால் கம்பிகளாக்கப்படுகின்றது. இந்தகைய கம்பிகள் அடிக்கடி காய்ச்சப்படவேண்டும். இது மிகவும் சாமார்த்தியமாகச் செய்யப்படவேண்டிய வேலை. கம்பியாக்கப்படும் சமயத்தில் ஏதேனும் தவறுதல்களேற்பட்டால் அவ்வெள்ளிக்கட்டையின்மீது பூசப்பட்டிருக்கும் தங்கம் அழிந்துபோய்விடும். இதுபோன்ற கம்பிகள் ஒரு இராத்தல் எடையுள்ள வெள்ளிக்கட்டையால் இரண்டாயிரம்முதல் இரண்டாயிரத்தெண்ணூறு அடி நீளம் வரை செய்யப்படும்; அதிக மெல்லிய கம்பிகள் நாலாயிரம் அடிவரையிலும் செய்யப்படும். அதிக மெல்லிய கம்பிகள், வைரம், சிவப்புபோன்ற கற்களில் வெகு நயமாகப் போடப்பட்ட சிறு துவாரங்களின் வழியாக இழுக்கப்படும். சுவர்ணநிறமான இக்கம்பி பின்பு பளபளப்பான உருக்கு உருளைகளினுதவியால் சமனுக்க (தட்டையாக்க)ப் படுகின்றது. பிறகு பட்டையான இக்கம்பி மஞ்சள் அல்லது செம்பீத நிறமுள்ள பட்டுநூலின்மேல் அப்பட்டு இழை புலப்படாவண்ணம் சுற்றப்பட்டு நூற்கும் இயந்திரத்தின் உதவியால் முருக்கப்படும். இவ்விதமாக ஜரிகை முடிவடைகின்றது. மிகவும் உயர்ந்த ஜரிகை கலப்பிலோ, அல்லது சுத்த வெள்ளியிலோ பவுண்டுக்குப் பன்னிரண்டு பென்னி வீதம் தங்கமுலாம் தரப்பட்டுச் செய்யப்படுகின்றது; மட்டமான ஜரிகை நூலிற்கு, பவுண்டுக்கு இரண்டு பென்னி எடை வீதம் உள்ள பொன் கலக்கப்படுகின்றது. அதிக மட்டமான ஜரிகை மிக இலேசான வெள்ளி முலாம்பெற்று, அதன்மேல் பின்னும் குறைவான தங்கம் பூசப்பட்ட செம்புக் கம்பிகளாலாக்கப்படுகின்றது; இது செய்யப்படும் முறையில் இத் தொழிலாளர் 3000 சதுர அங்குலமுள்ள தகட்டிற்கு இரண்டு குன்றிமணி எடையுள்ள தங்கத்தை உபயோகிக்கின்றனர். இவ்வித மட்டமான ஜரிகைகளுக்குப் பட்டிற்குப்பதிலாக, பருத்திநூலையே உபயோகிப்பது வழக்கம். தங்கமுலாம் பூசப்படாதிருத்தலே தங்க ஜரிகைக்கும் வெள்ளி ஜரிகைக்குமுள்ள பேதம். வஸ்திரங்களுக்கு உயர்ந்த ஜரிகையை உபயோகித்தால் ஆடை உறுதியாகவும், சுருக்கந்தராமலும் நீடித்தகாலம் நிற்கும். ஜரிகைக்கான கம்பிகளில் கலக்கப்படும் தங்கத்தின் எடை குறையக் குறைய அவை ஒன்றுபடாது சின்னபின்னமாகிவிடும். வஸ்திரம் முதலானவற்றிற்கு உபயோகப்படும் ஜரிகைக்குத் தங்கம் அதிகமாகக் கலக்கப்படும் நூல்களே பொருத்தமாம். மற்றைய சிங்கார வேலைகளுக்கு உபயோகப்படும் ஜரிகை மட்டமானது. கலப்பு அதிகமில்லாது சுத்தமாகச் செய்யப்படும் ஜரிகையே உயர்ந்தது. (இண்டஸ்டிரி).

## தோல் பதனிடுதல்.

இனி, மிருகங்களின் தோலைப் பதனிடும் முறையைச் சற்று ஆராய்வோம்;

மிருகங்களின் தோல்கள் அவற்றின் சரீரத்திலிருந்து பிரிக்கப்பட்டபின்பு குளிர்ச்சியான இடங்களில் வைக்கப்பட்டால் அவை உருமாறி நாற்றத்தையுண்டுபண்ணிவிடும்: உஷ்ணம் படுமாறு வைக்கப்படின் அவை சுரசுரப்புடன் எவ்விதத்திலும் உபயோகமற்றனவாகிவிடுகின்றன. தோலானது துர்நாற்றம் வீசாதிருக்கவும், ஜனங்களின் உபயோகத்திற்குப் பயன்படுமாறிருக்கவுமே



பதனிடப்படுகின்றது. பதனிடும்விதங்கள் பல வேறுபாடுகளுடன் தொழிலாளிகளா லனுசரிக்கப்பட்டுவரினும் தோலின் முதலுருவம் மாறச்செய்தலே அம்முறைகளின் ஆரம்ப நிலை. பதனிடுவதால் மட்டுமே தோலானது நன்னிலையை யடைந்துவிடுவதாக நினைத்தலாகாது. அசுத்தங்கள் நீக்கப்பட்ட தோல் பின்னர் பளபளப்பாகச் செய்யப்படும் முறைகளாலேயே உபயோகிக்கத்தக்க கேர்த்தியான நிலையை யடைகின்றது.

தோல் இரண்டு அடுக்குகளாக அமைந்திருக்கின்றது. அதன் மேல் பாகத்திற்கு எபிடர்மிஸ் (Epidermis) என்றும், கீழ் பாகத்திற்கு டெர்மா (Derma) என்றும் பெயர். தோல் பதனிடுவதற்கு முன்பு அதன் மேல்பாகம் நீக்கப்பட்டு டெர்மா என்னும் உள்தோலே பாடஞ் செய்யப்படுகின்றது. இந்த டெர்மா என்னுந் தோல் நார்போன்றிருக்கும்.

(தொடரும்.) ஸ்ரீதரன், திரிசிரபுரம்.

# தெய்வவணக்கப் பகுதி.

## கடவுள் வழிபாடு.

(317-ம் பக்கத் தொடர்ச்சி.)

இம்மானத பூசையானது பல்வகைப்பட்ட உலகவிஷயங்களில் நுழைந்தலைத்தளிப்போர்க்கு மனவலியில்லாமையின் எவ்வாற்றானுங் கூடாதாகையால், அவர்கள் தம் மனத்தைத் தூய்மைப்படுத்தும் பொருட்டுக் கோயில்கட்குச் செல்லுதல் இன்றியமையாதது. இதனாற் பிறர் செல்லலாகாது என்று எண்ணற்க. "ஆலயந் தொழுவது சாலவு நன்று" என மேலோர் கூறினமையின் திருக்கோயில் சூழ்வது எல்லார்க்கும் இன்றியமையாததே. ஆயினும், உலகவிடயங்களிற் கட்டுப்பட்டார் சூழார் என்பது தோன்ற அவரை விதந்தெடுத்துக் கூறினோம். திருக்கோயில் சூழுமிடத்தும் வழிபடுமுறைமை வழாது சூழ்தல் வேண்டும். முத்தி யெய்துதற்குப் பலவழிகளுளவேனும் பக்தி இன்றியமையாததென்க. ஏனெனில், பக்தி ஒன்றுமே கடைத்தேற்றுமாகலின், யோகம், ஞானம் முதலியன வெல்லாம் எளியவல்லாதனவாயிருப்பதன்றிப் பத்தியில்லாதார்க்குக் கூடாதனவுமாம். ஆகையால், பக்தியையே உற்ற துணையாகக்கொள்ளுதல் வேண்டும். அதற்குத் திருக்கோயில் சூழ்தல் இன்றியமையாதது. சிலர் திருக்கோயில் சூழ்வது பொழுதுபோக்கிற்கேயெனக்கொண்டு தம்மை மிகவும் அழகுபடுத்திப் பல ஆடம்பரங்களுடன் செல்கின்றனர். அவர் தம் மனம் பல் வேறு விடயங்களில் நுழைந்து மதயானைபோலு மோடுகின்றது. இத்தகையார் திருக்கோயில் சூழ்ந்து என்ன பயனைப் பெறுவர்? திருக்கோயில் புகுமுன் தமது மனத்தை ஒன்றுபடுத்தித் தெய்வ நம்பிக்கையோடு இருத்தல் வேண்டும். மனம் நன்றாய் அடங்கிய பின்னர்க் கோயிலினுட் புகுதல்வேண்டும். புகுந்தபின் மனத்தைச் சிதறவிடாமல் தெய்வசிந்தனையிலேயே நிறுத்துதல் வேண்டும். தெய்வ வடிவைக் கண்டதும் மிக அன்புற்று வணங்கி மகிழ்தல் வேண்டும். அப்பொழுது இறைவனை நினைத்தலினின்றும் மனத்தை வேறுபடுத்துத் தமது வேண்டுகோட்களைக் கூறலாகாது. தமது வேண்டுகோளை முடித்ததற்பொருட்டுக் கடவுளை வழிபடுவது பெரும்பயன் தருவதன்று. அவ்வேண்டுகோளை

முடிக்குமளவே அது பயன்படுவது; மனத்தூய்மைக்கு அது எவ்வாற்றானுங் காரணமாகாது. சிலர், ஆன்றோர் புத்திரப்பேறு முதலியவற்றை யுன்னிக் கடவுள் வழிபாடு ஆற்றியது முண்டெனில், அவர்களெல்லாரும் மெய்ப்பக்தி யுடையராய் ஒவ்வோர் நன்மையைக் கருதி அவ்வாறு செய்தாரென்க. ஆயினும், பயனைக் கருதாமற் செய்யும் வழிபாடே மேன்மை யுடைத்தாம்.

நிற்கச், சிலர் திருக்கோயிலிற் சென்று வழிபடுதல் வீணேயென்றும், ஆண்டுக் கடவுளில்லையென்றும், ஆண்டிருப்பது உயிரற்ற உருவமேயென்றும் கூறிப் பழிப்பாருமுளர். அவர்கூற்றை மறுத்தற்குக் கூடுமெனினும், ஈண்டு அவற்றைக் கூறப்புகின் இலக்கண முறைமை பிறழுமாகலின், விடுத்தனம். அறிவுடையோர் உண்மை உணர்ந்துகொள்வார்களன்றோ? வீணே பழிப்பவர்கள் உண்மை உணர்ந்தாரைக் கேட்டுத் தம் மனமாசை அகற்றிக் கொள்வார்களாக. ஒவ்வோர் காரணத்தைக்கொண்டு பிறமதங்களைப் பழிக்கப் புகுவார் எவ்வாற்றானும் அறிவிலிகளேயாவர் என்பதை யாம் எடுத்துக் கூறுவதேன்?

கடவுள் வழிபாடு ஆற்றுவார்க்கு, அடியார் பிறரையும் வழிபடும் ஆற்றல் வேண்டும். சிலர், "யாம் கடவுளைமட்டுமே வழிபடுவேம்; பிறரை யாம் பொருளெனக் கருதேம்" என்கின்றனர். பிறரைப் பொருள் என்று கருதாவிடினும் அடியார்கள் மனத்தூய்மை உடையவர்களும் அன்பர்களுமாகலின், அவர்களையும் ஏற்றவாறு வழிபடுதல் வேண்டுமென்க. வீண்செருக்கு முதலியன கடவுள் வழிபாட்டிற்கு மாறுபாடாயுள்ளனவாகையால் அவற்றை முற்றிலு நீக்கல் வேண்டும். "**அவனன்றி யோரணுவும் அசையாது**" என்று ஆன்றோர் கூறியுள்ளாராகையால், உலக நிகழ்ச்சிகளெல்லாம் இறைவனது செயலே யெனக்கொண்டொழுகுவார்க்கு வீண்செருக்கு முதலியன உண்டாகா. அவர்கள் உலகமயக்கத்திற் சிக்குண்ணது இறைவனை மிக்க அன்போடு வழிபடுவர். இறைவன்மாட்டுச் செலுத்தப்படும் அன்பு சிறிதேயாயினும் பெரும்பயன் விளைக்கும்.

"மங்கையர்கள் போகமிசை வைத்திருக்கு மாசைதனைப்
பங்குசெய்து நூற்றிலொரு பங்கெடுத்துக்—கங்கையணி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாம் காணுக் கதி."

**இராமசுப்பிரமணிய நாவலர்.**

# வைத்தியப் பகுதி.

## வைத்தியக் குறிப்பு.

நமது முன்னோர்கள், அனேக ஆண்டுகளுக்கு முன்னாலேயே, சரீரதத்துவங்களை நிரூபித்து, அவைகளின் பாகுபாடுகளினால், புசித்தல், நினைத்தல், ஸ்பரிசித்தல் முதலியவைகளின்மூலம் உண்டாகும் சகல வியாதிகளையும், அவற்றின் சிகிச்சைகளையும் விஸ்தாரமாகப் பல மாதிரிகளில் சொல்லி வைத்திருக்கின்றார்கள். தற்காலத்தில் உலகமெங்கும் பரவியிருக்கும் க்ஷீண ரோகமென்னும் க்ஷய வியாதியானது எக்காலத்திலும் இருந்திருப்பதாய்த் தெரிய வருகின்றது. தற்காலத்தில் சகல தேசத்திய வைத்திய நிபுணர்களும் மேல்சொல்லிய வியாதிக்குச் சிகிச்சை செய்வதற்காக அபரிமிதமான

*



பணங்களைச் செலவிட்டு ஔஷதங்களைக் கண்டுபிடிக்க முயற்சிசெய்து வருகின்றார்கள். எனினும் நாளதுவரையில் மேற்படி வியாதிக்குத்தக்க ஔஷதம் கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் நமது முன்னோர்களோ இதற்கு ஔஷதம் கண்டுபிடிக்க முயற்சிசெய்து, அதன் முடிவை அடைந்த பிறகே இவ்வியாதியைக் கண்டுபிடித்தார்கள். மேலும் இவ்வியாதி உலகில் தலைகாட்டா வண்ணம் ஜனங்கள் நடந்துகொள்ளும்படி அவர்களைத் திருத்திச் சிலநெறிகளில் அமைத்தார்கள். அந்நெறிகள் வைதீக ஆசாரம் என்பவைகளாம். க்ஷயரோகம் இன்னாருக்கு இன்னகாரணத்தால் உண்டாகுமென்பதைப் பெரியோர் விளக்கி யிருக்கிறார்கள். பாலியத்திலேயே விவாகமான அதிபால்ய ஸ்திரீயாகிய 12, 13 வயதுள்ள பெண்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும், வெட்டைச்சூடு அதிகரித்த ஸ்திரீபுருஷருடைய விந்துவில் உண்டாகும் குழைந்தைகளுக்கும், காபி, டீ, உப்புமா இவைகளை அதிகமாக உபயோகித்துவரும் குழந்தைகளுக்கும், கணச்சூடு என்னும் வியாதி சிறுவயதிலேயே உண்டாய்விடுகின்றது. அத்தகையவர்களுக்கு மலச்சிக்கல், இருதய படபடப்பு, சரீரம் காய்தல் முதலிய குணங்கள் சிறுவயதிலேயே காணப்படும். முற்காலத்தவர் மேல்படி குழந்தைகளுக்குப் பேயன் வாழைப் பழத்தில் சிற்றாமணக்கு எண்ணெய் கலந்து சூரியபுடத்தில்வைத்து அந்த எண்ணெயும், கூழ்ப்பாண்டகிருதமும், கூழ்ப்பாண்டலேகியமும் கொடுத்து வந்தார்கள். அதனால், இந்த க்ஷய வியாதி தலைகாட்டாமல் இருந்தது. இப்போதுள்ளார் அதை விடுத்து மீன் எண்ணெயும், சுத்தம் செய்த கிரிசினாயில் எண்ணெயும் குழந்தைகளுக்கு உபயோகப்படுத்தி வருவதால் நாளடைவில் உஷ்ணம் அதிகரித்து 18, 19 வயதிலேயே க்ஷய வியாதி காணப்படுகின்றது. வியாதி கண்டபிறகு அவ்வியாதிக்கு வைத்தியர்களால் சிகிச்சை செய்யப்பட்டு வருகின்றது. இதைவிட வியாதி வருவதற்குமுன் செய்யும் சிகிச்சையே மேலானதாகும். தற்போதுள்ள ஜப்பான் தேசமானது ஜனத்தொகையிலும், நாகரீகத்திலும், சரீரதிடத்திலும் விருத்தியாய்க்கொண்டு வருவது குன்றின்மேலிட்ட விளக்காம். அத்தேசத்தில் க்ஷய வியாதி நம் தேசத்தி லிருப்பதுபோல் இல்லையெனவே தெரிகின்றது. என் எனில் நம் தேசத்தவர்களைப்போல் அத்தேசத்தவர்கள் பாலிய விவாகம் செய்வதில்லை. அத்தேயத்தில் ஒருபெண்ணானவள் 18-வயது வரையில் தாய் தகப்பன் வசத்தில் இருந்து கல்வி முதலியவைகளைக் கற்ற பிறகு 18-வயது முதல் 21-வயது வரையில் அன்னியர் வீட்டில் இருந்து, புருஷனிடத்தில் மனைவி எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைப் பிரத்தியக்ஷ அனுபவமாகக் கற்றுக்கொள்ளவேண்டும். பிறகு தாய் தகப்பன் வசம் வந்து 26-வயது வரையில் இருந்து, 26-வயதிற்குப் பின் 30-வயதுள்ள புருஷனை மணம் செய்துகொள்ளவேண்டும். இவ்வழக்கம் அத்தேசத்தாரால் அனுஷ்டிக்கப்படுகிறது. இதனால் தம்பதிகளுடைய சரீரம் முதிர்ந்து திடகாத்திரமாய் உள்ள காலத்தில் கருதரித்துச் சிசுக்கள் உண்டாகின்றன. இப்படி யுண்டாவதால் அத்தேசக்குழந்தைகள் பலசாலிகளாகவும், வியாதியற்றவர்களாயும், தீர்க்காயுளுடையவர்களாயும் காணப்படுகிறார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாக ஒன்று கூறுவாம்: ஒருவன் தன் தோட்டத்தில் ஓர் மாஞ்செடியையோ அல்லது வேறு எவ்வித பழச்செடியையோ வைத்து, அதற்கு மூன்றுவருஷ பரியந்தம் நீர்ஊற்றி, அதை வளர்த்தால் மூன்றாவது வருஷத்தில் மேல்படி செடியானது அவ்விளம்பிராயத்திலேயே பூப்பூத்துக் காய்காய்க்க ஆரம்பிக்கிறது. அத்தகைய பூக்களைக் காய்க்க ஒட்டாமல் அச்செடியின் சொந்தக்காரன் கிள்ளி எறிந்துவிட்டு 5-வருஷம் வரையில் அதேபோல் செய்துவந்தால் ஷை செடியானது

பலத்தை அடைந்து பின்னால் அதிக பலனைக் கொடுக்கிறது. இது சகலருக்கும் தெரிந்ததே. இதைப்போல், சிறுவர் சிறுமிகளிடத்திலும், பால்யவயதில் போக இச்சை விருத்தியடையாவண்ணம் பெற்றோர்கள் அவர்களைக் காத்து 25-வயதிற்குப் பிறகு அவர்களின் கலியாணத்துக்கு இடம் தருவார்களானால் நம் தேசத்தவர்களும் திடசரீரர்களாயும், நோயற்றவர்களாயும், வீரர்களாயும் காணப்படுவார்கள்.

நம் தேசத்தவர்களைப்போல் பால்யவிவாகம் ஜப்பான்தேசத்தில் நடக்காதபடி ராஜாங்கத்தாரின் சட்டம் அமையப்பெற்றிருப்பதால் அத்தேசங்களில் பால்ய விவாகத்திற்கு இடமில்லாமல் போய்விட்டது. அத்தகைய சட்டத்தை நம் தேசத்திலும் ஏற்படுத்துவது அத்யாவசியமாகும்.

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

# பெண்மக்கள் பகுதி.

## மாதரும் குடும்பமும்.

(322-ம் பக்கத் தொடர்ச்சி).

கணவனோடு மாறுபட்டு நடப்பதால் மாதர்களுக்கு எவ்வித நற்பயனுமுண்டாவதில்லை; துன்பமே பயனாகும். ஒரு வஸ்துவை இரண்டு கண்களும் எப்படி ஒருமித்துப் பார்க்குமோ அதுபோலவும், ஒரு வண்டியிற் பூட்டப்பட்ட இரண்டு எருதுகளும் எப்படி ஏகோபித்து அந்த வண்டியையிழுத்துச் செல்லுமோ அதுபோலவும் கணவனும் மனைவியுமாகிய இருவரும் வேறுபட்ட மனமுள்ளவராயிராமல் மனவொற்றுமையுடன் இல்லற காரியங்களை நடத்தவேண்டும். அப்பொழுதுதான் அக்காரியங்கள் ஒழுங்காக நடைபெறும். இதற்காகவே ஆன்றோர் பல சட்டதிட்டங்களை ஏற்படுத்தினர். அச்சட்டதிட்டங்களில் முக்கியமானது மனைவியானவள் கணவன் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பதேயாகும். வீட்டுக் காரியங்களைச் செவ்வையாகச் செய்தலும், வரவுக்குத்தக்கபடி செலவு செய்து பண்டங்களைப் பாழாக்காமல் செட்டாகவும் விதரணையாயும் குடித்தனத்தைப் பாங்குபெற நடத்தலும், குழந்தைகளை ஆரோக்கியமுள்ளவர்களாகவும் நல்லொழுக்கமுடையவர்களாகவுமிருக்கும்படி பார்த்துக்கொள்ளுதலுமே அவர்களின் தொழில்களாயிருக்கவேண்டும். மற்றப்படி கணவனுடைய காரியங்களிற் சிறிதும் தலையிடலாகாது. வியாபாரமோ விவசாயமோ கைத்தொழிலோ வேறு எவ்வித உத்தியோகமோ செய்து பணம் சம்பாதித்தலும், குடும்பத்திற்குத் தேவையான பொருள்களைக் குறைவின்றி அமைத்தலும், தனக்குப் பிற்காலத்திலுதவுவதற்காகப் பணத்தைச் சிறிதளவேனும் தன் வருவாய்க்குத்தக்கபடி சேர்த்துவைத்தலும் முதலாகிய வெளிக்காரியங்களைக் கணவன் கவனிக்கவேண்டியவனாவான். தேவையானால் இக்காரியங்களில் மனைவியும் கணவனுக்கு உதவிபுரியலாம். இவ்வாறு பலவகையிலும் புருஷனுக்கு உற்ற துணையாயிருப்பவள் மனைவியாவாள். இதனால்தான் அவள் வாழ்க்கைத் துணையென்னும் பெயரும் பெற்றனள்.

இனி, இல்லறத்தை ஒழுங்குபெற நடத்தும் முறையைப்பற்றிச் சிறிது ஆராய்வாம்:



இல்லறம் துறவறம் என்னும் இருவகை யறங்களுள் இல்லறமே சிறந்ததென்பது பெரியார் கொள்கை. 'இல்லற மல்லது நல்லற மன்று' என ஒளவைப் பிராட்டியாரும் 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை' எனச் செந்நாப் புலவரும் கூறியிருத்தலும் காண்க. இல்லறம் நல்லறம் என்பது வெறும் வாய்ச்சொல்லாலல்ல. நடக்கையால், இல்வாழ்க்கைக்குரிய இயல்போடு வாழவேண்டும். இது மாத்திரமல்ல. ஒவ்வொன்றும் அப்படியே. நன்மார்க்கத்தைச் சேர்ந்த எத்தொழிலும் அதற்குரிய இயல்பின்படி செய்தால்தான் நன்மைதரும். ஆகவே இல்வாழ்க்கையும் அதற்குரிய இயல்பின்படி நடத்தப்படவேண்டும். இல்வாழ்க்கைக்கு முக்கிய பயனாவது அறமேயாம்; அதாவது தருமமே யாகும். இன்னும் சரியாகச் சொல்லவேண்டுமாயின் பரோபகாரம் என்று சொல்லலாம்.

இல்வாழ்வோர்க்குப் பணம் சம்பாதித்தல் முக்கிய தொழிலாகும். அது இல்லையானால் தருமம் செய்தல் இயலாதன்றோ? பணம் சம்பாதிக்கும் பொழுது பழிக்குப் பயந்து அதைத் தேடவேண்டும்; எந்த வகையிலும் பிறர் சொத்தை யபகரித்தலும், அதிகவேலை வாங்கிக்கொண்டு வாயடி கையடியடித்துக் கூலியைக் குறைத்துக் கொடுத்தலும், சொற்பவேலைக்கு அதிக கூலிவாங்குதலும், அதிகலாபம் வைத்துப் பண்டங்களை விற்று வியாபாரம் செய்தலும், அதிக வட்டிவாங்குதலும், வட்டிக்கு வட்டி வாங்குதலும் முதலாகிய காரியங்கள் பழியை யுண்டாக்குவனவாம்.

(தொடரும்.) பூ. ஸ்ரீநிவாசன், தமிழ்ப்பண்டிதர், சித்தூர்.

# விவசாயப் பகுதி.

## விவசாயம்.

இவ்வருடம் ஆவணிமாதம் ஆனந்தபோதினி சஞ்சிகை 164-165-166-167-பக்கங்களில் விவசாயத்தைப்பற்றி நாம் எழுதியவற்றைப் பலவிடங்களில் உள்ளவர்கள் பார்த்து ஷை விவசாயத்தைப்பற்றி மீண்டும் விவரித்து எழுதும்படி கடிதங்கள் வரைந்துகொண்டிருக்கின்றமையால் மறுபடியும் விவசாயத்தைப்பற்றிய இவ்வியாசம் எழுதவேண்டுவதாயிற்று.

விவசாயமானது, யாவற்றினும் மேலான தொழிலாய் இருந்தும், தற்காலத்தில் விவசாயத் தொழில் செய்யும் மாதிரி மாறுபட்டிருப்பதாலும், விவசாயத் தொழில்செய்யும் சகலர்களுக்கும் விவசாயத்திற்கு மாடுவாங்குதல், ஆள்களைவைத்து வேலைவாங்குதல் முதலியவற்றால் ஏற்படக்கூடிய அதிகச் செலவுகளாலும், மழையில்லாமையாலும், விவசாயக் கல்வி இல்லாமையாலும், நஷ்டம் ஏற்படுகின்றபடியால் அப்பயிர்த்தொழிலானது நம் நாட்டில் கேவல ஸ்திதி அடைந்து வருகின்றது. இன்னும் நம் தேசத்தவர்களுக்கு விவசாயத்தில் நம்பிக்கை உண்டாகாவண்ணமும் செய்துவிட்டது. நம்நாட்டார்களை ஈனஸ்திதியில் கொண்டுவந்து விட்டுவிட்டது. நமது நாடானது பிறநாடுகளைப்போல் செழித்தோங்குதற்கு முதலில் நாம் செய்ய வேண்டியகடமை யாதெனில் நமதுதேசத்தில் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் விவசாயக் கல்விச்சாலைகளை ராஜாங்கத்தார்கள் ஏற்படுத்தும்படி தற்காலத்திலுள்ள கவுன்சில் மெம்பர்கள் சகலரும் ஒன்றுகூடிக் கட்சிபேதங்களினின்று விடுபட்டு ஏகமனதாய் வற்புறுத்துதல் வேண்டும். ஒரு சிறிய தேசமாகிய

பெல்ஜியம் என்னும் ராஜ்ஜியத்தில் 26 விவசாயக் கல்விச்சாலைகள் இருக்கின்றனவாம். ஒரு சிறியதேசத்தில் 26 விவசாயக் கல்விச்சாலைகள் இருக்கும்பக்ஷத்தில் நமது இந்தியாவாகிய இப்பெரியதேசத்தில் எத்தனை விவசாயக் கல்விச்சாலைகள் இருக்கவேண்டும் என்பதை இதைக்கண்ணுறும் ஒவ்வொருவரும் யூகித்துக்கொள்வாராக. தற்காலத்தில் நமது இராஜாங்கத்தார், சென்னை ராஜதானியில், கோயம்புத்தூர் ஜில்லாவில் "அக்ரிகல்சர்காலேஜ்" என்னும் விவசாய பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி அதன்மூலமாக விவசாயிகளுக்குப் பயனை உண்டுபண்ணவேண்டிப் பிரசுரங்களை வெளிப்படுத்துகிறார்கள். அப்பிரசுரங்களின் மூலம் விவசாயிகள் ஆங்காங்குச் சென்று தக்கைப்பூண்டைப் பயிரிட்டுச் சாகுபடிசெய்யும் நிலங்களுக்கு எருவாக உபயோகிக்க வேண்டுமென்றும், தக்கைப்பூண்டின் எருவை உபயோகித்துப் பயிரிட்டவனுக்கு அதிக நெல் விளைவு கிடைத்து அவன் வயிறு நிறைந்து ஏப்பம் விடுவானென்றும், தக்கைப்பூண்டுஎருவை நிலத்துக்குப் போடாதவனுக்கு நெல் விளைவின்றி அவன் வயிறு காய்ந்து வயிற்றைப் பிசைந்துகொண்டு இருப்பானென்றும் தெரிவித்து, அவ்விஷயங்களைப் படங்களினாலும் விளக்கிக்காட்டிக்கொண்டு வருகின்றார்கள். ஆனால் இதுவரையில் இத்தகைய பிரசுரத்தாலும், உபன்னியாசங்களினாலும் விவசாயிகளுக்குப் பெரும்பயன் உண்டாயிருப்பதாய்த் தெரியவில்லை. அவ்வவ்வூர்களின் மண்களில் குறைந்துள்ள சத்துக்களையும், அதிகரித்துள்ள சத்துக்களையும் ஆராய்ந்து அவற்றுள் விவசாயத்துக்குவேண்டிய என்னென்ன சத்துக்கள் எவ்வெவ்வளவு இருக்கவேண்டுமோ அவ்வளவிருக்கும்படியான உரங்களை நிலங்களில் சேர்த்தால் பயனுண்டாகுமேதவிர, யாவற்றிற்கும் தக்கைப்பூண்டு போடுவதால் மாத்திரம் பெரும்பயனுண்டாய்விடமாட்டாது. இதனால் சாதாரணமாய்த் தற்காலத்தில் உபயோகித்துக்கொண்டுவரும் சாம்பலைவிடக் கொஞ்சம் மேலான சத்து உண்டாகுமென்று நினைக்கலாமே ஒழிய விசேஷ பலனுண்டாகுமென்று நினைக்க முடியாது. தற்காலத்திலுள்ள கோயம்புத்தூர் விவசாயப் பள்ளிக்கூடமானது மேல்நாட்டு விவசாயப் பள்ளிக்கூடங்களுக்கு ஒப்புள்ளதென நினைக்கக்கூடியதாயில்லை. ஆதலால் நமது தேசத்தில் ஒவ்வொரு ஜில்லாக்களிலும் மேல்நாட்டு விவசாயப் பள்ளிக்கூடங்களைப்போன்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்திப் பிறநாடுகளிலிருந்து, தேர்ந்த விவசாய உபாத்தியாயர்களை வரவழைத்து ஆங்காங்குள்ள மாணவர்களுக்கு இலவசமாக விவசாயத்தொழிலின் அரிய விஷயங்களை அவர்கள் போதிக்கும்படியான ஏற்பாட்டை இராஜாங்கத்தார் செய்யும்படி அவர்களைக் கேட்டுக்கொள்ள கவுன்சில் மெம்பர்கள் தீர்மானிக்கவேண்டும். தற்காலத்தில் விவசாயிகளிடம் வரி வசூலிக்கும் சட்டமுறைமைகள் மாற்றப்படவேண்டிய ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். சில விவசாயிகள் அகால மழையினால் முதல்தர வரி வசூலிக்கும் நிலங்களில், மூன்றாந்தரம், நான்காந்தரம் வரி வசூல் செய்யும் நிலங்களில் பயிர் செய்வதுபோல் புழுதிக்கால் பயிரென்னும் புன்செய்ப் பயிர்செய்து வருகின்றார்கள். அத்தகைய நிலங்களில் விளைவு குறைவாயிருந்தும் அதற்கு முதல் நம்பர் தீர்வை வசூலிக்கப்படுகின்றது. இவ்வாறு முதல்தர ஏரியின் ஜலத்தைக் குடிகள் நிலங்களுக்குப் பாய்ச்சாமல், சகல நஷ்டங்களுக்கும் உட்பட்டு நம்பிக்கையற்ற மானாவாரிப் பயிர்செய்த நிலங்களுக்கு முதல்தரத் தீர்வை வசூலிப்பது நியாயமல்லவென்று ரெவின்யூ இனிஸ்பெக்டர், தாசீல்தார், கலெக்டர் முதலானவர்களுக்கு மனுச் செய்து கொண்டபோதிலும் மேற்படியார்கள் கவனிப்பது கிடையாது.

ஒருகாலத்தில் ஏற்படுத்திய விதிப்படி, நன்செய் நிலங்களில் புன்செய்ப் பயிர்செய்த காலங்களிலும் அவற்றிற்கு நன்செய்த் தீர்வையை வசூலிப்பது சட்டமாய் இருப்பதால் அதைமாற்றிப் பயிர்களுக் கேற்றவாறு தீர்வை விதிக்கும்படியான சட்டம் ஏற்படுத்தும்படியான முயற்சி செய்யவேண்டும். நன்செய்ப் பயிராவது, புன்செய்ப் பயிராவது ஜலத்தட்டினால், தொண்டையில் கதிர் இருக்கும்பொழுது சாவியாய்விட்டாலும், கதிரில் நெல் பிடித்தும் சொற்ப பலிதம் கிடைத்தாலும் இத்தகைய பயிர்களுக்கு அவற்றின் நிலைமைக்குத் தக்கபடி வரி வஜா செய்யும்படி சட்டத்தை மாற்றுதல் வேண்டும். சில நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் பெரும் பணம் செலவுசெய்து கிணறுகள் தோண்டி அக்கிணற்று ஜலத்தின் ஆதரவால், மழை இல்லாதகாலத்திலும் மழை பெய்யும் என்று அந்நிலங்களில் பயிரிடுகின்றார்கள். அப்பயிர்கள் கிணற்றிறைவை ஜலத்தாலேயே விருத்தியடைகின்றன. தெய்வகதியாய், பயிர் வளர்ந்தபின்னால் சொல்ப மழை பெய்கிறது. பெரும்பான்மையும் கிணற்றுத் தண்ணீராலேயே அப்பயிர் விளைந்து அறுவடையாகிறது. இத்தகைய நிலங்களுக்கும் அதிகாரிகள் ஏரி ஜல பாய்ச்சலின் தீர்வையை வசூல் செய்துவிடுகிறார்கள். மேல்படி கிணறுகளும் இல்லாமல் பயிர் செய்யாதிருக்கும் நிலங்களுக்கும் தீர்வை கட்டும்படி வற்புறுத்துகிறார்கள். இப்பேர்ப்பட்டவைகளை உத்தியோகஸ்தர்கள் குடிசொஸ்தி என்று சொல்லுகின்றார்கள். இப்படி மூன்று வருஷம் கழிந்தால் மேல்படி நிலங்களை சாஸ்வததாச என்று எழுதி அவற்றிற்கு சதாகாலமும் வரி வசூலித்து வருகின்றார்கள். இத்தகைய சட்டங்களை மாற்றி அமைத்தல் தற்சமயம் இன்றியமையாததாய் இருத்தலால், கவுன்சில் மெம்பர்கள் அவ்வாறே மாற்றி யமைக்க வேண்டுமாறு பிரேரேபனை செய்து தீர்மானிக்கவேண்டியது முதல் கடமை. இக்கடமையைச் செய்தால் குடிகளின் வயிற்றுக்குச் சிறிய அளவு ஆகாரம் கிடைத்ததாகும். அதன்பிறகு குளிர் வெயில் முதலானவைகள் படாமல் சரீர அவயவங்களையும் மூடிக்கொள்ளும்படியான ஆடை முதலியவற்றைத் தேடும் விஷயங்களில் நமது மகான் காந்தி அவர்கள் கூறுகின்றபடி முயற்சித்து நூல் நூற்றல், துணி நெய்தல் முதலிய இரண்டாவது தொழிலையும் கைக்கொள்ளும் பக்ஷத்தில் நமது தேசம் பிறதேசங்களைப்போல் செழித்து ஓங்குமெனச் சொல்லலாம்.

டாக்டர். மே. மாசிலாமணி முதலியார்.

---

## ஆனந்தம்.

ஆனந்தமென்னும் இன்பத்தை மனிதராய்ப்பிறந்த, யாவரும் விரும்புவது உண்மை. அவ்வானந்தங்கள் எவ்வெக்காலத்து எவ்வெக்காரணத்தாலேற்படுகின்றன வென்பதையும், அவற்றுள் நிலைபெற்றது இன்னது, நிலையற்றது இன்னது என்பதையும், இகபரமிரண்டிலும் இருப்பதாகிய வானந்தமின்னதென்பதையும் நாம் அறியவேண்டிய தவசியமாகும்.

மனிதர் அன்னை வயிற்றினின் றவனிநோக்கிப் பிறந்தபோது பசிதீரப் பால் குடிப்பதாலும், சற்று மனிதர் முகந்தெரிந்து தவழுங்காலத்தில், பொம்மை, கிலுகிலுப்பை முதலிய விளையாட்டுச் சாமான்களை வைத்து விளையாடுவதனாலும், நடந்து ஓடியாடுங்காலத்துச் சிறியவண்டி பந்து முதலியவற்றின் விளையாட்டினாலும், பள்ளியில் [illegible] தர்களுடன் கூடியாடுவதாலும், பிறகு விவாகமானவு [illegible] லாபத்தினாலும், தமக்குக் குழந்தை பிறந்தபின் [illegible] ல்லாலும், முறையே அவர்க்கு ஆனந் [illegible] டாகின்றது. இது [illegible] யற்ற

187478

ஆனந்தமாம். ஆகையால் நிலையுற்ற வானந்த மியாதென்றுணர்ந்து அதை யனுபவிக்க யாவரும் விரும்பாதிரார்.

மனிதர் ஓதற்குணர்ந்தபின், அரியநூல்களை வாசிப்பதாலும், கற்றோரிடம் பழகுவதாலும் ஆனந்த முண்டாகின்றது. இதுவே நிலைபெற்ற ஆனந்தமாம். இது, மனிதரின் ஆயுள்பரியந்தம் இடைவிடாது மனத்தினின்று நீங்காமலும், மனிதர் நூல்களைப் படிக்கப் படிக்க விருத்தியாகி அவர்களை நற்செய்கையிற் புகுத்தி, ஞானமடையச்செய்து, பரத்தில் மோக்ஷானந்தத்திலும் சேர்க்கக்கூடியதாதலால், இதுவே இகபரமிரண்டிலும் நிலைத்திருப்பதாம். இது தவிர மற்ற ஆனந்தங்களெல்லாம் பயனற்றனவாம். ஆதலின், அக்கல்வியானந்தத்தையே நாம் அடையவேண்டும். எனினும் தமிழ்க்கல்விக்கதிகப் பெருமையில்லாத விக்காலத்தில், கல்வியானந்தத்தை யடையும்படி அரியநூல்களைப் போதிக்கவல்ல ஆசிரியர்களையும், கலாசாலைகளையும் காண்பது அரிதாயிருக்கின்றது. ஆனந்தபோதினி முதலிய சில வெளியீடுகளே கல்வியை எளிதில் போதிக்கக்கூடியனவா யிருக்கின்றன. அவற்றுள் ஆனந்தபோதினி சிறந்ததாகும். ஆதலின், அதனை ஆவலுடன் வாசிக்கின் அதுவே தக்க ஆசிரியனாய்ப் பல அரிய நூல்களின் கருத்துக்களை யுணர்த்தி ஆனந்தத்தை யுண்டாக்குமென்பது, நிச்சயம் ! நிச்சயம் !! நிச்சயம் !!!

சா. கா. அப்துல் ரெஜாக், திருபுவனம்.

---

## அறிஞரின் அமுதமொழிகள்.

(327-ம் பக்கத் தொடர்ச்சி.)

46. A virtuous woman is a crown to her husband : but she that maketh ashamed is as rottenness in his bones *Bible.*

கற்புள்ள ஸ்திரீ, தன் புருஷனுக்குக் கிரீடம்போல் உயர்வுகொடுக்கக்கூடியவளா யிருக்கிறாள்; புருஷனுக்கு இழிவை உண்டுபண்ணுகிறவளோ அவனுக்கு எலும்புருக்கியாயிருக்கிறாள்.
(பைபில்)

47. The sun can give heat and light to the whole world, but it can do nothing when the clouds shut on its rays. Similarly, so long as egoism is in the heart, God cannot shine upon it *Sri Ramakrishna.*

சூரியன் உலக முழுமைக்கும் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் கொடுக்கிறது; ஆனால் மேகம் அதன் கிரணங்களை மறைத்துவிட்டால் அது அவ்வாறளிக்க முடியாது. அதுபோல் மனதில் அகங்காரம் உள்ள வரையில் ஈசுவரப் பிரகாசம் அதில் தோன்றாது.
(ஸ்ரீ-இராமகிருஷ்ணர்)

48. Forbade to wade through slaughter to a throne,
And shut the gates of mercy on mankind *Gray.*

[illegible]செய்து ராஜ[illegible]விக்கு வருவதை விட்டுவிடு; மனிதர் மீது ஈவிரக்க மில்லாமலிராதே.
(கிரே)



49. All the world's a stage,
And all the men and women merely players:
They have their exits and their entrances ;
*Shakespeare.*

உலகமே நாடகமேடை; அதிலிருக்கும் ஆடவர்களும் ஸ்திரீகளும் வெறும் நடிகர்கள்; இந்நடிகர்கள் அம்மேடையில் தோன்றுவதும் மறைவதுமா யிருக்கிறார்கள். (அதாவது ஆண்களும் பெண்களுமாகிய மனிதர்கள் உலகத்தில் பிறப்பவர்களும் இறப்பவர்களுமா யிருக்கிறார்கள்.)
(ஷேக்ஸ்பியர்)

50. Truth pierces the clouds, it shines as the sun, and, like it, is imperishable *Napoleon*

சூரியன் மேகத்தை ஊடுருவிச் செல்கிறது; அதேபோல உண்மையும் (மேகத்தைப் போன்று மறைக்கக்கூடிய அநேகம்) சூழ்ச்சிகளையும் கடந்து செல்லுகிறது; அந்தச் சூரியனைப்போலவே பிரகாசிக்கிறது; அதைப்போலவே நிலை நிற்கிறது.
(நெப்போலியன்)

51. O Liberty ! liberty ! how many crimes are committed in thy name *Madame Roland.*

ஓ சுதந்திரமே ! சுதந்திரமே !! உன் பேரால் எவ்வளவு ஏமாற்றங்களாகிய குற்றங்கள் செய்யப்படுகின்றன.
(மாடேம் ரோலண்ட்)

52. Sceptre and crown
Must trumble down,
And in the dust be equal made
With the poor crooked scythe and spade *J. Shirley.*

(மரணத்தால் அரசருடைய) செங்கோலும் கிரீடமும் நிலைதளர்ந்து விழுந்துவிடவேண்டியவைகளே; மண்ணில், ஏழைகளுடைய அரிவாள்களோடும் மண்வெட்டிகளோடும் அவை சமமாக்கப்படுகின்றன. (அதாவது மரணமடைந்தபின் அரசர்களும் ஏழைகளும் சமமே.)
(ஜெ. ஷேர்லி)

53. Enter not into the path of the wicked and go not in the way of evil men *Bible.*

துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியாதே; தீயோருடைய வழியில் நடவாதே.
(பைபில்)

54. Lives of great men all remind us
We can make our lives sublime *Longfellow.*

கீர்த்திபெற்ற எல்லா மகான்களுடைய சரித்திரங்களும், நாமும் அவ்வாறு உயர்ந்த பதவியை யடையவேண்டுமென்பதை நினைப்பூட்டுகின்றன.
(லாங்பெல்லோ)

(தொடரும்.)

A. P. இராமன் B. A.

# நாவல் பகுதி.

## அம்பாலிகை அல்லது அதிசய மரணம்

(333-ம் பக்கத் தொடர்ச்சி.)

**கறுப்:**—"நான் இரண்டு மூன்று நிமிடங்கள் உன்னோடு தனியே பேசவேண்டும்" என்றான்.

**ஆனந்த:**—உடனே தன் நண்பர்களை வெளியில் அனுப்பிவிட்டான்.

கறுப்பண்ணனும் ஆனந்தலிங்கும்மட்டும் இருக்கநேர்ந்ததே கறுப்பண்ணன் ஆனந்தலிங்கை நோக்கி,

"நீ என்னிடம் வரும்போதே மனோகரனிடம் அமர்ந்திருந்தாய்" என்றான்.

**ஆனந்:**—அப்படியில்லை.

**கறுப்:**—நீ மனோகரனை யெப்போது முதலில் சந்தித்தாய்?

**ஆனந்:**—அவன் சவப்பெட்டியருகில் நீ கொலைபாதகன் என்று கூறினனே அப்போதுதான் அவனைச் சந்தித்தேன்,

**கறுப்ப:**—சரி; என்காலம் முடிந்துவிட்டது.

ஆனந்தலிங் வியப்போடு "உன் காலம் முடிந்துவிட்டதா?" என்றான்.

**கறுப்:**—ஆம். ஆயினும் இப்போதுகூட நீ பெரிய ஆஸ்தியைச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

**ஆனந்.**—அப்படியா! கடவுள் தயவால் எனக்குப் போதுமான சொத்திருக்கிறது.

**கறுப்:**—அம்பாலிகையின் ஆஸ்தி யெவ்வளவென்று உனக்குத் தெரியுமா?

**ஆனந்:**—தெரியாது.

**கறுப்:** —இருபதுலட்சம் இருக்கிறது. இன்னும் வேண்டுமாயின் நீயும் நானும் அதில் பேர்பாதியைப் பங்கிட்டுக்கொள்ளலாம். அதுவும் கௌரவமான நியாயவழியில்.

**ஆனந்:**—நீ யுன் ஜன்மத்தில் கௌரவமும் நியாயமுமான ஒருவேலையேனும் செய்திருப்பாயென்று நான் கருதவில்லை.

**கறுப்:**—அப்படியாயின் நீ யென் ஏற்பாட்டிற்குச் சம்மதிக்கமாட்டாயோ?

**ஆனந்:**—ஒருகாலும் சம்மதியேன்.

**கறுப்:**—அப்படியானல் நான் சிறைச்சாலைக்கு வேண்டுமாயினும் செல்வேனே யொழிய உன்னையும் மனோகரனையும் அச்சொத்தை யடைய விடமாட்டேன்.

ஆனந்தலிங் புன்னகையோடு "நீ அப்படிக் கருதவேண்டாம். நான் என்வேலையை யறைகுறையாய்ச் செய்யவில்லை. சிலநாட்களாய் உன் நண்பனாகிய லாயர் என்பட்சத்தில் உதவியாயிருந்து வருகிறான்" என்றான்.

இம்மொழிகளைக் கேட்டதே கறுப்பண்ணன் திகிலடைந்தான். அவன் முகம் வெளுத்துவிட்டது. "ஆனந்தலிங் தன் வேலையை அறை குறையாய்ச் செய்யவில்லை, நமக்கு எங்கும் எள்ளளவுகூடச் சந்துவிடாமல் நம்மைப் பூரணமாய்த் தன்வலையில் சிக்கச்செய்துவிட்டான்" என்று தெரிந்துகொண்டான். ஆனந்தலிங் அவன் மிரள மிரள விழிப்பதைக்கண்டு,



"நீ புத்திசாலியாயிருந்தால் இதோடு உன்வரையில் தப்பித்துக்கொள்ள ஏற்பாடு செய்துகொள்" என்றான்.

**கறுப்:**—நான் என்ன ஏற்பாடு செய்துகொள்வேன்?

**ஆனந்:**—நீ செய்த குற்றங்களுக்குத்தக்க தண்டனையை யனுபவியாது தப்பித்துக்கொள்ள இன்னும் உனக்கொரு வழியிருக்கிறது.

**கறுப்:**—அதனல் ஒரு தண்டனையுமின்றித் தப்பித்துக்கொள்ளலாமோ?

**ஆனந்:**—சில நிபந்தனைகளின்மேல் அப்படியே தப்பித்துக்கொள்ளலாம்.

**கறுப்:**—அந்நிபந்தனைகள் எவை?

**ஆனந்:**—நீ எல்லாச்சங்கதிகளையும் நடந்தது நடந்ததுபோல் ஒப்புக்கொள்ள வேண்டும்.

**கறுப்:**—அப்படியானல் நீ யொரு கேள்விக்குமட்டும் விடை யளிக்க வேண்டும்.

**ஆனந்:**—எனக்குப் போதுமான அவகாசமிருப்பதால் எத்தனை கேள்விகளுக்கேனும் பதில் கூறுவேன்.

**கறுப்:**—மெய்யான மரணசாதனம் உன்கையில் சிக்கிவிட்டதா?

**ஆனந்:**—இன்னுமில்லை. ஆனல் கூடியசீக்கிரத்தில் என்னிடம் வந்து சேரும்.

**கறுப்:**—அப்படியாயின் அதன் நிபந்தனைகள் தெரியுமோ?

**ஆனந்:**—பெரும்பயங்கரம்; தெரியும்.

**கறுப்:**—அதன்படி எனக்கு இருபத்தையாயிரம் பவுன் நியாயப்படி சேர வேண்டு மென்பது தெரியுமா?

**ஆனந்:**—ஆகா தெரியும்.

**கறுப்:**—உன் ஏற்பாட்டின் படி நான் நடந்துகொண்டால் அந்த 25 ஆயிரம் எனக்குக் கிடைக்குமா?

(தொடரும்)

**ஆரணி-குப்புசாமி முதலியார்.**

# விநோதப் பகுதி.

**பலகாரத் தடுமாற்றம்:**—சில நாகரிகப் புதுமதி படைத்த அவதாரபுருஷர்கள் வீண்கௌரவக் காப்பிக்கிளப்புகளில் புகுந்து காப்பி பலகாரம் சாப்பிட வெள்ளைவட்டச் சலவைக்கல் மேஜைமுன் உட்காருகிறார்கள். அங்கே எண்ணிறந்த பலகார தினுசுகளும், குடிவகைகளு மிருப்பதால் அவற்றில் இன்னவைகளைத்தாம் கொண்டு வரச்சொல்ல வேண்டுமென்பது அவர்களுக்கு விளங்கவில்லை. அவர்கள் பரிமாறுகிறவர்களிடம் "சூடாய் என்ன இருக்கிறது?" என்று கேட்கிறார்கள். சப்ளை செய்வோர் ஐந்தாறு தினுசுகளை அடுக்கிச் சொல்லுகிறார்கள். அவர்கள் வேகமாய் மடமடவென்று பாடம் ஒப்பிப்பதால் அவற்றில் இரண்டு மூன்று பெயர்கூட வந்தவர்களுக்கு நினைவில் வருவதில்லை. முடிவில் அவர்கள், "இதென்னடா சனியன் பிடித்த கிளப்புக்கு வந்தோம்; ஒன்றும் விளங்கவில்லை" என்றும், அதையும் வெளிக்குக் காட்டினல் கேவலமாகுமென்றும் அடக்கிக்கொண்டு எல்லாம் தெரிந்தவர்களைப்போல் நடித்து, "ஒரு சுவீட்டும், காரமும் கொண்டுவா" என்று சப்ளையரிடம் சொல்லி அவர்கள் கொண்டுவந்தவற்றைத்தின்று கவலையுடன் கிளப்

புக்காரரிடம் காசைக்கொடுத்துச் செல்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு அனுகூலமாயிருக்கும்படி இப்போது நாகரிகக் கிளப்புக்களில் வெளியாயிருக்கும் பலகாரவகைகளையும், மற்றவைகளையும் நமக்குத் தெரிந்த வரையில் இதனடியில் நாம் விளக்குகிறோம். காப்பிஹோட்டல் நேயர்கள் பத்துநாள் பிரயாசையெடுத்தாவது அவற்றைப் பாடம் பண்ணிக்கொண்டால் கிளப்பில் இஷ்டமானதைக் கொண்டுவரச் சொல்வதற்கு மெத்த அனுகூலம் ஏற்படும்.

**இப்போது விருத்தியடைந்திருக்கும் விநோதப் பலகாரவகைகளாவன:—**

1. இட்டிலி, 2. காஞ்சிபுரம் இட்டிலி, 3. சேமியா இட்டிலி, 4. ரவா இட்டிலி, 5. அவல் இட்டிலி, 6. நெய் இட்டிலி, 7. காபேஜ் இட்டிலி, 8. பூனா இட்டிலி, 9. தோசை, 10. மசாலா தோசை, 11. ரவைத்தோசை, 12. மைசூர் தோசை, 13. ஸ்பெஷல் தோசை, 14. பூரி உருளைக்கிழங்கு, 15. பூரிமசாலா, 16. இட்டிலி குருமா, 17. பொங்கல், 18. சேமியாப்பொங்கல், 19. ரவைப்பொங்கல், 20. ரவா உப்புமா, 21. மைசூர் உப்புமா, 22. உளுந்துவடை, 23. வெங்காயவடை, 24. மசால்வடை, 25. மிளகுவடை, 26. சர்தார்வடை, 27. காபேஜ்வடை, 28. விஜிடபிள்வடை, 29. மைசூர்வடை, 30. முந்திரிப்பருப்புவடை, 31. அறைக்கீரைவடை, 32. மெதுகுவடை, 33. உருளைக்கிழங்குப் போண்டா, 34. மைசூர்போண்டா, 35. பக்கோடா, 36. வெங்காயப்பக்கோடா, 37. முந்திரிப்பருப்புப் பக்கோடா, 38. மெதுபக்கோடா, 39. கரம் பக்கோடா, 40. உருளைக்கிழங்குபஜ்ஜி, 41. வாழைக்காய் பஜ்ஜி, 42. கருணைக்கிழங்கு பஜ்ஜி, 43. கத்திரிக்காய் பஜ்ஜி, 44. வெங்காய பஜ்ஜி, 45. காரசோமாஸ், 46. பம்பாய்த்திரிகோணம், 47. ஓமப்பொடி, 48. காரப்பூந்தி, 49. நெய்யில் வறுத்த அவல், 50. மசாலா பாதுஷா, 51. பம்பாய்சட்டினி, 52. சலவைச்சட்டினி, 53. கோகர்ஜான் சட்டினி, 54. சர்தார் சட்டினி, 55. தேங்காய்ச் சட்டினி, 56. பச்சைமிளகாய்ச் சட்டினி, 57. டொமெட்டோ பச்சடி, 58. வாங்கிபாத், 59. பங்காளபாத், 60. பொட்டெட்டோபாத், 61. காபேஜ்பாத், 62. காலிப்ளவர்பாத், 63. சேமியாகிச்சடி, 64. பகோடா கிச்சடி, 65. பாதம் கிச்சடி, 66. டெக்கான் பிரிஞ்சி, 67. பொட்டெட்டோ புலவு, 68. மசாலை போண்டா, 69. ஆப்ரிகாபிக்கிள்ஸ், 70. வெஜிடபிள் பிக்கிள்ஸ், 71. தயிர்வடை, 72. தயிர்ப்போண்டா, 73. தயிர்ப் பக்கோடா, 74. நெய் முறுக்கு, 75. ரொட்டிரோஸ்ட், 76. ரவாகேசரி, 77. சேமியாகேசரி, 78. ஜவ்வரிசிக்கேசரி, 79. அவல்கேசரி, 80. சேமியா பாயசம், 81. ஐஸ்கிரீம், 82. புரூட்சாலட், 83. மசாலாஹீர், 84. பாதம்ஹீர், 85. பழபுட்டிங், 86. பால்போளி, 87. பூரணபோளி, 88. பாவிந்து, 89. பால்கவ்வா, 90. மால்பூவா, 91. பாதம் அல்வா, 92. கோதுமைப்பால் அல்வா, 93. தம்ரோட் அல்வா, 94. பம்பாய் அல்வா, 95. காசி அல்வா, 96. குலாப்ஜான், 97. ரசகுல்லா, 98. கல்கத்தாரசகுல்லா, 99. மைசூர்பாக், 100. ஜாங்கிரி, 101. ஜிலேபி, 102. லட்டு, 103. ரவாலட்டு, 104. சுருமாலட்டு, 105. பதிர்பேணி, 106, சேமியாபேணி, 107. ஜீராப்பேணி, 108. சொஜ்ஜி அப்பம், 109. கார அப்பம், 110. சோமாசி, 111. சுருள்பூரி, 112. மக்கன் பேடா, 113. தூத்பேடா, 114. மோகன்தால், 115. சங்சர்பாளி, 116. கல்கத்தா சாண்டிவ்ஷ், 117. ஸாகரபாத், 118. டில்லிதர்பார், 119. பாலூசாயி-பாதுஷா, 120. கஜூர், 121. லக்கடி, 122. லவங்கப்பட்டி, 123. திருகுஞ்சு, 124. நான்கத்தாய், 125. கப்-சுப், 126. பம்பாய்காஜா, 127. மலாய்காஜா, 128. கல்கத்தா மேவாசி, 129. சூரத்காரி, 130. சந்திரகலா, 131. சூரியகலா, 132. கோக்கோ, 133. டீ, 134. காப்பி, 135. ஐஸ்கலர் ஷர்பத்வகைகள். (ஊசின மொச்சைப்பயறு).



இவைகள் நம்முடைய ஞாபகத்திற்கு எட்டினவைகள். இன்னும் நினைவிற்கு வாராதவை எத்தனையோ இருக்கலாம். கோதுமைமா, கடலைமா, சர்க்கரை, பால், நெய், எண்ணெய் முதலிய ஐந்தாறு வஸ்துக்களிலிருந்தே நாகரிகமாயையானது இத்தனை வகைகளைக் கிளப்பிவிட்டிருக்கின்றது. இந்த மாயையானது மனிதரின் அறிவு, ஐசுவரியம் எல்லாவற்றையும் ஒருங்கே விழுங்கிவிடக்கூடியது. ஒரு மனிதன் காப்பிசாப்பிடுவதற்கு இத்தனை தினுசுப் பலகாரங்கள் வேண்டுமா என்பதை அறிஞர் கவனித்தால் அவர்க்கு, காப்பிஹோட்டல் அபிமானிகளின் மௌட்டிகத்தன்மை நன்குவிளங்கும். கட்குடியரினும் காப்பிக்குடியர் பேர்போனவர்களென்பதும் தெளிவாகும். கள்ளுக்கடைக்குப்போய் வெளியேறுவோர் பைசா ஊசின மொச்சைப்பயறு வாங்கி வாயில்போட்டுக்கொண்டு போவது வழக்கம்; அவர்களைப்போலவே காப்பிக்கிளப்பில் புகுந்து வெளியேறுவோர் வாங்கிக்கொள்ளத்தக்க (ஊசின மொச்சைப்பயறு) கடைசியில் நம்மால் நூதனமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

## வர்த்தமானக் குறிப்பு.

**வேம்பில் பால் வடிதல்:**—கும்பகோணத்தைச் சார்ந்த திருபுவனத்தில் சிறு பருவமுள்ள வேப்பமரமொன்றில் அதன் மத்தியபாகத்திலிருந்து சில தினங்களாகப் பால் போன்ற வெண்மை நிறமுள்ள ஒருவகைத் திரவம் எப்பொழுதும் வடிந்துகொண்டிருப்பதாகவும், அது சிறிது பால்போன்ற ருசியுள்ளதாயிருப்பதாயும் நமது ஆனந்தபோதினி, 10151-வது சந்தாதார் தெரிவிக்கிறார்.

**குறிப்பு:**—சில வேம்புகளில் கள்வடிவது இயற்கை; இதுவும் வேப்பங்கள்ளாகவே யிருக்கலாம். இது புதுமையானதென்று கூறுதற்கிடமில்லை.

**நாடகசாலைக் கேடுதி:**—முஸ்தபா கமால்பாஷா, அங்கோராவில் கவர்ன்மெண்டை ஸ்தாபித்தபிறகு நாடகசாலைக்கு அதிகாரிகளால் லைசென்ஸ் கொடுக்கப்பட்டு நாடகங்கள் நடந்து வந்தனவென்றும், அவற்றிற்கு உயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த வாலிபப் பெண்களும், பாலிய மாணவர்களும், மூர்த்தஸ்திரீகளும் போய்க்கொண்டிருந்தனரென்றும், அப்படிப்போனதன் பயனாக, சமீபகாலத்தில் இரண்டு வாரங்களுக்குள் கௌரவமான குடும்பத்தைச் சார்ந்த 24-இளம் பெண்கள், வியபசார வாழ்க்கையை விரும்பி வீட்டைவிட்டு வெளியேறிப் போய்விட்டனரென்றும், நடுத்தர குடும்பங்களிலுள்ள பெண்களில், 12-முதல், 18-வயது வரையிலுள்ள 20-பெண்களும் அவ்வாறே அத் தீயநெறியிற் புகுந்து விட்டனரென்றும், இத் தீய சம்பவங்களைத் தடுக்கும் பொருட்டு கான்ஸ்டாண்டிநோபிளில் உள்ள அதிகாரிகள் நாடகச்சாலைகளை அடைத்துவிடக் கட்டளை பிறப்பித்து விட்டார்களென்றும், மேற்படி பெண்கள் தீநெறி புகுந்ததற்கேதுவாய், நாடகபாடம் போதிப்பதாக விளம்பரம் செய்திருக்கும் ஸ்தாபனங்களைப்பற்றி விசாரணை நடத்தப்பட்டிருக்கிறதென்றும், இந்த ஏற்பாடுகளால் கான்ஸ்டாண்டிநோபிளில் உள்ள சிறுமிகட்கு நேரும் தீய ஒழுக்கம் தடுக்கப்படுமென்றும் "டெய்லி நியூஸ்" ஒரு வர்த்தமானம் தெரிவிக்கிறது.

இந்த ஏற்பாடு மிகவும் மெச்சத்தக்கது; நம் தமிழ் நாட்டில் நாடகத்தால் பல வகுப்புப்பெண்களும் தீநெறி புகுதல் எங்கும் அதிகரித்துவந்தும் இங்குள்ள அதிகாரிகள் அதைக் கவனிக்காமல் மகிழ்ச்சியுடன் பார்த்து வரு

# "ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

அக்ஷய ௵ பங்குனிமீ — கலியுகாதி 5028, சாலிவாகனம் 1849,
பசலி 1336—கொல்லமாண்டு 1102—ஹிஜரி 1345
இங்கிலீஷ் 1927 ௵ மார்ச்சுமீ—ஏப்ரல்மீ

| பங்குனி | மார்ச்சு | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | திங் | ஏகா2-8 | பூச26-3 | சித்60 | சர்வமத்வஏகாதசி,நரவலிப் |
| 2 | 15 | செவ் | து6-48 | ஆயி32-30 | சித்60 | பிரதோஷம் [மதுவாதசி |
| 3 | 16 | புத | திர12-8 | மக39-5 | சி39-5அ | விதைவிதைக்க |
| 4 | 17 | வியா | ச○17-55 | பூர46-18 | சி46-18ம | பௌர்ணமி |
| 5 | 18 | வெ | பௌ24-0 | உத்53-35 | சி53-35அ | பங்குனி உத்திரம் |
| 6 | 19 | சனி | பிர30-5 | அஸ்60 | மர60 | பால்குணபகுளம்,கரிநாள் |
| 7 | 20 | ஞா | துதி36-18 | அஸ்1-0 | அ1-0சி | சீமந்தம், பும்சவனம் |
| 8 | 21 | திங் | திரி42-5 | சித்8-15 | பி8-15அ | தானியம் செலவிட |
| 9 | 22 | செவ் | சது47-20 | சுவா15-3 | சி15-3ம | யாத்திரை விலக்க |
| 10 | 23 | புத | பஞ்51-48 | விசா21-23 | சித்60 | கதிரறுக்க, கோடியுடுக்க |
| 11 | 24 | வியா | சஷ்55-3 | அனு26-33 | சி26-33பி | |
| 12 | 25 | வெ | சப்56-43 | கேட்30-25 | ம30-25அ | |
| 13 | 26 | சனி | அ56-40 | மூல32-43 | சித்60 | |
| 14 | 27 | ஞா | நவ54-30 | பூரா33-8 | சி33-8அ | |
| 15 | 28 | திங் | தச50-30 | உத்31-30 | அமி60 | |
| 16 | 29 | செ | ஏ44-40 | திரு28-5 | சித்60 | |
| 17 | 30 | புத | து37-18 | அவி22-55 | பி22-55சி | |
| 18 | 31 | வியா | திர28-40 | சதை16-25 | ம16-25சி | |
| 19 | 1 | வெ | ச●19-10 | பூரட்9-3 | சித்60 | |
| 20 | 2 | சனி | அமா9-25 | உத்1-15<br>ரேவ53-35 | சித்0-3ம | |
| 21 | 3 | ஞா | பிர0-3<br>துதி50-58 | அஸ்46-28 | சித்60 | சைத்ரசுத்தம், சந்திரதரிசனம், யுகாதிபண்டிகை |
| 22 | ஏப்ரல் 4 | திங் | திரி43-3 | பர40-25 | சி40-25ம | கௌரி திரிதியா |
| 23 | 5 | செவ் | சது36-38 | கி※35-55 | சி35-55அ | கிருத்திகை விரதம் |
| 24 | 6 | புத | பஞ்31-55 | ரோ33-8 | சித்60 | உபநயனம், கதிரறுக்க |
| 25 | 7 | வியா | சஷ்29-23 | மிரு32-28 | மர60 | அவமாகம், சஷ்டி |
| 26 | 8 | வெ | சப்28-55 | திரு33-45 | சித்60 | கங்கோற்பத்தி, காதுகுத்த கதிரறுக்க |
| 27 | 9 | சனி | அ30-25 | புன36-55 | சித்60 | பவானி உற்பத்தி |
| 28 | 10 | ஞா | நவ33-43 | பூச41-50 | சித்60 | ஸ்ரீராமநவமி, ஸ்ரீராமஜெயந்தி |
| 29 | 11 | திங் | தச38-18 | ஆயி47-53 | சி47-53ம | நவக்கிரகசாந்தி செய்ய, ஆயுதம்பயிற்ற |
| 30 | 12 | செவ் | ஏகா43-45 | மக54-45 | சித்60 | சர்வமத்வ ஏகாதசி |

| | | | |
|---|---|---|---|
| சுக் சூரி | | செ | ராகு |
| புத குரு | 3-மேஷ சுக்<br>22-மிது செ<br>28-ரிஷப சுக்<br>29-மீன-புத | | |
| கே | சனி | | |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" POWER PRESS,
15, VENKATESA MAISTRY ST., MADRAS.


# ஸ்ரீமத் கம்பராமாயண

## வசன சங்கிரகம் (மூன்றாம் பதிப்பு)

(சப்தகாண்டங்கள் அடங்கியது.)

ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் ஆப்டோன் படம் ஆர்ட்பேப்பரில் போட்டு உள்ளே சேர்க்கப்பட்டிருப்பதோடு, மேல் காலிகோ பைண்டு முன் பக்கத்திலும் ஷை படம் மிக அழகாகப் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

மிக்க திருத்தங்களோடு உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது. விலை ரூபா 2.



☞ இதன் முதல் இரண்டு பதிப்புக்களும் மிக விரைவில் செலவாகி விட்டபடியால் இம்மூன்றாம் பதிப்பு இப்போது வெளிவந்துள்ளது. இப்பதிப்பிலும் சோற்பக் காப்பிகளே அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆதலின் இப்பதிப்பு புஸ்தகம் வேண்டியவர்கள் முன்னரே எழுதிப் பெற்றுக்கொள்க.

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விரித்துக் கூறும் இந்த இராமாயணமானது மிக்க புண்ணிய கதையென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதாலுண்டாம் பயன்கள் அளவிடற்கரியனவாம். இதனைப் பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உலகத்தில் விரும்பக் கூடிய பொருள்களெல்லாம் கைகூடும்; உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தைஅடையும் மார்க்கம் ஏற்படும்; இலக்குமி கடாக்ஷமுண்டாகும்.

இன்னும் இந்த இராமாயணத்தைப் பக்தியுடன் படித்து முடிக்கு
மிடங்களில் கலியாணம் முதலிய மங்களகாரியங்கள் நிறைவேறும்; புத்திர
பாக்கிய முண்டாகும்; பசு, பால், தானியம் முதலியன விருத்தியாகும்;
பில்லி, சூனியம், தீராதநோய், பூதபைசாச உபத்திரவங்கள் முதலியவை
நீங்கும்; பகை நீங்கும்; விஷஜெந்துக்கள் அணுகமாட்டா; பஞ்சம் நீங்கும்;
நல்ல மழை பெய்யும்; துக்கமான சம்பவங்கள் நீங்கி மிக்க ஆனந்தமுண்
டாகும். இவையெல்லாம் உண்டாவது நிச்சயம். இராமாயணம் படித்த
பற்பல இடங்களில் இப்பயன்கள் உண்டாகியிருக்கின்றன. இவற்றை ஒவ்
வொருவரும் அனுபவத்திலும் உணர்ந்துகொள்ளலாம்.

இத்தகைய மகாமகிமைவாய்ந்த இராமாயணம் பெரும்பான்மையும் கம்
பர் இராமாயணச் செய்யுட்களின் போக்கைத் தழுவியே தெள்ளிய நடை
யில் எழுதப் பெற்றிருக்கின்றது. இராமாயண பாராயணஞ்செய்ய விரும்பு
வோரும், சாதாரணமாக இராமர் கதையைப் படித்துணர விரும்புவோரும்.
வித்தியார்த்திகளாகிய மாணவர்கள், மாணவிகள், மற்றைய ஆண்மக்கள்
பெண்மக்கள் முதலிய எல்லோரும் இதனை எளிதில் படித்துணரலாம்.

# மலையை விழுங்கிய மகாதேவன் கதை

படிக்கப் படிக்கச் சிரிப்பையுண்டாக்குவது. அளவற்ற ஆனந்தந் தருவது. அறிவை வளர்ப்பது. சகலரும் வாசிக்கத்தகுந்தது. விலை அணா 6.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# மர்மங்கள் வெளியாய்விட்டன !

# எதன் மர்மங்கள் ?

# மணவாழ்க்கையின் மர்மங்கள்

ஏழைகளிடம் பணம் பறிக்கும் பொருட்டுப் பற்பலவிதமாய் ஏமாற்றி எழுதப்படும் பழிப்புக்கிடமான நூல்போலன்று இது. தகுந்த ஆங்கில, ஆயுர் வேத, யூனானி மேற்கோள்களைக்கொண்டு, பார்க்கப் பார்க்கக் கண்ணைப்பறிக் கும் பற்பல அழகிய உருவப்படங்களுடன் மேலோரின் குடும்பவாழ்க்கையின் சாஸ்திரோக்தம்போல் எழுதப்பட்டிருக்கும் குடும்ப ரகஸ்ய இன்ப நூலாகும். இதைக் கண்ணால் காண்பதே பாக்கியம்; கையி லெடுப்பதே போக்கியம் மிக அழுத்தமான காகிதத்தில் அதிக அழகாக அச்சிட்டுப் பளபளப்புடன் சேர்த்தியாக பைண்டு செய்யப்பட்டிருக்கும் கனதியான கிரந்தமாகும். இது வரை முதற்பதிப்பும் இரண்டாம் பதிப்பின் ஏராளமான பிரதிகளும் விலை யாய்விட்டன. எஞ்சி நிற்பவை கொஞ்சமே! கையிலெடுத்தவர் ஒருபோதும் கீழே வைக்க மனந்துணியார். இன்றே எழுதுங்கள்! பிந்தினவருக்குப் பிரதி கிடைப்பது அரிதாய்விடும். முதன்முதல் எம்மால் வெளியிடப்பட்ட "கோகீ கோககோலம்" என்னும் நூலின் திருத்திய விரிநூலாகிய இம் "மண வாழ்க்கையின் மர்மங்கள்" விலை ரூபா 2—4—0 தான். வி. பி. சார்ஜ் வேறு.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கர்ப்ப சாஸ்திரம் | 1 | 8 | 0 | சரீர மர்மசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| சதிபதிகளின் மர்மம் | 1 | 0 | 0 | மதனரதி ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்திரீபுருஷ ரகசியம் | 1 | 8 | 0 | ரதிமதனசிருங்காரரஹஸ்யம் | 1 | 0 | 0 |

## வடுவூர். கே. துரைசாமி ஐயங்கார் எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பூர்ண சந்திரோதயம் 1,2,3,4 ரூ | 7 | 8 | சௌந்தர கோகிலம் 2 பாகம் ரூ. | 3 | 12 |
| மாயாவிநோதபரதேசி 1, 2 | 5 | 0 | வஸந்த மல்லிகா | 1 | 8 |
| மதனகல்யாணி 1,2,3 | 4 | 8 | வித்யாஸாகரர் | 1 | 4 |
| கும்பகோணம் வக்கீல் 1,2 | 3 | 0 | வசந்தகோகிலம் | 1 | 0 |
| மேனகா 1,2 | 3 | 0 | திவான் லொடபடசிங் பகதூர் | 0 | 12 |
| விலாஸவதி 1,2 | 3 | 0 | திலோத்தமா | 0 | 12 |
| கனகாம்புஜம் 1, 2 பாகம் | 2 | 12 | மங்கையர்பகட்டு | 0 | 12 |
| பாலாமணி | 2 | 8 | மாணிக்கவாசகர் | 0 | 8 |

## தி. ம. பொன்னுசாமிப்பிள்ளை எழுதியவை.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| கமலாக்ஷி | 1 | 12 | ஞானசம்பந்தம் | 1 | 4 |
| ஞானபிரகாசம் | 1 | 8 | சிவஞானம் | 1 | 4 |
| ஞானாம்பிகை | 1 | 8 | விஜயசுந்தரம் | 2 | 0 |

## ஜெ. ஆர். ரங்கராஜு எழுதியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விஜயராகவன் | ரூ. 1 | 0 | மோஹனசுந்தரம் | ரூ. 0 | 12 |
| இராஜேந்திரன் | 1 | 0 | ஆனந்தகிருஷ்ணன் | 0 | 12 |
| இராஜாம்பாள் | 0 | 12 | வரதராஜன் 2-பாகம் | 2 | 0 |
| சந்திரகாந்தா | 0 | 12 | ஜெயரங்கன் அச்சில் | | |

விலாசம்:—ஆரியன் புத்தகசாலை, 19, தாண்டவராய முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

உண்ணும் உணவிற்கு ஜீரணதாரமாயுள்ளது எது?

முதல்தரமான—A Quality

# பெருங்காயம்.

அநேகர் உணவை, இனிமையும்படுத்தி ஜீரணிக்கவும் செய்யும் நல்ல பெருங்காயம் கிடைப்பது அரிதா யிருக்கின்றதென்றும், அதில் உயர்ந்ததை தயாரித்துப் பலருக்கும் உபயோகமாகும்படி வியாபாரஞ் செய்யவேண்டு மென்றும் எங்களைக் கேட்டுக்கொண்டபடியால், இப்போது மேலான பெருங் காயம் விற்பனைக்குச் சித்தப்படுத்தி வைத்திருக்கிறோம். இந்தப் பெருங் காயம் உயர்ந்ததாயும், வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயும், விலை சரசமாயும் நம்மிடத்தில் கிடைக்கும்.

வேண்டுவோர்கள் தெரிவித்து வரவழைத்துக்கொள்ளலாம்.

1-இராத்தல் அல்லது 1-பவுண்ட் ரூ. 2. }
½-இராத்தல் ரூபா 1-1-0. } தபாற்கூலி வேறு.

# புத்திர சந்தான எண்ணெய்.



ஆண்மலடு சொன்னாலும் சொல்ல லாகும்
அப்பனே பெண்மலடு யாரு மில்லை
ஏன்மலடாய்ப் போவதென்று கேட்பா யாகில்
இயம்புவேன் கருக்குழியில் சோரி சேர்ந்தால்
ஊன்மிகுந்தால் புழுதரித்தால் உதிரங் கெட்டால்
ஓங்கார பிரணவத்தில் வாயு சேர்ந்தால்
தான்மதத்து விபரீதச் சேர்க்கைசெய்தால்
தலையாட்டுப் பேய்பிணியால் தரியாதென்னே.

ஸ்திரீகளின் கருக்குழியினிடத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து விடுவதினாலும், விபரீதச் சேர்க்கையாலும், கருக்குழியினிடத்தில் சதைவளர்ந்து சொ றிபற்றி இரத்தங் கட்டியிருப்பதாலும், கருக்குழி மதத்துக் கொழுத்திருப்பதாலும், மூலச்சுழியில் வாயு பித்தம் தங்கி யிருப்பதனாலும் கரு, தரிக்காது.

இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப் பிட்டால் இது கருக்குழியிலிருக்கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறுமாதத்திலேயே கரு தரிக்கும்படி செய்யும். இது அனுபவ மான எண்ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்குக் கரு தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீ ரென்று உடைந்துபோவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெ யால் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கரு தரிக்கும். இதன் விலை ரூபா 2.


# பிளாக் பர்ட் பௌண்டன் பேனா.

விலை  3—8—0

இது பெயர்பெற்ற ஸ்வான் பேனா செய்யும் மேபிடான் கம்பெனியாரால் செய்யப்பட்ட நம்பிக்கையுள்ள உயர்ந்த மாதிரி பிளாக் பர்ட் பேனா.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

## தனித்தனி ரப்பர் இங்கிலீஷ் எழுத்துப்பெட்டி.




இந்த ரப்பர் எழுத்துப் பெட்டி ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டியது. ஏனெனில் அச்சடிக்க முடியாத சில்லறை வேலைகளை இதனால் முடிக்கலாம். அதுவுமல்லாமல் கார்டுகளிலும், கவர்களின்பேரிலும், கடிதங்களின்பேரிலும் அச்சடிக்கவும், இன்னும் அநேக சிறிய வேலைகளுக்கும் இது வெகு அநுகூலமானது. 1-வது A. B. C. D. முதலிய எழுத்துக்கள் ஒவ்வொன்றிலும் 3-எழுத்துக்களும், 1-செட் எண்களும் கூடிய 120 - எழுத்துக்கள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபா 1.

2-வது A. B. C. D. முதலிய ஒவ்வொரு எழுத்திலும் 6 - எழுத்துக்களும் எண்களும் கூடிய 250 - எழுத்துக்கள் அடங்கிய பெட்டி 1-க்கு விலை ரூபா 2—4—0

3-வது ஷை 300-எழுத்துக்கள் அடங்கியது விலை ரூபா 2—12—0

இவ்வெழுத்துப்பெட்டியுடன் பேட், சிராவணம், எழுத்துக்களை அடிக்கிக்கொள்ளக் கம்போஸ் ஸ்டிக் ஆகிய 3 சாமான்கள் அனுப்பப்படும்.

**விலாசம்:—தனலட்சுமி கம்பெனி தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

## Wanted எலிகளின் தொந்தரவு நீங்கிவிடும். Agents.

எலிகள்தான் பிளேக் முதலான தொத்து வியாதிகளுக்குக் காரணமாயிருப்பதால் எலிகளை உங்கள் வீட்டை விட்டு விரட்டவேண்டிய தவசியமல்லவா? "எலிப்ட்" என்னும் மருந்து இருக்கிற கட்டிடத்தில் எலிகள் வருகிறதில்லை. ஒருமுறை பரீக்ஷியுங்கள். டின் 1-க்கு அணா 12-தான்.

மேஸ்மேரிக் ஆயில். இந்த ஒரே மருந்து அநேக வியாதிகளைப் போக்கடிக்கின்றது. தலைவலி, கீல்பிடிப்பு, வாதம், இருமல், எல்லாவித ஜுரங்கள், பல்வலி, வயிற்றுவலி முதலிய வியாதிகளுக்கு கைகண்டமருந்து. ஒவ்வொரு வீட்டிலு மிருக்கவேண்டிய தவசியம். புட்டி 1-க்கு ரூபா 1.

ராமய்யா அன்டு சன்ஸ்,
எலக்ட்ரோ கெமிக்கல் ஓர்க்ஸ், வீரவநல்லூர். S. I. R.

---

# சூக்ஷ்ம சக்திகள்

## ஹிப்னடிஸம், மேஸ்மேரிஸம்

**அற்புதங்கள்! தெளிவான பாடங்கள்!! சரியான முறைகள்!!**

மனிதனிடத்து மறைந்து கிடக்கும் அபூர்வசக்திகளையும், ஆச்சரிய சக்திகளையும் நமது யோக நூல்களும் முறையிடுகின்றன. மேல்நாட்டாரும் அவ்வுண்மைகளை இப்போது ஒருவாறு உணர்ந்து வருகின்றனர். இந்த மனோவசிய இரகசியங்களை அடைவதற்கு ஓர் இராஜபாதை உண்டு. இதனை அடைந்தால், நாடும் பொருள்களையெல்லாம் நீர்பெற்று, மாறாத பெருவாழ்வு வாழலாம்.

**மானேஜர், மனோவசிய உண்மைச் சங்கம், திருநெல்வேலி.**

---

**சதிபதிகளின் மர்மம்** (அல்லது)
## மானிடரகசிய சாஸ்திரம்.

இதில் வசந்தனுக்கும் சுலோசனைவுக்கும், வினாவிடை தர்க்கங்களாகவே பெண்களைச் சந்தோஷிக்கச்செய்யும் விதமும், சிசு உற்பத்தி நேர்மையும் சிசுவை கவனிக்கவேண்டிய ஏற்பாடும் உண்மையான ஜாதிபேதங்களும், அவைகளின் லட்சணங்களும், ஆண் பெண் இருவர்களும் இன்புற்றிருக்கும் விதங்களும், இன்னஸ்திரீயை இன்னவர் விவாகம் செய்யக்கூடும் என்றவிதமும், போகம் செய்யவேண்டிய நாளும், நாழிகையும், இன்னவிதமாக சுகிக்க வேண்டிய கிரமமும், ஆண் பெண் மலடு விவரங்களும், ருது காலங்களும், அவைகளின் பலாபலன்களும் மாதர்களுக்கு அமிர்தநிலை எந்த காலங்களில் எவ்விடத்தில் இருக்கும் என்பதையும். அதை எவ்விதமாய் நிலை பெயர்க்க வேண்டுமென்பதையும் பிரகஸ்பதிபகவான் தேவேந்திரனுக்கு அருளிச்செய்த உலோகாயத சம்மதமுமான விஷயங்கள் அமைந்துள்ளன. இன்னும் அகால சேர்க்கையால் வரும் கெடுதியும் இதைப்போன்ற அரியபெரிய மர்மங்கள் இந்நூலில் இனிய செந்தமிழ் நடையில் பிரசுரித்திருக்கின்றன. கண்களைக் கவரும் அழகிய சித்திரபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 100

**ஹிப்னடிஸம் மேஸ்மேரிஸ மெனும் (வாயுவேக)**
## மனோவசிய சாஸ்திரம்.

இதை வாசித்து இதில் சொல்லப்படும் விதிகளை அனுசரிப்பதால், இறந்த காலத்தில் நடந்தவைகளையும், பின்னே நடக்கப்போகின்றவைகளையும் உணரலாம். இறந்த நமது முன்னோர்களுடன் பேசலாம். பிறர் கண்களுக்குத் தோற்றாமல் மறைந்துகொள்ளலாம். பிறருக்கு நித்திரை வருவிக்கலாம். நோய்களை நீக்கலாம். ஞானதிருஷ்டிபெறலாம். விரலைக்காட்டிப் பிறரைத் தூங்கவைத்து அத்தூக்கத்தில் விநோதங்களை உண்டாக்கலாம். கீல்வாயுவுக்குச் சிகிச்சை செய்யலாம். அபினிப் பழக்கத்தை நிறுத்தலாம். பிராணாயாமம் செய்யலாம். நீட்டிய கையை முடக்காமலும் முடக்கிய கையை நீட்டாமலுமிருக்கும்படி செய்யலாம். மிருகங்களை வசியம் செய்யலாம். அனேகரை ஒரேமுறையில் தூங்கவைக்கலாம். தீக்குழி பாயலாம். தூரத்திலிருப்பவர்களை வரவழைக்கலாம். ஆஞ்சநேயர்வசியம் செய்யலாம். பிறர்மன வசியஞ் செய்யலாம். பிறர் துர்க்குணங்களைப் போக்கலாம். பொதுஜனவசியம் செய்யலாம். யோகசித்தி பெறலாம். பலவகை ஜெயம் பெறலாம். இன்னும் இதைப்போன்ற அனேக அதியற்புத காரியங்களை யெல்லாம் செய்யலாம். மானிடர்க்கு இவ்வளவு பயன்தரக்கூடிய புத்தகம் கிடைப்பது அரிதாகும். ரூபா 1-8.

**"ஆனந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

---

அதிகலாபம் அடையுங்கள்.
## 1000 தொழில் முறைகள்.



சலவை சோப், இங்கி, மெழுகுவர்த்தி, இரகசிய மை, ஐஸ் கிரீம், சர்பத்து, பன்னீர், வாசனை சோப், செயற்கை தங்கம், கண்ணாடியை ஒட்டும் சொலுஷன், பெப்பர்மெண்டு செயற்கை வெள்ளி, ரசம் பூசுதல், தங்ககிலிட், ரப்பர் ஸ்டாம்பு, சிகரெட்டு, தீப்பெட்டி, பிரஷ், வார்னிஷ், பிஸ்கோத்து, ரோமசம்ஹாரி, செண்டு, கூந்தல் தைலம், அத்தர், பற்பொடி, நரைமயிர் கருக்குந் தைலம், சாம்பிராணிவர்த்தி, அஞ்சனம் தேள்விஷ சஞ்சீவி, வீரியவிர்த்தி மாத்திரை, காகிதம், பென்சல், கலர் முதலிய 1000 அபூர்வ செய்முறைகள் அடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 4—0—0 வி. பி. வேறு. இதன் முழுவிபரப் புத்தகம் இனாம்! எமது கைத்தொழில் புத்தகங்களின் கேட்லாக் இனாம்!

**ஆர்ட் புக்ஸ் கம்பெனி, 14/2 திருச்சினாப்பள்ளி.**

## நேர்த்தியான பட்டு அங்கவஸ்திரங்கள்

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலம்.



நாகரீகமும் அழகும் வாய்ந்த இந்த நவீன பட்டுக்குட்டைகள் வேண்டியவர்கள் இச்சமயத்தில் நாளைப் போக்காமல் இன்றைக்கே எழுதுங்கள். ஸ்டாக்கிலிருப்பவை செலவழிந்து விட்டபின் 10 ரூபாய் கொடுத்தாலும் இப்படிப்பட்ட குட்டைகள் கிடைக்கமாட்டாவென்பது உண்மை! உண்மை!! மிகவும் நேர்த்தியான பளபளப்போடு கூடிய பட்டினால் செய்யப்பட்ட இக்குட்டைகளை சிரசில் சுற்றிக்கொள்ளலாம். கமிஸ், சட்டை, கோட் முதலிய சொக்காய்களின் மேல்போடும் துப்பட்டாக்களாகவும், ஸ்திரீகள் தாவணியாகவும், சிறு பெண்பிள்ளைகள் தாவணியாகவும் அங்கவஸ்திரமாகவும் உபயோகிக்கலாம். இவற்றில் பச்சை, வெள்ளை, சிவப்பு வெண் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மஞ்சள், மேகவர்ணம் முதலிய பல நிறங்கள் பொருந்தியவை உண்டு. வேண்டுவோர் இன்ன குட்டை வேண்டுமென்று கடிதம் எழுதி அனுப்பவும். விலை 1-க்கு ரூ. 2-8-0

## எலக்டிரிக் பாக்கெட் லைட்.




எலக்டிரிக் உதவியால் வெளிச்சத்தைத் தரக்கூடிய சிறந்த கைவிளக்கு இது. இதன் பிரகாசம் அதிகமாய் நீண்ட தூரம்வரை தெரியும். இந்த விளக்கு முழுதும் நிக்கல் பாலிஷ்செய்து சிறந்த பூதக் கண்ணாடி வைக்கப் பட்டுள்ளது. இது, சொக்காய் ஜேபியில் வைத்துக்கொள்ளக்கூடிய அவ்வளவு சிறிய அளவில் தயார் செய்யப்பட் டிருக்கிறது. இதில் வைக்கப்பட்டிருக்கும் பட்டன் குமிழை (படத்தில் காட்டியிருப்பதுபோல்) கீழுக்குவர நகர்த்தினால் விளக்கு, தானாய் எரியும்; மறுபடியும் மேலுக்கு அதை நகர்த்தினால் விளக்கு அணைந்துபோகும். நினைத்தபோது இதை எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளலாம். இது ஒவ்வொருவரிடத்திலும் அவசியம் இருக்கவேண்டிய கருவி. இவ்வளவு குறைந்தவிலையில் இவ்வித அருமையான விளக்கு இதுவரையிலும் வெளிவந்ததில்லை. பாட்ரியும் பல்பும் சேர்ந்த விளக்கு 1-க்கு ரூ. 2-8-0.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

---

இனாம்! சாரவிவேகி சதாநந்தன் சம்பாஷணை. இனாம்!!

கையில் கட்டும் அமெரிக்கன் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் சங்கிலியும், பௌண்டன் பேனா 1-ம் இனாம்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22-காரட் ரோல்டு கோல்டு புதுமாதிரி கைக்கெடியாரம் வாங்குகின்றவர்களுக்கு மேல் கண்ட இனாமுடன் அனுப்புவோம். 5 வருஷம் உத்திரவாதமென்று முத்திரையுள்ளது. எம்மாதிரி ஷேப் வேண்டுமானாலும் அனுப்புவோம். விலை ரூ. 6—8—0

தபால் சார்ஜ் வேறு.

லண்டன் வாட்ச் ஹவுஸ்,

(3) பார்க்டவுன், (P. O.) ஜு. சென்னை.

---

## நோய்க் கிடங்கொடேல்

நீங்கள் ஏன் தலைவலிகளுக்கு, ஜலதோஷம், பாரிசவாயு, கீல்வாயு முதலான பலவித நோய்களுக்கு உடன்பட்டு அவஸ்தைப்பட வேண்டும்? சூரியனைக்கண்ட பனிபோல் நோய் இருக்கிற இடம் தெரியாமல் இலகுவில் சொஸ்தப்படுத்துவது நிகரற்றதான

# Amrutanjan

## அமிருதாஞ்சன்

ஸர்வ நோய்களுக்கு ஸித்தௌஷதம்




அமிருதாஞ்சனம் அபூர்வமானமூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து.

விலை அணா 10

### படைத் தைலம்.

இது எல்லாவிதமான படைகளையும் போக்கும். விலை டப்பி 1-க்கு அணா 6.

### மோஹினி தைலம்.

ஸ்திரீ புருஷர் உபயோகிப்பதற்கு பிரசித்தமானது. 5 துலாம் எண்ணெய் சீசா 1-க்கு அணா 12.

### தந்த சூரணம்.

பல்துலக்க இது நல்ல தூள். பல் வியாதி, ஈறு வலி முதலிய நோய்கள் நீங்கும். விலை டப்பி ஒன்றுக்கு அணா 2.

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

அமிருதாஞ்சன் டிப்போ,

நெ. 6, தம்புசெட்டி தெரு, மதராஸ்.

## காந்தசத்தி வைத்திய சாஸ்திரம்.
(தமிழ்ப் பதிப்பு)


இப்புஸ்தகமானது, ஔஷதப் பிரயோகமின்றிப் பிணிகளைத் தீர்க்கும் சக்தியை யளிக்கக் கூடியது. ஒருவனை நித்திரை போன்ற மயக்கமடையச் செய்வதற்கு உரிய வழியையும், வியாதிகளையும், கெட்ட பழக்கங்களையும் தீர்த்துக் கொள்ளக்கூடிய பலவழிகளையும் தெரிவிக்கிறது. நரம்புகளினால் உண்டாகும் குத்துவலிகள், வயிற்றுவலி, மலச்சிக்கல், தலைவலி, நரம்புச்சுத்தல், பல்வலி, வர்தரோகம் முதலிய பல வியாதிகளையும் காந்த சத்தினால் தீர்க்கும் மார்க்கங்களெல்லாம் இதில் விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில் பல படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.



இதன் விலை ரூபா 1—0—0

## ஹஸ்தரேகை சாஸ்திரம்.

இது, யாவரும் தெரிந்துகொள்ளும்படியான செந்தமிழ் வசன நடையில் எழுதி சுமார் 200 படங்களுடன் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இதை வாசிக்கும் அனைவரும் தங்களுடைய விவாஹம், ஆயுள், இல்லறச்சுகம், சந்தானம், ஐசுவரியம், தேகசௌக்கியம், தனநஷ்டம், மரணம் முதலிய பல விஷயங்களையும் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். விலை ரூபா 2—0—0



இதே புஸ்தகம் இங்கிலீஷிலும் கிடைக்கும். விலை ரூபா 1—8—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167,
மதராஸ்.

---

## MAHABARATA—*As 12 per copy.*
## G. W. M. REYNOLDS'
BOLD TYPE EDITIONS.

| No. | Title | Vols. | Rs. | A. |
|---|---|---|---|---|
| 1. | Mysteries of the Court of London | 17 vols. | 17 | 0 |
| 2. | Joseph Wilmot | 8 ,, | 5 | 0 |
| 3. | Ellen Percy | 8 ,, | 5 | 0 |
| 4. | Mary Price | 8 ,, | 5 | 0 |
| 5. | Rye House Plot | 4 ,, | 3 | 0 |
| 6. | Young Duchess | 4 ,, | 3 | 0 |
| 7. | Rosa Lambert | 4 ,, | 3 | 0 |
| 8. | Loves of the Harem | 4 ,, | 3 | 0 |
| 9. | Margaret | 4 ,, | 3 | 0 |
| 10. | Massacre of Glencoe | 4 ,, | 3 | 0 |
| 11. | Virgin's Kiss | 4 ,, | 3 | 0 |
| 12. | Canonbury House | 3 ,, | 2 | 4 |
| 13. | Mysteries of Old London | 3 ,, | 2 | 4 |
| 14. | Pope Joan | 3 ,, | 1 | 12 |
| 15. | Soldier's Wife | 2 ,, | 1 | 8 |
| 16. | May Middleton | 2 vols. | 1 | 8 |
| 17. | Faust | 2 ,, | 1 | 8 |
| 18. | Leila | 2 ,, | 1 | 8 |
| 19. | Robert Macaire | 2 ,, | 1 | 4 |
| 20. | Mary Stuart | 2 ,, | 1 | 4 |
| 21. | Seamstress | | 1 | 0 |
| 22. | Alfred | | 1 | 0 |
| 23. | Grace Darling | | 0 | 12 |
| 24. | Young Fisherman | | 0 | 10 |
| 25. | Agnes | 9 ,, | 6 | 0 |
| 26. | Kenneth | 4 ,, | 3 | 0 |
| 27. | Omar | 4 ,, | 3 | 0 |
| 28. | Coral Island | 4 ,, | 3 | 0 |
| 29. | Wagner | 3 ,, | 1 | 12 |
| 30. | Master Timothy's Book Case | 3 ,, | 1 | 12 |
| 31. | Parricide | | 1 | 12 |
| 32. | Stories Told by a Gendarme | | 0 | 12 |
| 33. | Mysteries of Paris by *EUGENE SUE* | | 1 | 0 |

**SUPERIOR WATCH Co., P. B. No. 167, MADRAS.**

---

# பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?




முறையாய்ச் செய்த அயக்காந்த செந்தூரத்தைக் காட்டிலும், தேகபலத்தைத் தரும் ஔடதம்வேறொன்றுமில்லை.

விளம்பரம்.

இதைக் கணணுறும் கனவான்களே!

இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரேதடவையிலேயே இவற்றின் விசேட குணம் நன்கு விளங்கும்.

# இந்த லேகிய செந்தூரங்களால்

## நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு, கைகால் முடக்கு, ஒடுவாய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும்போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரிப்படத்தக்கவிதமாய் நீங்கிவிடும். பயங்காமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்தவிருத்தியைப் பெருக்கிப் பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத் தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதலிய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்தைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவை யென்பதை யாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி யுண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும். தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும். மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் எற்படும். இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாப்ஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் எற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகார்த்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளிமெடல், பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதாபத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்றதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரேதாம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, தாப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பலமிழந்தவர்கள் எண்ணிக்கையாக ஷை லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதாம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்தமடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி மருந்து சாப்பிடும் காலத்தில் வயிற்றிற்குத் துரோகம் செய்யாமல் சாப்பிடலாம். இவற்றைச் சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, தயிர், பால், கறி, மாக்கண்டரூப்பு, நெய் இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவாவேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவாலாம்.

இவ்வருமைவாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரே யானால் இவை தேகத்தில் ஊறஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். அவரும் அகக்களிப்போடு ஆஜானுபாஹுவாய் விளங்குவார். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் எககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் யாதொரு நோயுமில்லாமல் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதைப்பற்றி இன்னும் அதிகம் எழுதுதல் அனாவசியம். இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1-12-0. போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48-நாள் மருந்து வாங்குவோர்க்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 4.

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24-நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை ரூபா 1-12-0 தபாற்கூலி ரூபா 1-4-0.

48-நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5-8-0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

விலாசம்:—லேகியம் டிபோ,
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

---

# சர்வதேள் விஷ சஞ்சீவினி.

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்.)

பட்டவுடனே விஷம் பறக்கும்! அழுதவன் சிரிப்பான்!!

இதில் குணமில்லையென்று நிரூபிப்பவர்களுக்கு 100-ரூபாய் இனாம்.




நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பாய் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. எண்ணிறந்தோர் இதனால்சுகமடைந்திருப்பது பிரத்தியக்ஷ அனுபவமானதால் இதைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டியதில்லை. இது இரண்டுவித மருந்துகளடங்கியது. இதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற்கூலி அணா 4. டஜன் 1-க்கு ரூபா 5. எககாலத்தில் 3-பாக்கெட் வாங்குவோருக்குத் தபாற்கூலி இனாம். வியாரிகளுக்கு 100-க்கு 25 கமிஷன் கொடுக்கப்படும்.

---

**விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தாபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

# நாராயண சஞ்சீவித் தைலம்.

இத்தைலம் முழுவதும் பச்சிலைகளாலும், பசும்பால் முதலிய சிரேஷ்டமான வஸ்துக்களாலும் ஆயுர்வேத முறைப்படி மிகப் பரிசுத்தமாக தயார் செய்யப்பட்டது. இத்தைலத்தில் ஸ்நானம் செய்வதினால் தலைவலி, ஒற்றைத் தலைவலி, மண்டையிடி, மண்டைக்குத்தல், கண் எரிச்சல், கண்களில் நீர் வடிதல், சாலேஸ்வரம், காதுநோய், தலைப்பாரம், அதிக வெய்யிலினால் உண்டாகும் சிரரோகங்கள், சரீரதாபம், மூளை கொதிப்பு முதலியவைகள் ஆச்சரியப்படும் விதமாய்த்தீரும். தொடர்ச்சியாய்ச் செய்து வரும் இதன் ஸ்நானங்களினால் நரைத்தமயிர் கருத்துவிடும். மூளையைக் குளிரப்பண்ணி அறிவையும் திடச் சித்தத்தையும் உற்சாகத்தையும் உண்டுபண்ணுவதில் இது நிகரற்றது. சாராய சத்து முதலிய ஆங்கில வாசனைகள் இதில் சேர்க்கப்படவில்லை. சுத்தமான பச்சிலை கிழங்கு புல் முதலிய இந்தியவாசனைகளே சேர்க்கப்பட்டிருக்கின்றன. தினம், இதனைத் தலையில் தடவிவாரி வருவதினால் மயிர் கருப்புப்பட்டைபோல் பளபளப்பாகக் கருத்து ஆலம்விழுதுபோல் நீண்டு வளரும். இன்னும் இது, உஷ்ணத்தைத் தணித்து அபாரமான ஞாபக சக்தியை உண்டுபண்ணி முகவசீகரத்தை உண்டாக்கும். அதிக கஷ்டப்பட்டு வேலை செய்தவர்களும் வெகுதூரம் வழி நடந்தவர்களும் படுக்கும்போது இதில் சிறிது தைலத்தை உள்ளங்கை உள்ளங்கால்களில் தேய்த்துக்கொண்டால் கஷ்டங்கள் எல்லாம் நீக்கிக் காலையில் எழுந்திருக்கும்போது திரேகம் வெகு ஆரோக்கியமாய் இருக்கும். 5 பலம் டின் 1-க்கு ரூபா 1. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.



## ஜி. கியூர் வெள்ளை என்னும்
## கள்ள நோயை 3 தினத்தில் குணப்படுத்தும் மருந்து.

ஆடவர், பல மாதரிடத்தும், வேசியரிடத்தும், பிணியாளரோடும் சம்பந்தப் படுவதினாலும், ஓயாத சிற்றின்ப வனுபோகத்தில் பிரவேசிப்பதாலும் மூலத்தில் அக்கினிகொண்டு, தாது கெட்டு, பிரமேகங்கள், நீரடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, வெட்டை, கிரந்தி, சூலை, அரையாப்பு, பவுத்திர முதலியவைகள் அவர்க்கு உண்டாகின்றன. அவைகளில் முக்கியமாகிய இரத்தப் பிரமியம், நீர்க்கடுப்பு, நீர்த்தாரை யெரிவு, வெள்ளை, வெட்டை இவைகளுக்கு இதுவே மிகவும் அனுபோகமான மருந்து என்பது உண்மை. இதில் பேதி முதலிய கெட்ட குணங்கள் இல்லை, பத்தியமில்லை. இதை உபயோகிக்கும் விபரப் பத்திரிகை மருந்துடன் அனுப்பப்படும். புட்டி 1-க்கு ரூபா 1.

## கண்நோய் மருந்து.

இது கண் நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல், மங்கல், அந்திமாலை, பீளைகட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும், ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போட வேண்டியதில்லை. புட்டி 1-க்கு அணா 8.



விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்



# கஸ்தூரி மாத்திரை.

சரீரமானது யாதொரு அபாயத்தையும் அடையாதிருக்க விரும்புவோர் பிரதிதினமும் ஆகாரத்திற்குப்பின் தாம்பூலத்துடனாவது தனியாக வாவது இதைச் சாப்பிட்டு வந்தால் இது தந்த நோய்களைத் தடுத்தும், அஜீரணம் பித்தவாய்வு, ஜலதோஷம் இவைகளைக் கண்டித்தும், ஜீரண சக்தியை உண்டாக்கி வாயிலுள்ள அசுத்த நாற்றத்தைப் போக்கி வாய்ப்புண் முதலியவைகளைத் தடுத்தும் சுகமுறச் செய்யும். கர்ப்ப ஸ்திரீகள் இதனை உபயோகித்தால் பிரசவகாலத்தில் உண்டாகும் ஜன்னி முதலிய ரோகங்களினின்றும் தப்பித்துக்கொள்ளுவார்கள்.

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத் தோர்க்கும் உண்டாகும் ஈளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜலதோஷம் முதலியவைகளுக்கு வயதுக்குத் தக்கபடி இதில் ஒன்று முதல் 4- மாத்திரைகள் கொடுக்கச் சுதமுண்டாகும். இது சர்வகுடும்பங்களிலும் இருக்கவேண்டிய முக்கிய ஔஷதம். இதன் விலை புட்டி 1-க்கு அணா 12.



## காப் கியூர் என்னும் க்ஷய அரி.

கப இருமல், இரைப்பு, அல்லது மந்தகாசம், க்ஷயம், சளி இருமல், கக்குவாய் இருமல், பெருத்த இருமல், தொண்டை நோய், சுவாசகாசம், கடினமான ஜலதோஷம், அபாயமான ஈழை இருமல், தொண்டையெரிச்சல், தொண்டைக்கரகரப்பு, இருமலினால் தூக்கம் பிடியாமை, குளிர்ச்சியான வஸ்துவைச் சாப்பிடுகிறதினாலும் பனியில் நனைவதினாலும் உண்டாகும் சாதாரண இருமல் முதலான வியாதிகளை நாலு தினத்தில் இது கண்டித்துக் கோழையை வெளியில் தள்ளி நன்றாய் அவ்வியாதிகொண்டிருந்தவரை தூங்கச்செய்யும். புட்டி 1க்கு விலை ரூபா 1.

ஐந்தரை முழ நீளம் இரண்டரை முழ அகலமுள்ள

## சர்வமேக நிவாரணத் தைலம்.

இந்தப் பிரசித்திபெற்ற இராஜசஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டுவேளைகளிலும் 10 நாட்கள்வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேகரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், துடைவாழை படைகள், நகக்கணு நோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சுபோல்போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுகமாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக்கூடியதுமாகிய உண்மையான மருந்து. இதன் விலை ரூபா 1-8-0.




விலாசம்:- தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்,

# சிவப்பிரகாச பல் பொடி.



இந்தச் சிவப்பிரகாச பல் பொடி மற்ற இதர பல் பொடிகளைப் போலிராமல், அதிக சுகந்தமாகவும் பல் வலி, பல்லில் சொத்தை ஈறு வளர்ந்திருத்தல், வாய்ரணம், வாய்நாற்றம் பல்லாட்டம் முதலிய வியாதிகளை நீக்குவது மல்லாமல், பல் நன்ருய்த் துலங்கும்படி செய்யும். வாயில் சதா கமகம வென்னும் மணத்தை உண்டாக்கிக்கொண் டிருக்கும். ஒரு மாதத்திற்கு உபயோகிக்கக் கூடிய பல்பொடி டப்பி 1-க்கு விலை அணு 2.


6-டப்பிகள் விலை அணு 10.

## நாக்குப் பூச்சியை நாசமாக்கும் பில்லை.

இந்த பில்லைகள் ஒரு வருடத்துக் குழந்தைகட்கு அறை பில்லையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 பில்லைகளும் கொடுத்தால் வயிற்றிலுள்ள சிறுகிருமிகள் யாவற்றும் பந்து பந்தாய் வந்துவிடும். 8-பில்லைகள் விலை அணு 6.

# அயத்தங்கத் திராவகம்.

மித்திரர்களே! இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாகக் கண்டிக்கக்கூடியது. இதை அநேக ஆயிரக்கணக்கான ஜனங்கள் உபயோகித்துச் சந்தோஷிக்கின்றனர். வியாதியினுலாவது வேறு எந்தக் காரணத்தினுலாவது இளைத்துப்போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பலவிர்த்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். ஆங்கிலேய முறைப்படி தயாரிக்கப்பட்ட அருமையான மருந்து. சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும்., இருமல் நோய்கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தையடைவார்கள். இதனுல் உண்டாகக்கூடிய அநேக குணங்களில் முக்யமான சிலவற்றை இங்கே குறிக்கிறேம்.



இது, நரைத்த மயிரைக் கறுப்பாக்கும், உஷ்ணத்தினுலாவது, புழுவெட்டினுலாவது மயிர் உதிர்வதை நிறுத்தும்; இதனுல் நீர் வியாதிகள் தீரும். கண்ணெரிச்சல், கைகால் காந்தல் இவை தீரும். இன்னும் இது முகவசீகரத்தை உண்டாக்கும். தேக அசதியை யோட்டும். ஜீரண சக்தியையும், நல்ல பசியையும் உண்டாக்கும். மனதை அதிக உற்சாகப்படுத்தும், நரம்புகளுக்கு அதிக வலுவைத் தரும். தேகத்தில் நல்ல இரத்தத்தைச் சுரப்பிக்கும். க்ஷயரோகத்தை க்ஷணத்தில் தீர்க்கும். வாத பித்த சிலேத்துமங்களாலுண்டாகும் ரோகங்களை நிவர்த்திக்கும். சத்த தாதுக்களுக்கும் நல்ல பலத்தைத் தரும். மூலச்சூடு மூலவாய்வு மலச்சிக்கல் ஆகியவை தீரும்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைவதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும்பக்ஷத்தில் வியாதி என்பதே அம்மனிதனின் நிழலைக்கூட அணுகாது அவனுடைய தேகம் வஜ்ஜிரமேயாகும். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது. 20-நாள் மருந்து ரூ. 1. 40-நாள் மருந்து ரூபா 1-12-0.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

# சோடாவாட்டர் பவுடர்.

வயிற்று நோயிருப்பவர்களுக்கும் ஜீரணசக்தி யில்லாதிருப்பவர்களுக்கும் இது நல்லது. ஒரு ஆழாக்கு ஜலத்தில் 3-சிட்டிகை சோடவாட்டர் பவுடர் போட்டால் பொசபொசவென்று பொங்கும். அதை உடனே சாப்பிடவும். ஏப்பம் வரும். உடனே வயிற்றுநோவு நின்றுவிடும். புட்டி 1-க்கு அணு 6.




# யூகலிப்டஸ் ஆயில்.

(சுத்தமான நீலகிரித் தைலம்.)


வைத்தியத்தில் கைதேர்ந்த ஒரு அநுபோக வைத்தியரால் செய்யப்பட்ட இந்தத் தைலம் வாந்திபேதி, பிளேக்வியாதி, தேள் முதலிய விஷ ஜந்துக்களின் கடி, கத்தி வகையரு, வெட்டுக்காயங்கள், நரம்புச் சுளுக்குகள், தீப் புண்கள், வெந்நீர்பட்டு வெந்த புண்கள், பிளவைகள், புரைபோன இரணங்கள், இன்புளுவென்ஸா, மலேரியா முதலிய சகலவித சுரங்கள், இருமல், கக்குவாய் இருமல், வாய்வுபிடிப்பு, குடைச்சல், வாய்வினுல் உண்டாகும் கொடூரமான பல்வலி, தலைவலி, ஒற்றைத் தலைவலி, கண் எரிச்சல், கண் கட்டி. முதலிய நோய்களுக்குக் கைகண்ட ஔஷதம்.

1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணு 4.

1 ,, 1-டஜன் (12) க்கு ரூ. 2—8—0

# நரைமயிர் கருக்குந் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும் பசுமை நிறமாகவும் சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின்றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்குமுன்பு இருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும். மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசியபிறகு முகலட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்றசிறந்த தைலம் வேறெங்கும் கிடையாது. வேறு எந்த விதமான கெட்ட குணங்களும் இதில் இல்லை. இந்த அருமையான தைலத்திற்குக் கிடைத்திருக்கும் கனவான்களுடைய சர்டிபிகேட்டுகளைக் கணக்கிடல் முடியாது. இதை உபயோகிக்கும் விதம் பார்சலோடு தெரிவிக்கப்படும். விலை ரூபா 1.





# கூந்தல் வளரும் துளி.

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காயெண்ணெயில் கலந்து பிரதிதினம் மயிருக்குப் பூசிவந்தால் கூந்தலானது ஆலம் விழுது போல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது; வழுக்கைவிழுந்த இடத்திலும் மயிர் முளைக்கும்.

புட்டி 1-க்கு விலை அணு 12.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி, நெ, 167, மதராஸ்,

## சீதபேதி (டிசென்டரி) பவுடர்.



இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமுங் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல்,மூலக்கடுப்பு அடிவயிற்றுநோய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இது அவற்றைத் தப்பாமல் கண்டிக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8.



## கர்ணபிந்து.

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கேளாதிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டுவர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு அணா 4.

வி. பி. தபாற்கூலி பிரத்தியேகம்.

## சர்வபடை சம்மாரன்.



சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டு பண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். புட்டி 1-க்கு அணா 4.

## ஓட்டோ லீலா.



எப்போதும் நீங்காத மனோல்லாசத்தை உண்டாக்குவதில் இந்த வாசனைத் திரவியம் மிகவும் சிறந்தது. எல்லோருடைய மனதையும் பிரமிக்கச்செய்து பலர்க்கும் ஆனந்தத்தையும் இன்பத்தையும் தந்து இதற்கு நிகரான சுகந்த மணமுடைய சென்ட் வேறொன்றுமில்லையென்று ஒவ்வொருவரும் எண்ணும்படி செய்யவல்லது. இதில் ஆல்கஹால் சாராயம் முதலியவைகளின் சம்பந்தமே கிடையாது. இந்த நீங்காத வாசனைத் திரவத்தை உங்களுடைய கைக்குட்டையிலாவது சொக்காய்களின் புறங்களிலாவது தடவிக்கொண்டால் சிறந்த பல புஷ்ப ஜாதிகளின் வாசனை கமழும். ஒரு நந்தவனத்தின் மத்தியில் நீங்கள் இருந்தால், அங்கு நின்றும் உண்டாகும் சுகந்த மணத்தை எவ்வாறு அனுபவித்துச் சுகிப்பீர்களோ அதனினும் பதின்மடங்கு சுகந்தத்தை இந்த அத்தரை உபயோகிப்பதனால் அனுபவிப்பீர்களென்பது திண்ணம்.

கிரயம் புட்டி 1-க்கு அணா 10. ஷை பெரிய புட்டி 1-க்கு ரூபா 1.

## மயிர் போக்கும் சூரணம்.

இதில் கொஞ்ச மெடுத்துத் தண்ணீரில் குழைத்து உரோமமுள்ள விடத்தில்பூசி ஐந்து நிமிஷத்திற்குப் பிறகு ஒரு கடுதாசி கார்டினாலாவது, ஓலை நறுக்கினாலாவது வழித்தால் மேற்படி மருந்து தடவிய விடத்திலுள்ள உரோம முழுவதும் இலகுவாய் நீங்கி மழமழப்பாகிவிடும். வேக்காடு எரிச்சல் முதலாகிய உபத்திரவங்கள் உண்டாகா. புட்டி 1-க்கு அணா 8.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.


## எமது சொந்தப் பிரசுரங்கள்.

**இரத்தினபுரி இரகசியம் 2 பாகம்** 4 0 0

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும்,நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றிய நீதிகள் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன.

**அமராவதி 2 பாகம்** 4 0 0

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத்தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியையளிக்கும்.

**மஞ்சள் அறையின் மர்மம்** 1 8 0

இதுகாறும் அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இதனைப் படிப்பதால் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும்நாவல் இதுகாறும் எழுதப்படவில்லையென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமர்த்தியச் செயல்களும் குற்றத்தைக் கண்டுபிடிப்பவனுடைய சாமர்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றனவாகவே யிருக்கும். குற்றம்நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**கமலசேகரன்** 1 12 0

இது, ஓர் சுத்தவீரனுடைய அதிசயக்கதை. இக்கதாநாயகன் உயர்குலத்தில் பிறந்தவனே யெனினும் தன் சிறிய தந்தையின் மோசச்செயலால் அனாதைபோல் அன்னியரால்வளர்க்கப்படுவதும்,பிறகு தன் தந்தையர்களின் ஆவேசங்கள் இவனெதிரிற்றோன்றி இவனுக்கு வேண்டிய சமயங்களிலெல்லாம் உதவிசெய்வதும் இக்கதையில் மிக்க ஆச்சரியமாகவிருக்கும்.

**குணசுந்தரன்** 0 12 0

கீழ்மக்கள் சகவாசத்தால் தீமையே உண்டாகுமென்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. இதில் கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்குகள் ஆச்சரியத்தைக்கொடுக்கும்.

**தினகரசுந்தரி** 1 0 0

இதில்,இக்கதாநாயகி ஆண்வேடந்தரித்துத் தன் கணவனாகிய செல்வச் சீமானுடைய கோரச் செயலைக் கண்டுபிடிப்பது மிக்க வியப்பாயிருக்கும். அதிலும் இவன் மிக்க துஷ்டரான கள்ளரிடம் சிக்கிக்கொண்டு அவர்களைச் சாமர்த்தியமாய் எமாற்றிவிட்டுத் தப்பித்துக்கொண்டு வந்துவிடுவது மிக்க வியப்பாயிருக்கும்.

**நிமித்தியக்குறி சாஸ்திரம்** 0 2 0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## ஆனந்தலிங் 2 0 0

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதில் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தலிங்கின் அதிசயபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வி யறிவுடையோரு மாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையுமளிக்கும். 492-பக்கங்கள் கொண்டது; விலை ரூபா 2.

## கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்தகதை 0 5 0

கலியாணத்தில் தாலிகட்டுவதைக்கூட மறந்துவிடுவதுண்டா என்று சந்தேகப்படவேண்டாம். சில மௌட்டிகமான ஜனங்களிடத்தில் மெய்யாகவே இச்சம்பவம் நடந்திருக்கின்றது. அதை அனுசரித்தே இக்கதை எழுதப்பட்டிருக்கின்றது. இதைப் படிக்கப் படிக்க அடங்காச் சிரிப்புண்டாகும்.

## அங்கதன் 0 4 0

இச்சரித்திரம் இதிகாச ரத்நமாகிய இராமாயணத்தின்கண் இருப்பது; அறிவறிந்த மகவின் சுகுணங்களை இனிதெடுத்துக் காட்டவல்லது. இதில், அங்கதன் தூதுபோகுந் திறமும், எதிரியின் நயவஞ்சகப் பேச்சுக்கிணங்காமல் வந்த காரியத்திற் றிடமனதோடிருந்து, அவனது துர்ப்பலங்களை நிர்ப்பயமாய் எடுத்துரைக்குஞ் சாதுரியமும் படிப்பவர்க்குங் கேட்பவருக்கும் உற்சாகத்தையும் மனக்களிப்பையும் தரும்.

## சம்பந்தமூர்த்தி 0 7 0

இப்புத்தகம் சகோதர நேசத்தைப்பற்றிப் பேசும் அருமையானநாவல். இதில்,சம்பந்தமூர்த்தியென்னும் மூத்தவன் தன் அன்னையிடம் காட்டும் அன்பும், தன்மீது வீண்பழிசுமத்திய தன் தம்பியிடம் காட்டும்விசுவாசமும்,கடைசியில் தன் அன்னையின் மனத்திருப்திக்காகத் தன் தம்பி செய்த கொலைக் குற்றத்தைத் தான் ஏற்றுக்கொண்டு அவனை விடுவிக்கும் உதாரகுணமும் படிப்பவர்களுக்குப்பெரும் வியப்பை யுண்டாக்கும்.

## வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் 0 10 0

இது, எட்டு மாதுசிரோமணிகளின் வீரச்செயலை விளக்குவது. இதில் அவர்கள் கற்போடு சுத்தவீரரான ஆடவரும் அஞ்சி பிரமிக்கத்தக்க வீரத்தன்மை காட்டுவதும், அவர்களின் புத்தி சாதுரியமும், பிராணனைத் துரும்பாய் மதிக்கும் தைரியமும் உற்சாகத்தை உண்டு பண்ணும்.

## ஸ்ரீ ராமாயண ஓடம் 0 3 0

இந்த ஸ்ரீராமாயண ஓடம் எளிய நடையில்பாடி அச்சிடப்பட்டிருக்கிறது. இப்புத்தகத்தை யாவரும் வாங்கிப்படித்து எளிதில் ஆறுகாண்டங்களின் சரித்திரங்களையும் நன்குணர்ந்து சந்தோஷிக்கலாம்.

## பகவத்கீதா சங்கிரகம் 0 2 0

இது, பகவத்கீதை யென்னும் அரியநூலின் இரத்னச் சுருக்கம். தெளிவான தமிழில் எழுதப்பட்டுள்ளது.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

## பவளத்தீவு 2-பாகம் 3 0 0

இக்கதையில் ஒரு செல்வச் சீமான் பேராசையால் செய்யும் குற்றத்திற்காக அவன் சந்ததியார் கொடிய சாபத்தை யனுபவிப்பது யாவர்க்கும் மேலான படிப்பினையைக் கற்பிக்கும். இதில் வரும் ஒவ்வொரு ஆசாமியின் சரித்திரமும் அவரவர் தத்தமது நடக்கைகளுக்குத் தக்க பலனை முடிவில் அடைவதும் ஒவ்வொரு நேர்த்தியான நீதியைப் போதிக்கும். இக்கதை ஆரம்பமுதல் முடிவுவரை வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொண்டு மிகக் களிப்பை யளிக்கும். விலை ரூபா 3.

## அற்புத நவநீத ரம்பை 1 0 0

இதில், கதாநாயகி பருவகாலமடைந்து மணமின்றிச் சகல வித்தைகளிலும் புத்தி மீறின தன் தமையனை யழைத்துக்கொண்டு புரவியின்மீதேறி வனத்திற் சென்று வேட்டையாடி யிரவில் கானில் அவனுடன் துயில் செய்து பொழுதுவிடிந்தவுடன் விழித்தெழுந்து தமையனைக் காணாது பதறி அருகிலிருந்த வனங்களிற் புகுந்து அலைந்து தியங்குவது சோகரசமாயிருக்கும். பின்பு கேசரிமார்க்கம் பறந்து தனது தமையனை யெடுத்தேகிய பஞ்சமுக இராட்சதனை சம்மாரஞ்செய்வது பயங்கரமாயிருக்கும்.

## சண்டோபாக்கியானம் 0 6 0

இது புதிதாகச் செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட ஓர் உண்மைச் சிவபக்தனுடைய புண்ணிய சரிதை. பிரமோத்தர காண்டத்திலிருக்குங் கிளைக் கதைகளுள் ஒன்றாகும். சிவ ஸ்தோத்திரப் பாடல்களும், சோபமும் பக்தியும் நிறைந்த செய்யுட்களும், நீதிச் செய்யுட்களும் சேர்க்கப்பட்டு எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது.

## பீஷ்மவிஜயம் 0 10 0

பீஷ்மர், ஒப்புயர்வற்ற வீரர், ஸத்திய ஸந்தர், பிதுர்பக்தி வாய்ந்தவர், மகா நீதிமான், இராஜதந்திர நிபுணர், கடவுட்பக்தி வாய்ந்தயோகி—இத்தகைய மகானுடைய குணங்களெல்லாம் இச்சரித்திரத்தில் வெகு அழகாகச் சிறந்த நடையில் விளக்கியுள்ளன.

## தசாவதார மகிமை 0 6 0

உலகத்தில் தருமங்குறைந்து, அதருமம் தலை யெடுக்கும்போது, சாது ஜனங்களை ரக்ஷிக்கவும், அசாதுக்களை சிக்ஷிக்கவும் நான் அவதாரஞ் செய்கிறேன் என்று பகவான் கீதையில் கூறியபடி, தாம் எடுத்தருளிய அவதாரங்கள் பலவற்றிலும் சிறந்துள்ள "தசாவதாரங்களின் மகிமை" கள் செந்தமிழ் நடையில் விளக்கமாக இதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

## ஞானரத்தினம் 0 4 0

இது,வேதாந்தஞானத்தைப்பற்றிய சில சிந்தனைக்கட்டுரைகள் அடங்கியநூல்.

## கோமளவல்லி 0 8 0

இதில்,கோமளவல்லி அம்மாளுக்கும் சத்தியவல்லி அம்மாளுக்கும் நடந்த சக்களத்திப் போராட்டம் லீலாவதிக்கும் சுலோசனாவுக்கும் ஏற்பட்ட அக்கா தங்கை சக்களத்திப் போராட்டத்திற்கு அதிகமாயிருக்கும். கோமளவல்லியால் துரத்தப்பட்ட உத்தமி சத்தியவல்லி காளியம்மன் ஆலயத்திலிருந்த ராக்ஷசன் பிராணனை யடியோடு வாங்குவதும் இன்னும் அனேக சாமர்த்தியங்களும் விளங்கும்.

## கனகரத்தினம் 0 8 0

இஃதோரினிய நாவல். இதற்கொப்பான நாவல் இதுவரையில் வெளிவந்திராதென்பதுதிண்ணம். இதில் சோகரசம் இத்தன்மைத்தென நன்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

**இந்திராபாய்** 2 8 0

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலியயாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன்சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலைகளவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துகளிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்காரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையை யுண்டாக்கும்.

**தபால் கொள்ளைக்காரர்கள்** 0 14 0

இந்நாவலில் கல்வியும், சூக்குமபுத்தியும் அதோடு செல்வமுமுடையவன் உள்ளுக்குள்ளாகவேயிருந்து தபாலில்வரும் விலையுயர்ந்த பொருள்களைக் களவாடுவது அதியாச்சரியமாக விருக்கும். துப்பறிபவன் பன்முறை பிராணபத்தில் சிக்கி, அக் களவு நடக்கும் இரகசியவழியையும், கொலையைப்பற்றிய உளவையும் அறிந்து,கடைசியில் அக்கள்ளக்கூட்டத்தைப் பிடிப்பது அதிசயத்தை யுண்டாக்கும்.

**லோகநாயகி** 1 0 0

பண ஆசை எத்தகைய பெரும்பாதகத்தையும் செய்யத் தூண்டும் கொடிய பேய் என்பதும், அக்கிரமஸ்தரும், நம்பினவர்களுக்குத் துரோகம் செய்யும் பாதகரும் முடிவில் ஆண்டவனால் எப்படியும் தண்டிக்கப்படுவார்கள் என்பதும், நீதியும் சத்தியமு முடையோர் முதலில் கஷ்டத்தை யனுபவித்தாலும் முடிவில் பூரண நன்மையை யடைவார்கள் என்பதும், இக்கதையில் நன்கு நிரூபிக்கப்பட்டு வியப்பையும் உற்சாகத்தையும் அளிக்கும்.

**மதனாம்பாள் 2-பாகம்** 3 0 0

இதில், காளிங்கனாகிய லோகநாதன் என்னும் ஓர் நயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடுத்துக் கெடுத்தலும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக்கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்துவந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச்செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன்மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

**மதிசூதனன்** 0 10 0

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். இதில், படிக்கப் படிக்கப் பரமானந்தத்தைத் தரும் விகடங்கள் குருசிஷ்ய தர்க்கபாவனையாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**ஜீவகன்** 1 0 0

இது, பஞ்சகாவியங்களில் முதன்மைபெற்றதாகிய சீவகசிந்தாமணிக் கதையாம். எல்லாச் சரித்திரங்களினும் ஜீவகன் சரித்திரம் பெயர் பெற்றதென்பதைக் கற்றோர் யாவருமுணர்வர். ஆயினும், சிந்தாமணி பழைய செய்யுட் காவியமாகவும், கடின வுரையோடுகூடியதாகவு மிருப்பதால் அதிலுள்ள இனியகதையை யாவரும் படித்துணர்தல் அரிதாயிருந்து வந்தது. அக்குறை நீங்கவே இக்கதை எழுதப்பட்டிருக்கிறது.



**சுவர்ணாம்பாள்** 0 12 0

இதில், துப்பறிபவன் கதவிற்பட்டிருந்த ஒரு பெருவிரற்குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் அவனுடைய சூக்ஷ்ம அறிவும் சாமர்த்தியமும் நன்கு விளங்கும்.

**பூங்கோதை** 0 10 0

இதில், பூங்கோதையின் கற்புள்ள நடைக்கையும்,பிதாபக்தியும் எல்லாப் பெண்களுக்கும் நற்புத்திபுகட்டும். அக்கிரமஸ்தரைக் கடவுள் எப்படியும் தண்டிக்கிறார் என்பதும், உத்தமர்க்கு ஆச்சரியமான விதமாய் நல்ல க்ஷேமத்தை யளிக்கிறார் என்பதும் இக்கதையால் நன்கு நிரூபிக்கப் படுகின்றன.

**மின்சாரமாயவன்** 1 8 0

இதில், எலக்டிரிக் கண்ணன் பெரியண்ணன், ஸார்ஜெண்ட் கமலநாதன் இவர்களுடையபெருமை, சுந்தரபூபதி பிரபுவின் பணப்பெட்டிகள் களவாடப்படல், எலக்டிரிக்கண்ணன் பிச்சாண்டிபுரம் பிரயாணம்போவது, கமலநாதன் அதிக சாமர்த்தியசாலியாயிருந்தும் எலக்டிரிக் கண்ணனுக்கு ஐக்கியப்படல், ஜெயதேவியும் அவள் அத்தையும் இரத்னபுரியில் உலாவுதல், முதலியன வேடிக்கையான ஆச்சரியமாயிருக்கும்.

**விளையாட்டுச்சாமான் அல்லது விபரீதக்கொலை** 1 6 0

இக் கதையில் மூன்று அதிசயக் கொலைகள் நடக்கின்றன. குற்றத்தைச் செய்த ஆசாமிகள் மிக்க தந்திர சாமர்த்தியத்தோடு தங்கள் குற்றங்களைச் செய்கிறார்கள். அதனால் ஒரு நிரபராதி கைதுசெய்யப்படுகிறான். கடைசியில் துப்பறிபவனுடைய தைரியமும், துணிகரமும், புத்திசாலித்தனமுமான முயற்சிகளால் மிக்க சாமார்த்தியவான்களான குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படுவதும், நிரபராதி விடுவிக்கப்படுவதும் மிக்க அதிசயத்தை விளைவிக்கும்.

**பத்மாவனி** 0 14 0

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், ஒரு பெண்பிள்ளை தன் சாமர்த்தியத்தாலும் தைரியத்தாலும் அக்கள்வர் எண்ணங்களை நிறைவேற வொட்டாமல் செய்வதும், அவர்களின் குற்றங்களைக் கண்டுபிடிக்க ருசுவுகள் கண்டுபிடிப்பதும், ஒரு நிரபராதிமேல் வந்த அபாண்டமான குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறைமீட்பதும் படிக்கப் படிக்கச் சந்தோஷத்தை விளைவிக்கும்.

**மதனபூஷணம்** 1 0 0

இதில் குற்றவாளி,உயிரோடிருப்பவளை இறந்துவிட்டவளாகவும், இறந்துபோனவளை உயிரோடிருப்பவளாகவும், படித்தோர் நம்பும்படிசெய்வது மிக்க வியப்பை யுண்டாக்கும். அத்தகைய கள்ளனுடைய குற்றங்களைக் கண்டுபிடிக்கும் துப்பறிபவன் சாமர்த்தியத்தையும் படித்துப் பார்ப்பது மிக்க அவசியமானது.

**மலையாள பகவதி** 1 0 0

இது, அடங்கா நகப்பை யுண்டாக்கும் ஓர் அற்புத தமிழ்க்கதை. பேய், பிசாசு, பில்லி, சூனியம் முதலியவற்றின் விநோதங்களும், மாந்திரீகம், பேயாட்டு, கோடாங்கிக்கூத்து முதலிய ஜெகஜால மாயா விநோதங்களும், அண்டப்புளுகர், வண்டிப்புளுகர், வாக்கின்புளுகர், முதலிய சண்டப்பிரசண்டயுக சண்டமாருதக் கோடையிடிப் பெரும்புலித் திடீர்ப்புளுகராகிய பூசாரிகளின் மோசக் கூத்துக்களும், அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத்தக்க பல அற்புத விநோதங்களும், இதில் விரிவாகக் காணப்படும்.

## ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும், உபதேசங்களும் — 1 12 0

இதில், இம்மகானுடைய அற்புத சரித்திரம், ஈசுவரபக்தி, ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம், குருவின் தன்மை, மதத்தினியல்பு, முமூட்சுக்களின் பேதங்கள், ஈசுவரப்பிரீதி, சாதுசங்கம், வைராக்கியம், ஞானத்திற்கிடையூறுகள், பெண்ணாசை பொன்னாசை, அகங்காரம், ஆகாரம், நிஷ்டை, ஈசுவரகிருபை, சுயாநுபூதி நிலைமை, முத்தியின் தன்மை, கோட்பாடுகள், சித்தர் லக்ஷணம், சந்நியாசியின் லட்சியங்கள், மனிதர் வகுப்பு, கிருகஸ்தர்க்குரிய போதனை, சித்திகள், கர்மநியதி முதலிய அநேக அரிய விஷயங்களும், இன்னும் பல சிறந்த உபதேசங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இப்புத்தகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஆப்டோன் படமும், சுவாமி விவேகானந்தருடைய படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## கைவல்ய நவநீத வசனம் — 1 8 0

ஆன்மாக்கள், மாயையினின்றும் விடுபட்டு மோக்ஷசாதனத்தை அடையும்பொருட்டுக் கருணாநிதியாகிய கடவுள் அருளிய வேதத்தின் உட்பொருளைத் தழுவிப் பல மகான்கள் பல நூல்களை இயற்றியிருக்கின்றனர். அவற்றுள் ஸ்ரீமத் தாண்டவராய சுவாமிகள் இயற்றிய கைவல்ய நவநீதமும் ஒன்று. இது, எவரும் எளிதில் வாசித்துணரும்படி எம்மால் வசனமாக எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. இதனால் முத்திமார்க்கத்தை எவரும் நன்குணரலாம்.

## குசேலோபாக்கியான வசனம் — 1 0 0

இதில், குசேலர் மேல்கடலடைந்தது, வடமதுரைச் சிறப்பு, கடைவீதியின்சிறப்பு, அவந்திக்கடுத்த மலையுச்சியிலுள்ள பிராமணச் சேரியின் சிறப்பு, குசேலர் திருமணம், குசேலர் துவாரகைசேர்தல், ஸ்ரீ கண்ணனுடைய அந்தப்புரத்தின் சிறப்பு, கிருஷ்ணன் குசேலர் கொண்டுபோன அவலை வாங்கி உண்ணுதல், ஒருபிடி அவலுக்கு மேல் உண்ணலாகாதென்று உருக்குமணி கிருஷ்ணனைத் தடுத்தல், குசேலர் செல்வம் பெற்றுத் தமது நகரமடைந்தது, குசேலரை அவர் மனைவி உபசரித்துக் கொண்டாடுதல், குசேலர் விஷ்ணு தோத்திரஞ் செய்தல், முதலியன விளக்கமாக எழுதப்பெற்றிருக்கின்றன.

## மெய்க்காதலி — 0 8 0

இஃதோர் இனிய செந்தமிழ் நாவல். இதில் நட்பின் தன்மையும், தீச்செயலால் வருங் கேடுகளும், குணமுள்ள ஸ்திரீகள் கற்பைக்காப்பதும் இன்னும் பல விஷயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. கதாநாயகி தன் மணப்பந்தலிலிருந்து நள்ளிருளில் வெளிச்சென்று போய்க்கொண்டிருக்கும்போது அவள் புத்தி சாதுர்யத்தினால் ஒரு தூர்த்தனை ஏமாற்றித் தன் கற்பைக்காத்துக் கொள்ளுதலும், அவளுக்குக் கலியாணமாகின்றதும் மிகவும் வியப்பாயிருக்கும்.

## கற்கோட்டை — 2 0 0

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல்கொண்ட உத்தம ஸ்திரீகள் தம் காதலர் பொருட்டாய், எவ்வளவு வரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச் சக்தியுடையவர்களா யிருக்கிறார்களென்பதை நன்கு விளக்கும். நீதியைப் புகட்டும் ஓர் உயர்ந்த நூல். இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூபா 2.

---

**ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.**

## நளினசுந்தரி — 0 1[illegible] 0

இது, தேசாபிமானமும், ஜனாபிமானமும், மதாபிமானமும் நிறைந்து விளங்கும் இனியதோர் நாவல். இதில் வீரத்தன்மையும், விஸ்வாச குணமும் மிகுந்த வீரணத்தேவனது நடவடிக்கைகள் படிப்போர் மனதைப் பரவசப்படுத்தும். யானைக்காரனாகிய மகமத்கானுடைய ராட்சதயுத்தம் அதி விநோதமாயும் ஆச்சரியமாயுமிருக்கும்.

## சதானந்தர் — 1 4 0

ஒரு புருஷன் ஆய்ந்தோய்ந்து பாராது தன் மனைவியின்மீது வீண் சந்தேகங்கொள்ளுதலினால் அக்குடும்பம் இவ்வாறு சீர்கெட்டுத் துன்புறுமென்பதும், ஒரு குடும்பம் சண்டைச் சச்சரவின்றி, நித்திய சமாதானமாய் இனிது வாழ்வதற்கு அக் குடும்பத்தின் தலைவி எத்தகைய சாமர்த்தியமும், அன்பு பொறை யாதிய நற்குணங்களும், பெருந்தகைமையும் படைத்தவளா யிருக்க வேண்டுமென்பதும் இதில் நன்கு விளக்கிக்காட்டப்பட்டிருக்கின்றன.

## மனோன்மணி — 0 8 0

இஃதோ ரினிய கதை இதில்; மனோன்மணி அம்மாள் ஆண்வேடம் பூண்டு தன் மணாளனை மந்திரிகளுடன் தேடுவதும் அவளை ஆண் என்று மதித்துச் சில ராஜகுமாரத்திகள் ஒருவருக்கொருவர் சண்டையுடன் அந்த மனோன்மணி மேல் விழுவதும் மிக ஆச்சரியமாயிருக்கும்.

## துயராளன் கதை — 0 12 0

மோகவேணியின் விருத்தாந்தம், கம்மாளர்கள் கூட்டம், துயராளன் கள்ளரிடம் சிக்குதல், மோகவேணி பண்டாரத்தைக் காண்பது கல்யாணி துயராளனுக்குப் புத்திகூறல், விஸ்வகுலநேயன் துயராளனைக் கடலில் தள்ளுவது, பத்திராசலன் தைரியச் செயல்கள் நால்வர் பிரயாணப்படல், துயராளன் கப்பலில் வேலைக்கு அமர்தல், மோகவேணி கள்ளனிடம் துயராளனைத் தன் கணவர் இவர்தானென்று காண்பித்தது, துயராளன் விவாகத்திற்குப் பந்தல் சோடிக்கச்செய்வது மோகவேணி தனது பிதாவைக் கண்டு பாதம் பணிதல் முதலிய அநேக விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

## கீர்த்தி சிங்கன் — 0 [illegible] 0

இது கண்டிராஜன் கதை. இது நீதிகளடங்கிய சரித்திரம். பல பழமொழிகளுடனும் மேற்கோள்களுடனும் கூடியது.

## கண்ணன் பக்திரஸக் கீர்த்தனங்கள் — 0 3 0

## தேவசுந்தரி — 1 4 0

இஃதோர் மகாபதிவிரதையின் அரிய சரித்திரமாகும். இதில் தேவசுந்தரி, தனக்கு நேரிட்ட இக்கட்டைச் சகித்துக்கொண்டு தீயவழிகளி லிறங்கிய தன் புருஷனை ஆதரித்துக் கற்பின் தன்மையை விளக்கினது மிக்க வியப்பாயிருக்கும். இவள் கணவனுக்கு வரும் அநீத ஆபத்துகளை வெகு சாமர்த்தியமாய் நீக்கி அவனை நல்ல வழியில் கொண்டுவந்த பிறகு இவள் மேன்மேலும் விருத்தி யடைந்தது புகழத்தக்கது.

## வீரநாதன் — 0 12 0

தேவராஜூ, அவன் மனைவி இவர்களின் செய்கைகள், காணாமற்போன குழந்தை சிக்கினது, மலைமேல் நடக்கும் அதிசயங்கள், வீரநாதன் கன்னி [illegible] வு, மலைநாட்டுப் பாடசாலை இவர்களின் செய்கை, இரண்டாவது [illegible] விநோதம் முதலிய அற்புத வி[illegible]ள்ளன.

## ஜெகதல ஜெகஜ்ஜோ[illegible] — 0 8 0

---

**ஆனந்தபோதினி [illegible]ஸ், தபால்பெட்டி [illegible] மதராஸ்.**

**மாரீவி மாதவன் அல்லது ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக்களவு 2 பாகம்** 1 12 0

இந்நாவல், இன்பரசம் பொருந்தியது; படிக்கப்படிக்கப் பேரவா கொடுக்கக்கூடியது. தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவாராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது.

**அரிச்சந்திரன் சரிதை** 0 8 0

'சத்தியமே ஜயம்' என்பதோர் பழமொழி. இதனை இந்த அரிச்சந்திரன் சரிதை நன்கு வலியுறுத்தும். அம்மன்னவன் தன் வாய்மையை நிலைநிறுத்தத் தன் நாடு நகரமனைத்தையு மிழந்ததும், தன் மனைவியையும் மகனையும் விற்றதும், அவனும் ஓர் புலையனுக் கடிமையாயினதும், விசுவாமித்திர முனிவரியற்றிய கொடுமைகளெல்லாவற்றையும் மிக்க பொறுமையோடு ஏற்றுக்கொண்டதும் இதில் விளக்கப்பட்டிருக்கின்றன.

**பூலோக லக்ஷ்மி கதை** 0 10 0

பூலோக லக்ஷ்மியைக் கற்பழிக்கும் பொருட்டாக அரசனும் மந்திரியும் மோசஞ் செய்வதும், அன்னவர்களை வஞ்சித்து உபாயவல்லியம்மாள் அவளை ஓட்டிவிடுவதும், இன்னும் அநேக ஆச்சரியசெய்கைகளும் இதில் அடங்கியது.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| விகடவல்லி | 0 | 6 | தக்கன் | 0 | 6 |
| காமசேனரசிகா | 0 | 8 | மங்களேசுவரன் | 0 | 8 |
| அகட விகட விலாச விநோதக்கதை | 0 | 10 | சிசுபாலன் | 0 | 8 |
| கண்டிராஜா நாடகம் | 0 | 12 | சீமந்தனி | 0 | 8 |
| விநோத கதைத்திரட்டு | 0 | 5 | கர்ணன் சரிதை | 0 | 12 |
| மருமக்கள் துயரம் | 0 | 2 | மணவாளன் | 0 | 3 |
| ஸ்திரீ புருஷ ஜாதகத் திறவுகோல் | 0 | 8 | பரசுராமன் | 0 | 3 |
| இந்துலீகா | 0 | 8 | சத்தியவசனி | 0 | 4 |
| வீணைகானன் | 0 | 8 | கருணாகரரும் சத்திய சீலரும் | 0 | 8 |
| கமலமதி | 0 | 8 | நாலுமந்திரி கதை | 0 | 4 |
| நீலக்கொடி | 0 | 5 | செய்யுட்பாடத்திரட்டு | 0 | 4 |
| தோடகம் | 0 | 8 | கண்ணபிரான் | 0 | 4 |
| கிருஷ்ணன் தூது | 0 | 8 | விமலன் | 0 | 4 |
| நரிவிருத்தம் மூலமும் உரையும் | 0 | 4 | பூர்ணவல்லி | 0 | 6 |
| ஸ்ரீபாலன் | 0 | 10 | மேனகமீனுக்கி | 0 | 8 |
| உதயணன் | 0 | 8 | தத்வஸங்க்ரஹ ராமாயணம் (அச்சில்) | | |
| தசக்கிரீவன் | [illegible] | [illegible] | வைணவக் கொத்து | 0 | 8 |
| போஜ சரித்[illegible] | [illegible] | [illegible] | [illegible]கிருஷ்ணசைதன்யர் சரித்திரம் (அச்சில்) | | |

187478